உண்மையைத் தேடும் எழுத்தைவிட உயர்ந்த இலக்கியம் இல்லை

ஞானரதம்

புதுமை இலக்கிய மாத இதழ்

ஆசிரியர்: ஜெயகாந்தன்

நிர்வாக ஆசிரியர்: தேவ். சித்ரபாரதி

இந்த இதழ் ஆக்கம்: ந. முத்துசாமி

6 / 1970

ஆசிரியர் குழு:
ந. முத்துசாமி
ஒய். ஆர். கே. சர்மா
ஜியாவுடீன்
வையவன்
ஞானக்கூத்தன்

★

அட்டைப் படம்: T. K. பத்மினி

★

விலை 50 பைசா

அடுத்த இதழ் தயாரிப்பு: ஞானக்கூத்தன்

கதை கட்டுரைகளை, நிர்வாக ஆசிரியர், சக்தி இல்லம், சென்னை-36. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இந்த இதழில்

ஜெயகாந்தன்
வெ. சாமிநாதன்
சி. அ. சச்சிதானந்தம்
அசோகமித்திரன்
நீலகண்டன்
எம். சுப்ரமணியன்
வல்லிக்கண்ணன்
எஸ். வைதீஸ்வரன்
வீனஸ்
சி. சத்தியமூர்த்தி
“வளர்வோன்”

CONNEMARA PUBLIC
8-OCT 1970

நமக்குள்ளே....

ஞானரதம் இதோடு ஆறு இதழ்கள் வெளிவந்துள்ளன. இந்த ஆறு இதழ்களையும் ஒரு முறையில், ஒரு அமைப்பில் நடத்திப் பார்த்த நிறைவோடும்; நமது நண்பர்களும் வாசகர்களும் இதுவரை தெரிவித்து வந்துள்ள எதிர்பார்ப்புக்களை மதிப்பிட்டும், சில தீவிரமான மாற்றங்களை ஞான ரதம் மேற்கொள்கிறது.

முதலாவதாக அனைவரின் விருப்பத்திற்கும் ஏற்ப ஏழாவது இதழிலிருந்து ஞானரதத்தின் அளவு 'டெம்மி' அளவாக பெரிதாக்கப்படுகிறது. முதல் ஆறு இதழ்களை ஒரு வால்யூமாக முடித்துக் கொள்ளப்படுகிறது.

ஞானரதத்தின் பக்கங்கள், எல்லா ஞானரதப் பகுதிகளும் ஒரு இதழில் இடம் பெறும் முறையில் 100 பக்கங்களைக் கொண்டதாக அதிகரிக்கப்படுகிறது.

இனி புதிய பொலிவுடன், புதிய அமைப்பில் மாதம் தோறும் முதல் வாரத்தில் ஞானரதம் உங்கள் கரங்களில் இருக்கும். இதற்கான நிர்வாக ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்ற நல்ல செய்தியை உங்களுடன் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இதன் காரணமாக ஞானரதத்தின் விலை ஒரு ரூபாயாக ஏழாவது இதழ் முதல் மாற்றி அமைக்கப்படுகிறது.

ஆண்டுச் சந்தா ரூ. 10 ஆகவும், நன்கொடைச் சந்தா ரூ. 100 ஆகவும் மாற்றப்பட்டுள்ளது.

ஞானரதத்தின் ஸ்திரத் தன்மை கருதி, இந்த விலை மாற்றத்தை நமது வாசகர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்பது எங்களது நம்பிக்கை.

ஞானரதத்தின் வளர்ச்சியிலும், அதற்கொரு ஸ்திரத் தன்மை ஏற்படுத்தி வைக்க வேண்டுமென்பதிலும், அதைக் குறிப்பிட்ட தேதியில் வெளிவரச் செய்ய வேண்டுமென்பதிலும் இதுவரை விடாமல் ஊக்குவிப்பும், உற்சாகமும், ஒத்துழைப்பும் தந்து உதவிவரும் நமது எல்லா நண்பர்களுக்கும் ஞானரதத்தின் சார்பில் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை இரட்டிப்பாக்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பு,

தேவ. சித்திரபாரதி
நிர்வாக ஆசிரியர்

முன்னேட்டம்

ஒரு நல்ல எழுத்தாளரும் அருமை நண்பருமான கு. அழகிரிசாமி அண்மையில் அகால மரணமடைந்து விட்டார்.

நான் நண்பர் அழகிரிசாமியை நல்ல எழுத்தாளரும், நல்ல நண்பரும் என்று மட்டும்தான் கூறினேன். அவர் ஒரு நல்ல கணவராக, ஒரு நல்ல தகப்பனாக, ஒரு நல்ல குடும்பத் தலைவராக வாழ்ந்தாரா என்று எனக்குத் தெரியாது.

பெரிய சிந்தனைகளும், மகத்தான சாதனையுமுடைய மனிதர்கள் குடும்பம், வீடு, சுற்றம் என்கிற வட்டத்திலே வெற்றிகரமாகப் பெயர் எடுக்கவோ, சாதனை புரியவோ தவறிவிடுகிறார்கள். டால்ஸ்டாய்கூட அப்படித்தான் வாழ்ந்து செத்துப் போனார்.

ஆனால் கவுண்ட் லியோ டால்ஸ்டாய் பிறந்த குடும்பமும், வாழ்ந்த சமூகமும் வேறு விதமானது. எனினும்கூட இதே மாதிரியான ஒரு குற்றச்சாட்டினை பெர்னாட்ஷா அவர் மீது சுமத்தியதுண்டு.

தமிழ் இலக்கியக் குடும்பத்தில் கணிசமான அளவுக்குச் செல்வம் சேர்த்த ஒரு இலக்கிய வாரிசு

வுக்குப் பொறுப்பில்லாத மனிதராக வாழ்ந்திருக்கிறார் என்பது, அவர் மறைந்த பிறகு கூட இருக்கின்றவர்களுக்கு மனம் உறுத்துகிற அளவுக்கு இன்றைக்குத் தெரிகிறது. இந்த வெறும் உறுத்தலினால் என்ன பலன்? வெறும் புலப்பத்தினால் என்ன லாபம்? என்கின்ற உணர்ச்சியிலேதான் அழகிரிசாமியின் படத்தைப் போட்டுக் கருப்புக் கட்டம் கட்டி, நாலு வார்த்தை அனுதாபமாக எழுதிவிடுவதில் மட்டும் எனக்குச் சம்மதமில்லை. அது சரியுமில்லை.

செத்தாருக்கு அழுவதே நமது மரபாகிப் போய் விட்டது. எனவே நான் அழகிரிசாமிக்காக அழ மறுக்கிறேன். அந்த மரபினைச் சேர்ந்த ஒருவனாக மாறுவதில் நான் வெட்கமடைகிறேன்.

எனக்கு ஒன்று புரிகிறது. அழுகிறவனெல்லாம் ஒருவன்கூட இன்னொருவனுக்காக இதுவரை அழுததில்லை, இன்னொருவனுக்காக அழுகிற மனசு இன்னும் நமக்கு வரவில்லை. ஒவ்வொருவர் மரணத்திலும் ஒவ்வொருவனும் தன்னுடைய மரணத்தையே கண்டு அழுகிறான்.

மனித வர்க்கத்தின் அன்றாட வாழ்க்கையில் இதைவிட அசிங்கமானது வேறொன்றுமில்லை. வாழ்கிறவனின் உயிர்ப்பிலே, பங்கு பெற மறுக்கிறவர்கள், சாதிக்கிறவனின் சிறப்பிலே தங்களையும் இணைத்துக் கொள்ள தயக்கம் காட்டுகிறவர்கள், அழிவிலும், மரணத்திலும் மட்டும் தங்களது பலவீனத்தின்மூலம் ஒருமை காண்கிறார்கள்.

இதை நான் வாழ்க்கையில் எத்தனையோ சமயத்தில் கண்கூடாகக் கண்டு மனம் சலிப்படைந்திருக்கிறேன்.

அழகிரிசாமியின் எழுத்துக்களை எனது இருபத்தைந்தாண்டுகளாக நான் பரிச்சயம்கொண்டவன்.

14 வருஷங்களுக்குமுன்னல் அவரை நேரிடையாகக் கண்டு நட்பும் பெற்றிருக்கிறேன். இது அவ்வளவு முக்கியமில்லே. இன்னும் நான் உயிர்தரித்து உலவுகின்ற எஞ்சியநாட்கள் முழுதும்—இந்தப் 14 வருசங்களாக இருந்த நேரிடை பழக்கம், என்கின்ற அவ்வளவு முக்கியமற்ற விஷயம் நீங்கலாக — எப்பொழுதும்போல நான் அவருடன் பரிச்சயம் செய்து கொண்டிருப்பேன். இதுதான் ரொம்பவும் முக்கியம். இதற்கான காரியத்தை அவர் செய்து விட்டுப் போயிருக்கிருர்.

அழகிரிசாமி என்கிற ஐந்தடி ஏழு அங்குலம் உயரமுள்ள, சிறிதே தலே வழுக்கையான, ஒரு கை ஊனமான, சதா நேரமும் சிரிக்கின்ற முகமுள்ள அந்த மனிதன் என்கிற ஸ்தூலமான பொய்மை தான் இப்போதில்லே.

மற்றபடி அழகிரிசாமி என்கிற மனிதனின் முகம் தெரியாமல், அவரது 'திரிவேணி'யையும், 'சிரிக்கவில்லே'யையும். 'அழகம்மா'ளேயும் 'வெறும் நா'யையும், 'ராசா வந்துட்டாரு'வையும்நான் படித்து பரவசமுற்று, பாராட்டி, நினேந்து, நெகிழ்ந்திருக்கிறேன். அந்த அழகிரிசாமி, எனக்குத் தெரியாமல் எங்கேயோ மலேசியாவில் இருக்கிருர் என்று எல்லாரும் சொன்னர்களே, அந்த அழகிரிசாமி இப்போதும் இருக்கிருர் என்றே நான் நம்புகிறேன். இதுதான் ரொம்பவும் முக்கியமான அர்த்தமுள்ள விஷயம்.

ஆனல், அவர் மனேவிக்கும் அவர் பெற்ற மக்களுக்கும் இது மட்டும் போதாது என்பதனே நான் அறிவேன். அழகிரிசாமி என்கிற ஸ்தூல மனிதன் அவர்களுக்கு வேண்டும். அவர்களுக்கு அதுதான் ரொம்ப முக்கியமும்கூட. இதற்கு நான் என்ன செய்ய? யார்தான் என்ன செய்ய முடியும்? நம்முடைய பாராட்டுக்களோ, கருப்புக் கட்ட அனுதாபச் செய்திகளோ, அழகிரிசாமி என்கிற அந்த ஸ்தூல உருவத்தை அவர்களுக்கு ஈடு செய்ய முடி

யாது. அவர்களைப் பொறுத்தவரை அந்த ஸ்தூலப் அவ்வளவு சாதாரண விஷயமல்ல.

கடைசியாக அவரை நான் சந்தித்தது எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது.

சென்ற ஆண்டு இறுதியில் முன்பு ஒரு நாள் கிருஸ்தவ இலக்கிய சங்கத்தார் ஒய். எம். சி. ஏ மண்டபத்தில் ஒரு கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்; அன்று நாள் முழுதும் அவர் என்னோடு இருந்தார். அன்றைய என் பேச்சை அவர் வெகுவாகப் பாராட்டினார். நானும் அவரும் தனியாக உரையாடிக் கொண்டிருந்தபோது, என்னைச் சதா நேரமும் வேட்டையாடிக் கொண்டிருந்த மரண பயத்தைக் குறித்து நான் பேசினேன். அவர் எனக்குச் சமாதானங்கள் கூறினார்.

ஒரு முப்பத்தி ஐந்து வயதுக்குமேல் எல்லோருக்குமே இப்படி ஒரு பயம் வரும் என்றார். அப்போதுதான் ''அந்த உயிலின் மரணம்'' என்ற கதையை நான் எழுதியிருந்தேன். அதை அவர் வெகுவாகப் பாராட்டிவிட்டு, நம்மைப் போன்ற படைப்பாளிகளுக்கு என்ன பயம் வந்தாலும் அதிலும்கூட ஒரு லாபம் இருக்கிறது பார்த்தீர்களா? என்று சிரித்தார். அந்தக் கூட்டத்திலே நான் பேசும்போது சொன்னேன். என் எதிரே உட்கார்ந்திருந்த கும்பலில் அவரும் இருந்தார். ஒரு படைப்புக்கு எது வித்தாகிறது என்று கேட்டுவிட்டு, ஒரு படைப்பாளியின் பைத்தியக்கார எண்ணங்கள் எல்லாம்கூட வித்தாகும் என்று கூறினேன். நான் உதாரணத்துக்கு ஒன்றுசொன்னேன்.

இந்தக் கும்பலிலே உட்கார்ந்திருக்கும் எல்லோருமே ஏதோ ஒரு வரிசைக் கிரமத்திலே இந்த உலகத்துக்கு வந்திருக்கிறோம். அந்த வரிசைக் கிரமத்திற்கு முற்றிலும் புறம்பான வரிசையிலே இங்கிருந்து நாம் எல்லாரும் போயும் விடுவோம்.

இங்கு இருக்கிறவர்கள் எல்லாருமே இந்த வாழ்க்கைக்கு, வந்த தேதியை கணக்கிட்டு வரிசைப் படுத்திச் சொல்லி விடலாம்.

ஆனால் போகிற விதத்தை அவ்வாறு சொல்ல முடியுமோ?

'இப்போது உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறேனே. இதே நேரத்தில்நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்:- இவர்களில் யார் எந்த வரிசையில் போவார்கள் என்ற ஒருநினைவு என்னுள் ஓடுகிறது. இப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனமான சிந்தனைகள் கூட ஒரு படைப்புக்கு வித்தாகலாம்' என்று நான் அப்போது சொன்னேன். முன் வரிசையிலே இருந்த அழகிரிசாமிதான் முதலில் போவார் என்று எனக்கு அப்போது தெரியாது.

இதை நான் அழுது கொண்டோ, வருத்தத்தோடோ சொல்லவில்லை. உடல் வாழ்க்கையின் விநோதத்தை ரசித்துச் சிரித்தவாறே இதைச்சொல்கிறேன்.

அழகிரிசாமியின் மறைவுக்காக அழுகிறவர்களையும், வருத்தப்படுகிறவர்களையும், அவருடைய நினைவுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்றும் விரும்புகிறவர்களையும் நான் ஒன்று கேட்டுக்கொள்வேன். நாம் அழுவதானால் நமக்காகவே அழுவோம். அதைத் தவிர நாம் ஏதும் செய்வதில்லை. நாம் வருத்தப்படுவதானால் நமக்காகவே வருத்தப்படுவோம்; இயற்கை அதற்குத்தான் நம்மை லாயக்காக்கியிருக்கிறது. நாம் அவருக்கோ அவர் குடும்பத்திற்கோ உதவ வேண்டுமானால் அதை அவருக்காக அல்ல; நம் பொருட்டு நமது பயத்தாலும், பலவீனத்தினாலுமாவது நாம் அதைச் செய்வோம்.

நம்முடைய உதவிகள், நமது ஒத்துழைப்புக்கள் என்ற எல்லைகளை எல்லாம் தாண்டி அவர்

விலகி விட்டார். அவர் இப்போது நம்மில் ஒருவர் அல்லர். எனவே அவர் பொருட்டு நாம் வருந்துதல் வேண்டாம்.

அழகிரிசாமிக்காக நாம் எதையும் செய்ய முடியாது. எனவே அவர் மீது நாம் கொண்டுள்ள அன்பிற்காக, அவர் நம்மை மகிழ்வித்தார் என்பதற்காக, நம்மில் ஒருவராக அவர் தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொண்டார் என்பதற்காக, நமது விவஸ்தைகெட்ட மனோதிருப்திக்காக அவர் குடும்பத்திற்கு நாம் எதையாவது செய்ய வேண்டும்.

அவரது நட்புக்கு இனிய நண்பர்களான எங்களில் சிலர் ஏதேதோ முயற்சிகள் செய்து வருகிறார்கள். அவரவர் இயன்ற அளவிற்கு எதையாவது செய்ய வேண்டும் என்று நான் அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன்.

—ஜெயகாந்தன்

சத்தியமே தெய்வம்

இருள் சூழ்ந்து நிற்கிறது ஆண்டவனே!
பரஞ்சுடரே வழி காட்டுவாய்!
வெகு தூரத்தில் இருக்கிறேன்
பேரிருட்டில் அலைகிறேன்
என் அப்பனே! எப்பொழுது ஊர்போய்ச் சேருவேன்!
வழிகாட்டுவாய்! எந்தையே!
இருளில் வழிமுழுதும் தென்படவில்லை
ஓரடி ஓரடியாகப் பிறழாமல் வைத்துச்
சென்றேனானால் போதும்
தடுமாறும் காலுக்குக் காவலாய் நிற்பாய்
என் பாதத்துக்கு வெளிச்சம் காட்டுவாய்
உன்னிடம் ஒப்படைத்து விட்டேன்
ஓரடி ஓரடியாகத் தடம் பிறழாது சென்றால்போதும்
என் தளர்நடைக்கு அருள்வாய் ஆண்டவனே!

(காந்திஜீ—Young India 11-10-28)

—தமிழாக்கம்: திலக்

உரத்த சிந்தனை

(கேள்விகள் சிந்தனையைத் தூண்டக்கூடியதாக, எது பற்றியும் இருக்கலாம், கேள்விக்கு ஏற்ற தொனியிலேயே பதிலும் இருக்கும். —ஆசிரியர்.)

கேள்வி : செத்த பாம்பு, மன்னிக்கப்படாத பாவங்கள் போன்ற கதைகளால் தமிழ் இலக்கியத்தில் என்ன சாதித்துவிட முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

—கே. டி. ராஜசேகர், திருப்பூர்.

பதில் : இந்தக் கேள்வியில் நீங்கள் சாதித்திருப்பதைவிட அதிகம் சாதிக்க முடியும் என்று நினைக்கிறேன். ஒரு கதையின் சாதனை அந்தக் கதை தானேயொழிய அதை மீறிய வேறொன்றுமில்லை. அப்படி ஏதாவது இருக்கவேண்டுமென்ற நியதியுமில்லை. இருந்தால் தவறுமில்லை.

கே: "ஒரு எண்ணப் பொறி, நசுங்கிப் போன பாம்பைப் போல, மனக்கொடியில் ஊர்கிறதே........." என்று 'அழைப்பு' (4-வது ஞானரதம் இதழில்) என்ற கதையில் வருகிறதே அந்த வாசகத்தில் பொருட்பிழை இருக்கிறதல்லவா? எங்காவது நசுங்கிப் போன பாம்பு ஊருமா?

—ஏ. விஸ்வநாதன்,
உடுமலைப்பேட்டை.

ப: இந்த வாசகத்தில் பொருட்பிழை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. நசுங்கிப்போன பாம்பு முற்றாக அசைவற்று இறப்பதற்கு முன்னால் ஏற்படுகிற அவஸ்தையை அது குறிக்கிறது. எதையும் இசைவாகப் புரிந்து கொள்ள

முயல்வதுதான் இலக்கிய ரசனை. எதிர் நின்று பார்ப்பவர்கள் 'இராவணனுக்குப் பத்துத்தலை என்ன நியாயத்தில்?' என்று கேட்கிற கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

கே: ''பிறவற்றைப் பிரசுரத்திற்குப் பின் நான் படிப்பேன். நீங்கள் குறிப்பிட்ட கதையை பிரசுரத்திற்குப் பின்னும் நான் படிக்கவில்லை...'' என்று 5-வது இதழில் ஒரு கேள்விக்குப் பதில் கூறும் போது குறிப்பிட்டுள்ளீர்களே. குற்றச்சாட்டுக்குரியது என்று தெரிந்தும் பிரசுரமான அக்கதையை ஏன் தாங்கள் படிக்கவில்லை. நேரமில்லையா? அவசியமில்லையா? உரத்த சிந்தனைக்குரிய பொறுப்பு இதுதானா?

ப: இப்போதும் சொல்கிறேன்; நான் படிக்கவில்லை. நான் படித்தவற்றைப் பற்றித்தான் நான் சொல்ல முடியுமே தவிர எனக்குத் தெரியாதவற்றையும், நான் படிக்காதவற்றையும் எனக்குத் தெரியாது என்று சொல்வதில் எனக்கு வெட்கமில்லை ஞானரதம் முதல் இதழில் நான் எழுதிய முன்னேட் ்தைத் தயவுசெய்து படிக்க ். பல கருத்துடையவர்களை ஒன்றிணைத்து உங்கள் ன்னுல் நிறுத்துகிறேன். இந்தப் பொறுப்பு அல்லது பொறுப்பின்மைக்குமட்டுமே நான் உரியவன். ஒன்றைப் படிப்பதும் படிக்காமல் விடுவதும் என் சொந்த விஷயம். என்னை யாரும் கட்டாயப் படுத்துதல் கூடாது

கே: 'மன்னிக்கப் படாத பாவங்கள்' சிறுகதையை நீங்கள் படிக்கவில்லை என்று குறிப்பிட்டிருப்பது சரியல்ல. கதையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதுதான் எங்களுக்குத் தேவை.

—எஸ். ரெனிஅரவிந்தன், கோவை-7

ப: நான் படிக்காத ஒன்றை நான் படிக்கவில்லை என்று சொல்வது சரியானதும் உண்மையானதுமாகும். இந்தக் கதையை நான் படிக்கவில்லையாகையால் இதைப் பற்றிநான் ஒன்றும் நினைக்கவும் இல்லை.

கே: 'மன்னிக்கப்படாத பாவங்கள்' கதையை பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை அறிய நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் அதனைப் படிக்கவில்லை என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது சரியா?

—கே. இன்பராஜ், கோவை.

ப: இந்தக் கேள்வியை பலர் கேட்டிருக்கிறீர்களே. உங்களில் ஒருவருக்குக்கூட

தயவுசெய்து அந்தக் கதையைப் படித்துவிட்டு உங்கள் அபிப்பிராயத்தை எங்களுக்குச் சொல்லுங்கள் என்றுகேட்கத் தோன்றவில்லையே என்று நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வொருவரின் கதையிலிருந்து நான் தப்பித்துக் கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு என்ன இருக்கிறது?

கே: ஒருவன் எந்த வயதில் திருமணம் செய்து கொள்வது சரி என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஒருவன் திருமணம் செய்து கொள்ளாமலே இருக்கலாமா?

ப: திருமணத்தின் அவசியத்தை உணர்ந்து, அதற்கு உரிய தகுதியையும் உணர்கிற ஒருவன், அவனைத் திருமணம் செய்து கொள்ள ஒருத்தியும் சம்மதித்தால் எந்த வயதிலும் திருமணம் செய்து கொள்ளலாம், ஒருவன் திருமணம் செய்துகொள்வதா கூடாதா என்பதைத் தீர்மானிக்கவேண்டியது அவனது அடிப்படை உரிமை. இதில் மற்றவர்கள் அபிப்பிராயம் சொல்ல என்ன இருக்கிறது.

கே: ஆசிரியர் ஒரு சிறந்த சரித்திர நாவல் எழுதுவாரா?

—மும்மொழிப்பித்தன், திருவரூர்.

ப: நான் சரித்திரக் கதை எழுதமாட்டேன் தமிழில் எழுதப்படுகின்ற சரித்திரக் கதையெல்லாம் சரித்திரமும் இல்லாத, கதையுமில்லாத கயிறு திரித்தலாகும். எனக்கு இவற்றைவிட அம்புலிமாமாக் கதைகள் சிறப்பாக இருக்கின்றன.

கே: சிவப்பு விளக்குப் பகுதிகள் சமீபத்திய பத்திரிகைகளில் அதிகமாக இடம் பெறுவது பற்றிய தங்கள் அபிப்ராயம் என்ன? அதன் பாதிப்பு எப்படி இருக்கும்?

—ஏ. பாலசுப்ரமணியம்,
அம்பாசமுத்திரம்.

ஞானரதம்

விளம்பர விகிதம்:

பின் அட்டை (இருகலர்)	300
உள் அட்டைகள் (,,)	250
,, ,, (ஒருகலர்)	200
முழுபக்கம்	100
அரைப்பக்கம்	60
கால்பக்கம்	30

ஒப்பந்த விளம்பரங்களுக்கு தள்ளுபடி உண்டு

புத்தக விளம்பரங்களுக்கு தனிச் சலுகை

விவரங்களுக்கு:
நிர்வாகி: ஞானரதம்
சக்தி இல்லம், சென்னை-86

ப: இந்தச் சிவப்பு விளக்குகள் அனைத்தும் பொய்யானவை. கற்பனையானவை. இவற்றை எழுதுவதன் மூலம் ஒரு சமூகப் பிரச்சனையின் ஆழ்ந்த அவலங்களைப் பாராமல் வாசகர்களிடம் ஒரு விறுவிறுப்பு ஏற்படுத்துவதும் அவர்களை அதிர்ச்சி ரசனைகருதி இதனைப் பற்றிப் பொறுப்போ ஆழ்ந்த அனுபவமோ இன்றி இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் சிலர்பெரும் தீங்கு செய்து வருகிறார்கள். இதில் ஒரு Gossiping Tendency) தான் இருக்கிறதே தவிர ஒரு இலக்கிய ஆசிரியனுக்கும் வேண்டிய ஆழ்ந்த மேதாவிலாசம் தெரியவில்லை. மனநிமனங்களைத் துருவுவதற்குப் பதிலாக ஒரு பத்திரிகை நிருபர் மாதிரி சந்து பொந்துகளைத் துருவுவதன் மூலம் வெறும் புள்ளி விவரங்களைச் சேகரித்து இலக்கியம் படைத்துவிட முடியாது என்பதைக் காட்டுகிறது இது. இன்னும் சொல்லப் போனல் இவர்கள் சந்துபொந்துகளையாவது நிஜமாகச் சந்தித்திருப்பார்களா என்ற சந்தேகமும் எனக்கு இருக்கிறது. நான் இவற்றைப் படித்து வருகிறேன். இது ஒரு இலக்கியப் போலி இதுமாதிரி விஷயங்கள் தினத்தந்தியிலும் மாலைமுரசிலும் நிறைய வருகின்றனவே. அவை இலக்கியமாகி விடுமா, என்ன?

கே: நண்பனின் மனைவியுடன் பால் (SEX) உணர்வின்றி சகோதர உறவுடன் பழக முடியுமா? முடியாதா?

—வீ. அன்புச்செல்வன், சென்னை-35.

ப: முடியவும் முடியலாம். முடியாமலும் போகலாம்.

கே: தனி மனிதனுக்குக் கொடுக்கப்படும் அளவற்ற சுதந்திரத்தினுல் வருகின்ற தீமைகளைப் பற்றி நீங்கள் யோசிக்கவில்லையா?

—ச. கோவிந்தசாமி, திருச்சி-3.

ப: எங்கே எப்போது கொடுக்கப்பட்டது? சுதந்தி

மதுரையிலிருந்து
வாரந்தோறும்
மலர்கிறது

குறிஞ்சி

(தேசிய முற்போக்கு
வார இதழ்)

ஆசிரியர்:
ப. நெடுமாறன்

ஆண்டுச் சந்தா ரூ. 12-00
ஆறு மாதச் சந்தா ரூ. 6-50
தனிப் பிரதி 25 காசுகள்
48, மேலமாசி வீதி,
மதுரை-1.

ரம் என்பது கட்டுப்பட மறுத்தலே ஒழிய, கட்டுப்படுத்திக் கொள்ள மறுப்பதல்ல. சமூக மனிதனுக்கு கட்டுப்பாடுகள் உண்டு. கட்டுப்பாடுகள் வேண்டும், ஆனால் தனி மனிதனின் சுதந்திரங்கள் கட்டற்று இருப்பதுதான் சுதந்திரம் என்று சொல்லப்படுகின்ற வார்த்தையின் உரைகல்லாகும்.

கே: எஸ். டி. போஸ் எழுதிய மன்னிக்கப்படாத பாவங்கள் சிறுகதையை நீங்கள் பிரசுரித்து கிருஸ்தவ நெஞ்சங்களைப் புண்ணாக்கி விட்டீர்களே...இது நியாயமா?

—அ. ரோசாரி, தூத்துக்குடி.

ப: அடுத்த இதழில் இதை படித்துவிட்டு அவசியமானால் என் அபிப்பிராயத்தை எழுதுகிறேன்.

கே: கிருஸ்தவ மதம் தங்களுக்கு பிடிக்காத ஒன்று?

—இயேசுதாசன், நெல்லை.

ப: எனக்கு எல்லா மதங்களும் பிடிக்கும். மதங்களின் பேரால் நடக்கின்ற சச்சரவுகளும் பகைமையும் வெறியும், பிடிவாதமும்தான் பிடிக்காதவை.

கே: கற்பனை என்பதும், சிந்தனை செய்தல் என்பதும், ஒன்று?

ப: இரண்டும் ஒன்றல்ல.

ஆராய்ச்சி

காலாண்டு இதழ்

முதலாண்டு முடிந்து இரண்டாம் ஆண்டு தொடங்குகிறது.

முதலாண்டில் இவ்விதழ் பெற்றிருக்கும் வெற்றிகள் :

1. 580 பக்கங்கள் முழுவதும் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறது.
2. 4 இதழ்களில் 44 கட்டுரைகள் வெளியிடப்பட்டன
3. 44 கட்டுரைகள் எட்டுத் துறைகளில் வெளியிடப்பட்டன.

50-க்கு மேற்பட்ட ஆராய்ச்சியாளர்களின் ஒத்துழைப்போடு வெளிவரும் தரம்மிகுந்த ஆய்வு இதழ்.

சந்தா செலுத்தியிரா விட்டால் உடனே செலுத்துங்கள்

ஆண்டு சந்தா ரூ. 10 நா. வானமாமலை

ஆசிரியர்: "ஆராய்ச்சி" 258, திருச்செந்தூர் ரோடு, பாளையங்கோட்டை

கே: உண்மை என்று சொன்னால் போதுமே. நிர்வாண உண்மை என்று ஏன் சொல்கிறார்கள்?

—செ. செயபாலன், மதுரை

ப: Nacked Truth என்ற ஆங்கில வார்த்தையின் மொழிபெயர்ப்பு அது. இதனை, பார்க்கிறவர்களின் முகம் சுளிக்க வைக்கின்ற உண்மை என்றும், பிறர் உணர்ச்சிகளைப் பொருட்படுத்தாமல் உண்மைகளைத் தோலுரித்துக் காட்டுவது என்பதைக் குறிக்கவும் பிரயோகிக்கிறார்கள்.

கே: உங்கள் கதைகளைப் பற்றி உங்களுக்கு திருப்தி இருக்கிறதா?

ப: சில சமயங்களில் திருப்தியும் சில சமயங்களில் அதிருப்தியும் இருக்கிறது. நீங்கள் திருப்தியைப் பற்றி மட்டும் தானே கேட்டீர்கள். நிச்சயம் திருப்தி இருக்கிறது.

கே: பொதுவுடைமைக் கொள்கைகளிலே மலர்ந்த ஒரு ஆத்மா காஞ்சி காமகோடிப்

தனிமை என்பது வீடு, மனைவி மக்கள் எல்லாம் துறந்து காட்டை நோக்கி ஓடுவதல்ல; உலகில் மனத்துறவோடு ஒட்டியும் ஒட்டாததுமாக வாழ்வதே.

—மோந்தேன்

நான் எல்லா வாசகர்களையும் இரண்டு பிரிவாகப் பிரிக்கின்றேன். ஒன்று: நினைவில் கொள்வதற்காகப் படிப்பவர்கள், இரண்டு: மறப்பதற்காக படிப்பவர்கள்

—வில்லியம்ஸ் லியான் பாப்ஸ்

பெரியவாளின் கண்களின் ஒளியில் மயங்கி நின்ற தன்மையை நான் எப்படி எடுத்துக் கொள்வது?

ப: நான் கம்யூனிஸ்ட் கட்சியிலே இருந்தது உண்மை. என் ஆத்மாவே அங்கேதான் மலர்ந்தது என்று அதற்கு அர்த்தம்? உயிருள்ள கண்கள் எல்லாமே ஒளியுள்ளவைதான். இதை நீங்கள் எப்படி எடுத்துக் கொண்டால் எனக்கென்ன? எனது அனுபவங்களை நான் பேசுகிறேன்:

கே: தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' நாவலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

—எம். கே. வெங்கடேஸ்வரன், சென்னை-15

ப: மிகவும் அற்புதமாக எழுதப்பட்டது. படிக்கும் போது சுகமாக இருந்தது, எனக்குப் பிடித்திருக்கிறது.

கே: மொழிச் சுத்தம் முக்கியமில்லை என்று தாங்கள் கூறியதைப் பார்த்தால் ஒரு

எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதியே தேவையில்லை என்றல்லவா ஆகிறது?

—இராம. சுப்பையா, சென்னை-34

ப: எதையும் முழுக்கவும் படியுங்கள். மொழிச் சுத்தமே வேண்டாமென்று நான் சொல்லவில்லை. மொழிச் சுத்தம் அவ்வளவாக இல்லாத ஒரு நடையிலே, ஒரு அற்புதமான படைப்பினை உங்களால் உருவாக்க முடியுமென்றால்—அந்த மொழிச் சுத்தமின்மை தான் அந்தப் படைப்பை உருவாக்குகிறதென்றால் —அங்கே நீங்கள் சொல்லுகிற மொழிச் சுத்தம் அங்கு முக்கியமில்லை என்கிறேன் நான். புரிகிறதா?

கே: தமிழ் இலக்கியத்தில் ஹிப்பிகள் தோன்றியிருப்பதாக நா. பா. சொல்கிறரே. உங்களுக்கும் அப்படித் தோன்றுகிறதா? தோன்றினால் அந்த ஹிப்பிகள் யார்?

—நா. முத்துசாமி, சென்னை-5.

அறிவிப்பு

ஜெயகாந்தனின் 'எங்கோ யாரோ யாருக்காகவோ" இந்த இதழில் அச்சேறவில்லை. இந்தத் தொடர் சிறுகதை அடுத்த இதழில் முடியும்.

—நிர்வாக ஆசிரியர்

ப: நான் தான்! என்ன இப்பொழுது கெட்டுப் போயிற்று? எத்தனையோ சப்பிகள் இங்கே எழுத்தாளன் என்ற பெயரிலே திரியும்போது நான் ஒரு ஹிப்பியாகத்தான் இருந்துவிட்டுப் போகிறேனே. இலக்கியத்தில் 'ஹிப்பியிஸம்' என்கிற கட்டற்ற சுதந்திரப் போக்கு நல்லது மட்டுமில்லை, அவசியமும்கூட.

கே: அசுவராஸ்யம் (Boredom) என்றால் என்ன?

—ரங்கனதன், சென்னை-5.

ப: Boredom என்பது வேறு. அசுவராஸ்யம் என்பது வேறு. Boredom என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சில சூழ்நிலைகளினல் ஏற்படுகின்ற தளர்ந்த மனோபாவம். அசுவராஸ்யம் என்பது ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் ஏற்படுகின்ற ரசனையின்மை. வாழ்க்கையில் Boredom ஏற்படுவதற்கு காரணம் எதிலும் நாம் அதிகமாக எதிர்பார்ப்பதுதான். இருப்பதை உள்ளவாறேஏற்றுக்கொள்கிற மனோபக்குவம் எந்த அளவுக்கு ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு Boredom குறையும். Boredom என்பது துறவு அல்ல. அது சலிப்பு சலிப்பு என்பதே ஒன்றை எதிர்பார்த்து அதில் ஏற்படுகின்ற ஏமாற்றத்தின் விளைவாக,

எதிர்பார்த்தது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், ஏற்படுவதுதான். அசுவராஸ்யம் என்பது ஒன்று இருக்க வேண்டிய தன்மையோடு இல்லாமல் தரம் இழந்து போகையில், போவதாக நமக்குத் தோன்றுகையில் நமக்கு அது பற்றிய அறிவும் அனுபவமும் இருக்கின்ற முதிர்ச்சியின் விளைவாக ஏற்படுவதாகும். இது அறிவின்மையினாலும், அனுபவமின்மையினாலும். முதிர்ச்சியின்மையினாலும்கூட ஏற்படும்.

கே: ஞானரதத்தில் ஏன் சினிமா, நாடக, புத்தக விமர்சனங்கள் இடம் பெறவில்லை?

—மணிவண்ணன், சென்னை-4.

ப: ஞானரதத்தில் இன்னதுதான் வரும் என்று ஒரு கட்டுப்பாடு கிடையாது. நாடக, சினிமா, புத்தக விமரிசனங்கள் வரக் கூடாது என்றில்லை. இன்னொரு இதழைப் பொறுப்பேற்றுக் கொள்கிற யாராவது விரும்பினால் வரலாம்.

★

அக்டோபர் முதல் வெளிவருகிறது

கசடதபற

ஒரு வல்லின மாத ஏடு

ஆசிரியர் :

ந. கிருஷ்ணமூர்த்தி

நெ 1, தேவடித் தெரு,
சென்னை-4.

மர நாய்களுக்கு குரும்பைச் சுவை தான் தெரியும். மனிதனுக்குத் தான் தேங்காய்ச் சுவை தெரியும் கசடதபற மனிதர்களால் மனிதர்களுக்காக நடத்தப்படுகிறது.

தனி இதழ் 0-30 காசு
ஆண்டு சந்தா ரூ. 3-00

மதுரை நகரில்
தரத்திற்கும்
தகுதிக்கும்
ஒரே இடம்

ராஜா ஸ்டோர்ஸ்
ராஜா புட்வேர்

டவுன்ஹால் ரோடு
மதுரை-1

உடையவர்:
ஆ. இரத்தினம்

வேலை

எம். சுப்பிரமணியன்

படலைத் திறந்து கொண்டு உள்ளே போனுன். நடுவாசற் படியில் அம்மணமாக, கால்களைத் தொங்கவிட்டபடி மரப் பாச்சியுடன் கொஞ்சிக்கொண்டிருந்த கோண்டுப் பயல் நிமிர்ந்து பார்த்தான். கோழிக் கண்ணும் 'சொள்' வழியும் வாயும் ஒரு கணம் அப்படியே நிலைக் குத்தி நின்றது. சட்டென்று அந்தப் பெரிய கண்களில் ஒரு மலர்ச்சி மின்னிற்று. ஒரு பக்கம் சரிந்து விழும் நடையுடன், 'ம்மா...ண்ணு ந்தாச்சு... ம்மாண்ணு ந்தாச்சு' என்று கூவிக் கொண்டே உள்ளே ஓடினுன். ஒவ்வொரு வயதில் படிக்கும் ஒன்ருய். ஒரு முழு வட்டம் போட்டுக் கொண்டு, 'அண்ணு வந்தாச்சு—அண்ணு வந்தாச்சு' என்று அவன் சட்டையையும், கையையும் பிடித்துக் கொண்டு குதித்தன. வலிந்து ஒரு சிரிப்பை முகத்தில் வரவழைத்துக் கொண்டு ஒரு முறை சுற்றிப் பார்த்தான் மனசுக்குள் பதிமூணு என்று யாரோ முணுமுணுப்பது போல் இருந்தது. பெருமூச்சு உதிர்ந்தது. டிரங்குப் பெட்டி வய உயரத் தூக்கிப் பிடித்தபடி, கால் பைஜாமாவில் குரங்குகளைப் புகுத்திக் கொண்ட சர்க்கஸ் பபூன் நடப்பதுபோல், உள்ளை நோக்கி நடந்தான். அகிலா உள்ளாக ஒடுங்கி நிற்பது கண்ணில் பட்டது. மனதில் ஊமையாய் இலேசாக வலித்தாற் போன்றிருந்தது. உதடு மட்டும் அர்த்தமின்றி சிரித்தது. வாசற்றாடியை நெருங்குதற்குள் அம்மா வந்து விட்டாள். 'வா' என்ருள். இல்லை— அப்படி வரவேற்ற இங்கிதம் இலேசாக ஒடிய அந்த முறுவலில் தெரிந்தது. பதிலுக்கு இலேசாகச் சிரித்தான். 'ஏ! தூமரத் தண்டிகளா அவனைக் கொஞ்சம் புடுங்காம இருங்கோ. இன்னிக்கே பிச்சுப் புடுங்கிட வேண்டாம். பாவம் களைச்சுப்போய் வந்திருக்கான்' —அம்மா அதுகளைப் பார்த்து இரைந்தாள். 'பெட்டியைத் தாயேன்' என்று கேட்டு வாங்

சிக் கொண்டாள். அவன் கையிலுருந்து அதை வாங்கும் போது அம்மா மறுபடியும் அவனைப் பார்த்து சிரித்தாள். ஒரு கணம் அம்மாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டான் நடையில் செருப்பை விட்டுக் கொண்டே கேட்டான்.

"அப்பாக்கு எப்படியிருக்கு?"

"ம்...ஹம்...' ஒரு நெடிய பெருமூச்சு பதிலாய் உதிர்ந்தது. பேசாமல் உள்ளே நடந்தான் நிமிடப் போதில் வீடு கலகலப்பாகி விட்டது. வேலைக்கு சேர்ந்த பின் முதல் தடவையாக வருகிறுன். நடுவில் ஒரு வருடம் பிரிவு கூடத்தில் பாட்டி ஜபமாலையில் நினைவை மென்றுக் கொண்டிருந்தாள். காலடி ஓசை கேட்டு, நெற்றி மேட்டில் கையைச் சரித்துக் கொண்டு கண் இடுங்கப் பார்த்தாள்.

"சௌக்கியமாடா குழந்தே?" என்றுள். 'ம்' என்று தனக்கே கேட்காமல் முனகினுன். சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். 'மார்கண்டனைப் போல தீர்க்காயுசா இருக்கணும்... பதினாறும் பெத்துண்டும் பெருவாழ்வு வாழணும்' மௌனமாக உள்ளுக்குள் சிரித்துக் கொண்டு அம்மாவின் முகத்தைப் பார்த்தான். அப்பா இப்படியாகி விட்ட இந்த ஐந்து வருஷமாய்த் தான் அம்மா வெறுமே இருக்கிருள், என்று நினைவு வந்தது.

"என்ன திடீர்னு?"-பாட்டி

"என்னவோ தோணித்து' — சட்டையை கோட்ஸ்ஸ்டாண்டில் மாட்டினுன். பாட்டிக்கு எதிரில் வந்து உட்க்கார்ந்தான். சுற்றி வட்டமும் வந்து உட்கார்ந்தது. ஆவலோடு பெட்டியையும் அவனையும் மாறி மாறிப் பார்க்கும் க்ண்கள். சுற்றிப் பார்த்தான். அந்தப் பெட்டி திறந்து— அவன் அவ்வளவு தான் என்பது வெளிச்சமாகி விட்டால், இந்த வட்டம் இப்படியே இருக்குமா, இதே மாதிரி? சிரித்துக் கொண்டான்.

"ஏய் தரித்திரச் சனியன்களா... கொஞ்சம் வெலகி ஒக்காருங்கோ... அவனுக்குக் காத்து வரட்டும்" — அம்மா.

"வேண்டாம்மா இப்பிடியே இருக்கட்டும்". அகிலா வந்து விசிறினுள். ஜன்னலுக்கு வெளியே இரண்டு மூன்று தலைகள் தெரிந்தன. எல்லாம் ஆறும், ஏழும், எட்டும்; அந்

தக் கண்களில் ஒரு ஆச்சர்யம் —ஒரு புதிய— உலகிலில்லாத ஜீவியைப் பார்ப்பதைப்போல் பட்டணத்துக்கு இவ்வளவு மவுசா இங்கே?

''எதுலே வந்தே?''-பாட்டி

''ரயில்லதான்''

''ரொம்பக் கூட்டமோ?''

''ஒரு விநாடிக்கு மூணு கொழந்தை பொறக்கறதாம். கணக்கெடுத்திருக்கா''— பாட்டி பேசவில்லை. அகிலா மட்டும் இலேசாகச் சிரித்துக் கொண்டாள் பாட்டி திரும்பத் திரும்ப தன்னுடைய கவலைகளையெல்லாம் கேட்டாள். நிதானமாகப் பதில் சொன்னான்.

''ரொம்ப பெரிய மனுஷாளோ?''

''ராயல் பேமிலி''

''இங்கிதமா நடத்துக்கறாளா... இல்லே...?''

''நாமகத்துக்கணும் அவாகிட்டே''

''அதுதானே...''

சற்று மௌனம். பாட்டி ஏதோ நினைத்துக் கொண்டவளைப் போலச் சொன்னாள். ''இப்பல்லாம் ஊர்லே ஒன்னெப்பத்தித்தான் பேச்சு. டாண்ணு ஒவ்வொரு மாசமும் ஒன்னோட பணம் வந்தோடனே மூக்குலே வேத்தாப்பில வந்துடுவோ ஜானகி. ''பட்டணம்னு சும்மாவா—பாட்டி. ஏ! ஹப்பா..ம்பள்..ஊ நக்கேநீ பட்டணத்திலே வேலை செய்யறேன்னு ரொம்பப் பெருமை. மணியார்டர் வர்றன்னைக்கி வாய் ஓயாது ஓததருக்கும்...'' என்று கண்களும் முகமும் விகசிக்கச் சொன்னாள் பாட்டி. சற்று நேரம் கழித்துக் கேட்டாள்:

''வேலை ரொம்பக் கஷ்டமோடா அம்பி?''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லே''

''இளச்சுத் துரும்பா இருக்கியேடா குழந்தே... தோள்பட்டை ரெண்டிலியும் கொடம் எண்ணெய் பத்திரமா ஊத்தி வெக்கலாம் போலிருக்கே...''

''கோண்டுவைக் காம்பிச்சேளா?''

''நெஞ்சும் மாரும் காணச் சகிக்கலே''

''டாக்டர் என்ன சொல்றார்மா?''

அம்மா உதட்டைப் பிதுக்கினாள். தலையைக் குனிந்து

கொண்டான். கை தரையைக் கீறிற்று.

''அப்பா'' என்று இழுத்தான்.

''இப்பத்தான் தூங்கறுர்''— மௌனம் கொஞ்ச நேரம் வரை.

''குளிச்சுட்டு வாயேன், சாப்பிடலாம்', — அம்மா உள்ளே எழுந்து போனுள். கிணற்றுத் தண்ணிரின் குளிர்ச்சி உடம்புக்கும் மனத்துக்கும் ஒத்தடம் கொடுத்தது அகிலா இறைத்து விட்டாள். அந்த சௌந்தர்ய லாவன்யம் வாழ்க்கையில் முழுமை அடைவதற்குள் இருண்டு விட்டதை அந்த முகத்தைப் பார்த்த போது அவனுல் நம்ப முடியவில்லை.

''அப்புறம் என்ன முடிவு பண்ணினே ?''

''என்ன முடிவு பன்றது ? அதான் எல்லோருமாச் சேர்ந்து என் முடிவை இப்பிடிப் பண்ணிப் பிட்டாளே'' கண்கள் கூச வானத்தைப் பார்த்துக் கொண்டு மௌனமாய் நின்றுன். ஏதோ நினைத்துக்கொண்டு, 'அப்பா' என்று இழுத்தான்.

''இனிமே படுக்கைதான்'' என்றுள் நறுக்கென்று.

''என்னவாம்?''

''கால் விழுந்து போச்சாம். இடுப்புக்குக் கீழேருந்து, சொரணையே இல்லே. நின்னு, முட்டில உடம்பு பேயாட்டம் ஆடறது'' கண்களை மூடிக் கொண்டான். இமையின் உள் இருளில், முட்டில் நிற்க முடியாது தள்ளாடும் ஒரு உருவம் ஆடிற்று. அந்தக் கால்கள், . அந்தக்கால்கள் ... கிணற்றுத் தளத்தைத் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

''என்னண்ணு?''

''ஒண்ணுமில்லே''

உள்ளே வந்தான். அவன் எங்கே போனுலும் அந்த வட்டம் அவனையும் அகிலாவையும் சேர்க்காத- அந்தப் பதின்மூன்றின் வட்டம் உடன் வந்தது. ஒரே கூச்சல். ஒரே கும்மாளி.

''ண்ணு கேக்கு (நேக்கு) ஜேப்பி (ஜிலேப்பி) வாந்திக் கேல்லியோ''

''அண்ணு நேக்கு ஜப்பான் பொம்மை வாங்கிண்டு வந்திருக்கேல்லியா''

''நேக்குக் கூ கூ கூ கூ வாங்கிண்டு வந்திருக்காளே''

''நேக்குத்தான் ப்ளேன் டுர்டுர்டுர்னு போவேன். டு மில் டுமில்னு சுடுவேன். என் னு நேக்குத்தானே ப்ளேன்'' எத்தனை எதிர் பார்புகள். நெற்றி சுருங்கிற்று.

''ஏ! குதரைகளா! அவனக் கொஞ்சம் நிம்மதியா இருக்க விடுங்கோ. . புடுங்கித் திங்க வேண்டாம்.'' அம்மா கத்தி னாள். நடுஹாலுக்கு வந்த போது அம்மா இலையோடுவ தற்குத் தயார் பன்னிக் கொண்டிருந்தாள். பெட்டி யைத் திறந்து ஒரு இளநீல வர்ணப் புடவையை அகிலா விடம் நீட்டினான். அதை வாங்கும்போது அவள் கைகள் நடுங்கின. கண்களில் நீர் முட்டி உதிர்ந்தது.

''எப்படியோ இருந்து குடுக்க வேண்டியது . . ம் என்ன பண்றது யார் செஞ்ச பாவமோ'' என்று பெருமூச்சு விட்டாள் பாட்டி. குரல் கம்மி இருந்தது. இலேசாகச் செருமிக் கொண்டாள்.

''நானும் அலமாரடிச்சுண் டாச்சு, ஆனது ஆய்ப்போச்சு. நம்ம கைப்பொருள் நம்முது இல்லேன்னு ஆனப்புறம் ஐய் யோன்னு வரப்போறதா அம் மான்னு வரப்போறதா? என் னவோ ஒண்ணு இசகு பிச குன்னு ஆயிடுதுன்னு இருட் டுக்குள்ள 'குருட்டாண்டின்னு போனவனையே நினைச்சுண்டி ருந்தா திரும்பியா வரப் போறது, அதுக்காக வெளியி லயே போமாட்டேன்னு நன் னவா இருக்கு? இவள ஒத்த பொங்கள்ளாம் வேலைக்குப் போலியா? அட, பணம் பெரி சில்லேன்னாலும் மனசுக்காவது ஒரு மாத்தமிருக்குமோல்லி யோ. என்னவோ அவளும் ரெண்டு கொண்டுவந்தாள்னு நீ இப்படி ஓடாத் தேயவேண் டாம். பாரு. ஒன்னெத்தான் காணச் சகிக்கலே'' - அவன் பதில் பேசவில்லை. 'புஸ்' ஸென்று பெருமூச்சு விட் டான். பெட்டியிலிருந்து ஒவ் வொன்றாக எடுத்துப் பங்கிட் டான். அம்மாவுக்குப் பட்டுப் புடவை, மைதிலிக்கு சாரி, பாலுவுக்கு பேண்ட் சட்டை இன்னும் எத்தனை எத்தனை. .

''என்னடா ஒரு தடை யையே பொரட்டிண்டு வந் திருக்கே''-அம்மா.

இதுவா கடைங்கறே. . அம் புட்டையும் கொண்டு வந் திருந்தேன்னா அப்பத் தெரி யும். எனக்குத்தான் மனசு கேக்கலே. . இதுகூட வேண் டாம்னேன். அவா கேக்கலே. 'நாஞ்செய்யாம வேற யாரு டா செய்வா. . பேசாம இரு

எல்லாம் நேக்குத் தெரியும். இப்ப நீ ஒத்துக்கலேன்னு அப்புறம் இந்தப் பெட்டியோட திருப்பி வரவேண்டிய அவசியம் இருக்காது ஒனக்குன்னு' என் கையைக் சட்டிப் போட்டுட்டா அவாத்து மாமி" என்ருன், கொஞ்சம் கம்மிய குரலில்.

அம்மா பதில் பேசவில்லை. அந்த மின்னும் பட்டுப் புடவையையே பார்த்துக் கொண்டிருந்தாள் பாட்டிக்குக் கண்கள் நெகிழ்ந்து விட்டது.

''பெரிய மனசு. இல்லேன்னு இப்பிடிச் செய்யத் தோணுமா?'' என்று உருகினுள். அம்மா சாப்பிடக் கூப்பிட்டாள். கலத்தில் உட்கார்ந்தான். சாப்பாடு ருசிக்கவில்லை. கண்களில், முட்டி மீது நிற்க முடியாது தள்ளாடும் ஒரு உருவம் கண்ணுமூச்சியாடிற்று.

''என்னடா வேண்டிருக்கலையா?"

''அதெல்லாம் ஒண்ணும் இல்லே''

"சுண்டலே அப்பிடியே வெச்சிருக்கையே''

''ஸ்கூல் பைனல் அம்பி இல்லேயேம்மா நான் இப்ப''.

அம்மா பதில் பேசவில்லை. அவனுடைய புறங்கையில் சூடான ஒரு முத்து உதிர்த்தது. அவனுக்கும் ஒன்றும் பேசத் தோன்றவில்லை. இந்த அம்மாவை நினைக்கையில்-தன்னைக் குறுக்கிக்கொண்டு-தன் உணர்ச்சிகளைப் புதைத்துக் கொண்டு ஒடுங்கிப் போய் விட்ட அம்மாவை நினைக்கையில் மனதை வெட்டுகிறது. அம்மா வெறுமே இருந்து பார்க்க முடிந்ததில்லை. ஒன்று மாற்றி ஒன்று. அப்பா எப்போதும் தயாராயிருப்பார். இரவு எட்டு மணிக்கு மேல் அம்மாவைப் பார்க்க முடிந்ததில்லை. அவருக்குத் தன்னை ஆளக் கொடுத்தே ஆடிப் போய் விட்டாள் அம்மா. மற்ற நேரத்தில் இதுகள் நினைவு. இதுகள் பற்றிய கவலை.

"வேலை ரொம்ப கஷ்டமோடா அம்பி?''

''அதெல்லாம் ஒன்னும் இல்லேம்மா. என் உடம்பு வாகு அப்பிடி ..."

''இருந்தாலும்'"— அம்மா

''இருந்தாலும் என்னம்மா ...இருந்தாலும். கஷ்டமோ நஷ்டமோ நாம தானே செய்யணும். ஏன் நீ செய்யலையா ?'' அம்மாவால் பேச

முடியவில்லை சட்டென்று அப்போதுதான் பார்த்தவனைப் போல 'உன் கழுத்துக் கொடி எங்கேம்மா? என்று கேட்க வாயெடுத்தவன் — அந்தப் பெரிய வட்டம் நினைவுக்கு வந்தவுடன் வாயை மூடிக்கொண்டான். இது தான் அப்பாவை வீழ்த்தி விட்டதே?

''நல்லவாதானே?,' — அம்மா.

பதிலுக்குச் சிரித்தான்.

''அவனே என்னடி கேள்வி. நல்லவா இல்லேன்னு இப்பிடிச் செய்யத் தோணும்மா? அந்தப் பாகவதன் கூட எவ்வளவு சரியாகச் சொன்னுன். 'பாட்டி! பணக்காறங்கறத்துக்காக மடியில் தூக்கி வெச்சுண்டு கொஞ்சவும் மாட்டா. ஏழைங்கறத்துக்காகக் கொல்லையிலே நிக்க வெச்சுப்பேசி அனுப்பிச்சுடவும் மாட்டா. எல்லாரும் வேணுங்கற தெய்வீக மனசுன்னு — இல்லேன்னு எங்கயோ ஒரு தூரத்துக் காட்டிலே போயி ஒரு ஆத்துல வேலை செய்யணும்னப்போ நான் ஒத்திண்டிருப்பேனு என்ன...? நல்லவா இல்லேன்னு மாதம் முடியறதுக்குள்ளே சூரியன் உதிச்சாலும், உதிக்காட்டாலும் தவறும வந்து விழுமா சொல்லு? இப்பிடி யார் செய்வா இந்த நாள்லே... என்னடா சரிதானே?',

''சரிதான் பாட்டி'' — என்று சிரித்தான், இருந்தாலும் அம்மா விடவில்லை. திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டிருந்தாள். சிலவற்றிற்குச் சிரித்தான். சிலவற்றிற்கு மழுப்பினுன். சிலவற்றிற்கு மௌனம் சாதித்தான்.

''உங்கிட்ட எப்படி நடந்துக்கறு?''? — அம்மா.

''யாரு?''

''யாரா...? எல்லாருந்தான்''

''நன்னுத்தான் நடந்துத்கறு''

''நன்னுன்னு''

''நன்னுன்னு... நன்னுதான்'' — கையைக் கழுவிக் கொண்டே கேட்டான், ''அப்பாக்கு ஏன் இப்பிடி ஆயிடுத்தாம்?'' — அம்மாவின் கண்கள் அவன் முகத்தில் ஒரு கணம் பதிந்து துழாவிற்று.

''எல்லாம் கர்மம்டா கர்மம்'' — என்று தலையில் அடித்துக் கொள்ளப் போனவள் எதற்கோ கட்டுப் பட்டவள்

போல் கையைப் பின்னுக் கிழுத்துக் கொண்டாள். அம்மாவுக்குச் சாஸ்திர நம்பிக்கை ஜாஸ்தி. அம்மாவின் முகத்தை ஆழப் பார்த்தான், விடியாத வாழ்வின் விரக்தி நிழலாடிற்று அதில். எல்லாம் எதனுல்... அந்தக் கால்கள் ... அதன் விளைவுதானு ... சே! தலை சுற்றிற்று. அடுக்களையே வாழ்வாகப் போய்விட்ட அகிலா — அடுத்தாற்போல் தாரை வார்ப்பதற்குத் தயாராகி நிற்கிற மைதிலி. இலேசான அரும்புமீசை நிழலாய்த் தெரிய கிளர்ச்சிசு குறுகுறுப்புடன் பார்க்கும் பாலு, 5 வயது ஆகியும், வயதில் முதுமை படியாத கோண்டு— எத்தனை உரிமையின் சுமைகள் தன் கால்கள் நடுங்குவது போலிருந்தது...

''என்னடா ?''

''ஒண்ணுமில்லே''

''ஏன் இப்பிடி வேர்க்கறது ?"

''வேர்க்கறதா... ஆமாம் வேர்க்கறது''

அம்மா ஒரு தினுசாகப் பார்த்தாள். உடம்பைச் சொடுக்கிறது''

''சரியா வந்து சேர்ரதில்லேயோ ?'' என்ருன் எங்கேயோ பார்த்தபடி.

''என்னது ?''

''பணம்''

''அதான் ஊர் வாய் கிழியறதே''

''அடுத்த மாசம் இருபத்தஞ்சுரூவா அதிகம் போட்டுத் தரேன்னிருக்கா''

''ம்''

''ரொம்ப நல்ல மனசு பாத்துக்கோ''

''அதுதான் தெரியறதே"

பேச முடியவில்லை; குனிந்தபடியே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

''உனக்கு அந்தச் புடவை நன்னருக்கும்னு''

''பார்க்காமலே சொல்லிவிட்டாள்லியோ, ரொம்ப சரி''— மௌனம் குறுக்கே பாலமிட்டது. சற்று நேரம் கழித்துக் கேட்டான்.

''முன்ன எப்பவோ அப்பா எங்கியோ ஒரு வீட்டில் வேலை பார்த்தார்னியே...''

''அது எதுக்கு இப்போ ?'' —கேட்கவில்லை புருவங்கள் அந்த அர்த்தத்தில் நெறிந்தன

''என்னவோ கேக்கணும் போலத் தோனித்து''—என்று தரையைக் கீறினுன்.

'கர்மம்டா கர்மம்... அதான் இப்பிடி நீட்டிப் புடுத்து'' என்றவள், 'அது சரி ஓனக்கு எண்ணிக்குப் போகணும்? என்று கேட்டாள்.

இன்னம் இரண்டு நாள் இருப்பேன்.

ஒரு வாரம் இருப்பேன்னு நெனச்சேன்.

ஒரு நிமிஷம் நான் பக்கத்துல இல்லேன்னு ஓடாது மாமிக்கு. சதா என் நாமஜபந்தான் இந்த ஒல்லிக்குச்சியை ரோடு ரோலர் ஆக்கிட்டுத்தான் மறுவேலை பார்க்கப் போருளாம். கங்கணம் கட்டிண்டிருக்கா. என் உடம்பு தேறணும்னு ஸ்பெஷல் ட்ரீட்மெண்டுக்கெல்லாம் கூட அரேஞ்ச் பண்ணியிருக்கா.

தொடர்ந்து 'ஏன் பண்ண மாட்டாள் பின்னே' என்று நினைத்துக் கொண்டாள்.

ஏது ரொம்ப அக்கறை

நல்லவருக்குத்தானேம் மா மத்தவாளைப் பத்தியெல்லாம் அக்கறை வரும்? தன்னைப் பற்றித் தனக்கே இளக்காரமாக இருந்தது.

அம்மா பேசாமல் உள்ளே போய் விட்டாள். அப்பா ரூமிற்குப் போனுன். அப்பா இன்னும் தூங்கிக் கொண்டுதானிருந்தார். ரூமில் நுழையும்போது கால்கள் நடுங்கின. கண்களில் பூச்சி பறந்தது. அந்தக் கால்கள்...கர்மம்டா கர்மம்— அம்மா பெரிதாகக் காதில் இறைவது போலிருந்தது. அந்தப் பதிமூன்றின் வட்டம் பெரிதாக வளைத்து வளைத்துக் கழுத்தை இறுக்கிற்று. அப்பாகூட எங்கேயோ ஒரு வீட்டில் கொஞ்ச நாள் வேலை — முட்டிக்கு மேல் உடம்பு பேயாட்டம் ஆடுவது போலிருக்கவே அப்படியே சுவரோடு சுவராக நழுவிக் கொண்டே உட்கார்ந்தான். கண்களை இறுக மூடினுன். நெஞ்சுக்குள், யாரோ என்றோ தன்னைச் சுட்டிச் சொன்ன அந்த வார்த்தைகள் ரீங்காரமிட்டது

அவனுக்கும் அதானே பேய் வேலை. ☆

இனியும் நான் அம்மாஞ்சியில்லை !

நீலகண்டன்

நான் பிழைக்கத் தெரியாதவனாம். நாலு பேரோடு என்னால் சரியாக-சகஜமாகப்-பழகத் தெரியாதாம். நான் ஒரு ஊமைக் கோட்டானாம். எந்த ஒரு காரியத்திற்கும் எனக்குத் துணிச்சல் கிடையாதாம். சுருக்கமாகச் சொல்லப் போனால் நான் ஒரு அசட்டு அம்மாஞ்சியாம் ! மனிதனை நன்றாக '' எடை போடத் '' தெரிந்தவர்கள் எனக்கு இத்தனை பட்டங்களையும் கட்டி விட்டிருக்கிறார்கள், இவை அத்தனையையும் சுமந்து கொண்டு நான் இதோ என்னுடைய இதே மூலையில் உட்கார்ந்திருக்கிறேன். ஒவ்வொருவரும் என்னைப் பார்க்கும் பார்வை ! ஓ ! அவர்கள் பார்வையில்தான் எத்தனை அலட்சியம் ! ஒரு புழுவைப் பார்ப்பது போலல்லவா பார்க்கிறார்கள் ! வைத்தா-எதற்கும் உதவாத உதவாக்கரை வைத்தா-கூட அல்லவா அலட்சியப் படுத்துகிறான் ! அவன் பார்வையில் தான் எத்தனை ஏளனம் !

பார்க்கட்டுமே ! நன்றாகப் பார்க்கட்டும் ! எனக்கென்ன? இவர்கள் அலட்சியம் என்னை என்னசெய்துவிடப்போகிறது? இவர்கள் ஒவ்வொருவருக்கும் எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து செய்ய என்னை விட்டால்தான் வேறு கதி ஏது ? இந்த அலட்சியமெல்லாம் இன்னும் எவ்வளவு நேரத்திற்கு ? ''சாமா இலைபோடு பசிக்கிறது'' என்று சொல்லிக் கொண்டு என்னிடம்தானே வர வேண்டும் ! அப்போது பார்த்துக்கொள்கிறேன்.

'' உட்கார்ந்திருப்பதைப் பாரேன் ஊமைக் கோட்டானாட்டம் ! கேட்டாக் கேட்டா பதில் சொல்லறானோ பாரேன்!''

''அவனைச் சொல்லி என்ன பண்ணறது ? திமிர் ! பெரிய

வர் கொடுக்கற இடம், அவனே இப்படி இருக்கச் சொல்ல றது''—அத்தை வரிந்து கட் கட்டிக் கொண்டு கரிச்சுக் கொட்டருள். அவள் கையை நெரிக்கிற சத்தம் நாலு காய்ந்த சுள்ளியை ஒடிக்கி றது போலக் கேட்கிறது.

',டீ கமலா, மணியன் வந் துட்டானே பாரு! பெரியவர் எப்படி இருக்கார்ன்னு பார்த் துட்டு வரேன்னு போனவன். ஒரு மணியாச்சு. இன்னமும் காணேமே!'' —பர்வதம் மாமி கத்துகிருள். மாமா வின் — பெரியவர்-சம்சாரம். வீட்டு எஜமானி. மெது வாகப் பேசினலே வீடு முழு தும் கேட்கும். இப்பவோ கத்துகிருள். ஊர் முழுவதும் கேட்கும்.

'' அவனுக்கு என்ன ஆச்சோ எப்படி இருக்கானே? ஸ்வாமி! பகவானே! நீதான் காப்பாத்தணும்'' — மூக்கை மூக்கைப் பிழிந்து போட்டுக் கொண்டே. பாட்டி முனங்கு கிருள். பெரியவரின் அம்மா.

''டேய் சாமா! என்னடா நடந்தது? பதில் சொல் லேண்டா முண்டம்!''

நான் முண்டம்தான் ஆமாம்! தலை இல்லாமல் இருந்திருக்க வேண்டிய முண் டம்! தலை இருக்கிறதுனலே தானே அதிலே முகம் இருக்கு? அந்த முகத்திலே ரெண்டு கண்ணிருக்கு? அந்தக் கண் இருக்கிறதுனலேதானே அந் தக் கண்ணருவியைப் பார்த் துத் தொலைச்சேன்! அதை மட்டும் பார்க்காம இருந் திருந்தா நானும் இவாகூடச் சேர்ந்திண்டு இப்போ ஒண் ணும் புரியாமே கத்தலாம், பரபரக்கலாம் எல்லாம் செய் யலாம். அவர்கூடப் போனதி னலே—அதைப் பார்த்ததி னலே — தானே இப்போ இவா எல்லோருக்கும் பதில் சொல்ல வேண்டியிருக்கு? உண்மையான பதிலை சொன் னேன்னு என்ன நடக்கும்? அதைத்தான் எப்படிச் சொல் றது? சீ! அசிங்கம்! அதைப் போய் பாட்டி, அத்தை, மாமி, கமலா எல்லார் முன் னலேயும் எப்படிச் சொல்றது? எந்த மூஞ்சியோட சொல் றது? சொல்லிட்டாத்தான் மாமாவுக்கு என்ன மரியாதை இருக்கும்? சொல்லக் கூடாது. சொல்லக் கூடாது சொல்லக் கூடாது இவா என்ன வேணும் னலும் திட்டட்டும் வையட் டும். அடிக்கட்டும் கரிச்சுக் கொட்டட்டும் நான்சொல்லப் போறதில்லை. அசட்டு அம் மாஞ்சியாகவே இருந்துட்டுப்

போறேன். அந்த அசிங்கத்தைச் சொல்லறதுனாலே என்னோட அம்மசஞ்சிப் பட்டம் போயிடும்னு அந்தப் பட்டம் என்னை விட்டுப் போகவே வேண்டாம். என்னோடவே இருக்கட்டும் !

சீ ! திரும்பத் திரும்ப மழைக் காலத்து வறட்டுத் தவளை போல மனசு அதையே திரும்பத் திரும்ப பாடிண்டிருக்கே! இன்னிக்குக் காலம் பற மாமாவோட வண்டியிலே ஏறும்போதே அபசகுனம் மாதிரி சுப்பன் தும்மினான். மாமா இதை யெல்லாம் பொருட்படுத்தறவர் இல்லே. அவர்பாட்டுக்கு வண்டியிலே ஏறிவிட்டார். சுப்பனும் மாடுகளை விரட்ட ஆரம்பிச்சுட்டான். அப்புறம்தான் மாமா என்னைப் பார்த்தார்.

''ஏண்டாலே... வரல்லியா? முன்னாலே ஏறிக்கோ!'' என்று சொன்னார்.

தும்மலாவது! சகுனமாவது கொஞ்சம் கூடத் தாமதித்தால் சுப்பன் வண்டியைவிரட்டிடுவான் போல இருந்தது. மாமாவும் போயிடுவார். அப்புறம் தோப்பாவது, மண்ணாவது ! போகவே முடியாது. ஏதோ இத்தனை வருஷமாக இல்லாத ஒரு நப்பாசை-தோப்பையெல்லாம் நன்னா சுத்திப் பாத்துட்டு வரணும்னு புறப்பட்டாச்சு ! இனியும் தாமதித்தா அப்புறம் வண்டி போயிடும் !

''வரேனே...''ஓடிப் போய் வண்டியின் முன் பக்கமாக ஏறிக் கொண்டேன். மாடு என்ன நினைச்சுண்டுதோ ? வாலைத் தூக்கி என் முதுகில் ஒன்று போட்டது !

''பயப்படாம ஏறு சாமி 'ன்னு சுப்பன் கிண்டல் பண்ணறான்.

''நான் பயப்படலியே !'' என்று சொல்லிக் கொண்டே சுப்பனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன்.

அடேயப்பா ! வெளியே தான் எப்படியிருக்கு! நானும் இந்த வீட்டுக்கு வந்து மூணு வருஷமாச்சு ! எனக்கு இந்த வீட்டுக்குள்ளே புகுந்தேனோ அன்னையிலிருந்துவெளி உலகத்தைப் பார்க்க முடியல்லே. என்னோட உலகம் எல்லாம் இந்த வீடும் அதைச் சுற்றியிருக்கற தோட்டமும் தான். காலம்பற அஞ்சு மணிக்கு எழுந்திருந்து காப்பி போட ஆரம்பிச்சா ராத்திரி

பத்து மணிக்கு தாழ்வாரத்திலே துண்டை விரிச்சுப் படுக்கறது வரைக்கும் அடுக்களே தான் கதி! சொல்லப் போனுல் இவாளுக்கும் தான் என்னேவிட்டா வேறு யார் இருக்கா? நான் அம்மாஞ்சியாம்! மாமி அப்படித்தான் கூப்பிடுவாள் — ''டேய் அம்மாஞ்சி, இங்கேவாடா''ன்னு வயது ஆன ஒரு ஆம்பிளேயை 'அம்மாஞ்'ன்னு கூப்பிடலாமோன்னு கூடத் தெரியல்லே. மாமிக்கு என்ன ஒருத்தருக்குமே தெரியவில்லே.

வண்டி தோப்புக்குள்ளே நுழைஞ்சுது சுப்பன் வண்டியை நேரே தோப்பு வீட்டிற்கு முன்னுலே கொண்டு போய் நிறுத்தினுன். இன்னிக்குத்தான் பாத்தேன்! அடேயப்பா! தோப்பு எவ்வளவு பெரிசு! வீடு சின்னதுதான். ஆனு மாடிவீடு. மாமா மத்தியானம் பூராவும் மாடி மேலதான் இருப்பாராம்.

''டேய் அசடு! என்ன பாக்கறே! இறங்குடா கீழே'' —மாமா அதட்டினுர்.

திடுக்கிட்டுப் போய் கீழே குதிச்சேன்மாமா கீழே இறங்கி நின்னுண்டிருந்தார். சுப்பன் மாடுகளே அவிழ்த்துக் கொண்டிருந்தான்.

''ரொம்ப நன்னுயிருக்கு மாமா!'' என்று சொல்லிக் கொண்டே திரும்பினேன். ஆனு, மாமா என்னேப் பார்க்கலே. வேறே எங்கேயோ பார்த்திண்டிருந்தார். கொஞ்சதூரத்திலிருந்த பெரிய மாமரத்தின் பக்கமா பார்த்துண்டிருந்தார்.

அங்கே என்ன பார்த்துண்டிருக்கார்? எனக்குப் புரியல்லே. ஒரு வேலே பூவும் பிஞ்சுமா இருக்கற மாமரத்திலே எத்தனே மாம்பழம் பழுத்திருக்கும்னு பார்க்கருரோ? இருக்காது! ஒரு வேளே இந்த மாமரத்தடியிலே ஈஸிச்சேரைப் போட்டுண்டு தூங்கினு நன்னுயிருக்கும்னு நினேக்கிருரோ? இருக்கும்! இருக்கும்! அவர் நன்னு தூங்கட்டும் நான் போய் இந்த மாந்தோப்பையே ஒரு சுத்து சுத்திட்டு வந்துடறேன்னு நினேச்சிண்டிருந்தேன். ஆனு மாமாவோட பார்வை அந்த மாமரத்தின் பக்கத்திலே இருந்து திரும்பவேயில்லே. அவர் முகத்தையே உத்துப் பார்த்தேன். ஒரு நிமிஷம் எனக்கே தோணித்து ஏன் இந்த மாதிரி—அம்மாஞ்சி

மாதிரி—மாமாவோட முகத்தையே உத்துப்பார்க்கறேம்னு ! ஆனு வரவர அவர் கண்ரெண்டும் பெரிசாகிக் கொண்டே போச்சு ! நிறம் சிவப்பாயிண்டே போச்சு. அவர் உதட்டைக் கடித்துக் கொண்டே கையிலேயிருந்த தோல் பையை இறுக்கிக் கொண்டிருந்தார் எனக்குப் பயமாபோச்சு!

''மாமா... மாமா... என்னைப் பாருங்கோ''ன்னு கத்திட்டேன்.

அவ்வளவுதான் ! திடுக்கிட்டுத் திரும்பினுர் மாமா.

''என்னடா சனியனே ! எங்கயாவது போய்த் தொலையேன் ! போ. தோப்பை எல்லாம் நன்னுச் சுத்திப்பாத்திட்டு சாயங்காலம் வண்டி பூட்டிறதுக்குள்ளே வந்துடு' ன்னு சொல்லிட்டுத் திரும்பி மாடிப்படி ஏறத் தொடங்கினுர்.

எனக்கே ஒரு நிமிஷம் அவமானமா இருந்தது! நாக்கைப் பிடுங்கிண்டுச் செத்துப் போயிடலாம் போலத் தோணித்து ! இந்த மாதிரித்தான் நான் அடிக்கடி ஒன்னுமில்லாததுக்கெல்லாம் கத்தரேணும். மாமா அடிக்கடி சொல்லறது இது !

திரும்பிப்பார்த்தேன். மாமா பார்த்திண்டிருந்த அதே மாமரத்தடியை பார்த்தேன். ஒண்ணும் புலப்படவில்லை. அடடே ! அப்பாத் தான் எனக்கு மூளேலேபட்டுது மாமாவுக்கு ஒண்ணரைக் கண்ணுன்னு ! அப்போ அவர் மாமரத்தடியை பார்த்திண்டிருக்கவில்லை. வேறெ எங்கேயோ பார்த்திண்டிருந்து இருக்கார் ! திரும்பிப் பார்த்தேன். மாமாவைக் காணேும். மாடி மேலே போயிட்டார் போலிருக்கு.

அவரை மாதிரியே நானும் ஒண்ணரைக் கண் வைச்சிண்டு பார்த்தேன். அப்போதான் புரிஞ்சுது ! மாமாவோட பார்வை எங்கே போயிருந்ததுன்னு ! மாமாவுக்கு நேர் மேற்கே ஒரு பெரிய வைக்கப் போர் இருந்தது. அதுமேல சாய்ஞ்சிண்டு படுத்திருந்தா கண்ணம்மா. அவளை அடிக்கடி பார்த்திருக்கேன். தோப்பிலேயிருந்து காய்கறி எல்லாம் எடுத்திண்டு ஆத்துக்கு வருவாள். அவளையே ஏன் மாமா பார்த்திண்டிருக்கணம்? பாவம், நன்னு தூங்கிண்டு இருந்தா! அவ ஒருக்களித்துப்

படுத்திடிருந்த அந்த நிலை இன்னும் கண்ணு முன்னாலே வரது மாமாவோட கண்ணு ரெண்டும் அப்படிப் போனதுக்கு காரணம்...? அதே மாதிரி அவர் பாக்கறதை அதுக்கு முன்னாலே ரெண்டு தரம் பார்த்திருக்கேன்!

ஒரு தரம் மாமா ஆத்திலே மாடியிலே உட்கார்த்திருந்தார். காலம்பற எட்டு மணி தான் இருக்கும். வேலைக்காரிக்கு அன்னைக்கு உடம்பு முடியல்லேன்னுட்டு அவ பொண்ணு விட்டைப்பெருக்க வந்திருந்தா. நான் மாமாவுக்கு இட்டிலி பலகாரம் எடுத்திண்டு மாடிக்குப் போனபோது அவ மாமா ரூமைப் பெருக்கிண்டிந்தாள். மாமா வராந்தாவிலேயே நின்னுண்டு இருந்தார். அப்போ அவர் கண்ணு ரெண்டும் மிளகாய்ப் பழம் மாதிரிச் சிவந்திருந்தது. நான்பாட்டுக்கு இட்டிலித் தட்டை ரூமிலே வச்சுட்டுக் கிழே போயிட்டேன். எனக்கு ஒன்னும் வேலையில்லையா என்ன? அந்தப் பொண்ணு அதுக்கப்புறம் வரவேயில்லே.

இன்னொரு சமயம் மத்தியானம் இருக்கும். மாமா அவர் ரூமிலே கட்டில்லே உட்கார்ந்திருந்தார். மாமி அவர் மடியிலே தலையை வச்சுப் படுத்துண்டு என்னவோ சொல்லிச் சிரிச்சிண்டிருந்தா. தபால்காரன் கொடுத்த கவரை மாமாகிட்டே கொடுக்கலாம்னு அவர் ரூமுக்குப் போனேன். என்னைக் கண்டதும் மாமி திடீர்னு எழுந்திருந்து உட்கார்ந்துட்டா. அப்போ மாமா முழிச்ச முழியைப் பார்க்கணுமே! ஒரு நிமிஷம் என் உடம்பு உறைஞ்சு போச்சு! ''நீங்க அப்படியே படுத்துக்குங்கோ மாமி''ன்னு நான் வெளியே வந்துட்டேன். மாமியோட தூக்கத்தைக் கலைச்சுட்டேன்னி மாமாவுக்கு கோபம் போலிருக்குன்னு நினைச்சுண்டேன்.

அந்த ரெண்டு தடவை நடந்ததையும் நினைச்சுப் பார்த்துண்டதும்தான் எனக்குத் தோணித்து — ஏன் மாமாவுக்கு கண் வெந்து போச்சுண்டு! ஆனா மாமா என்னைத் திட்டினதுதான் எனக்கு வருத்தமாயிருந்தது.

நேரே கால் போன போக்கில் விடுவிடுன்னு தோப்புக்குள்ளே போயிட்டேன். தினுசு தினுசா பருத்த மாமரங்களைப் பார்த்ததுமே மாமா திட்டினது எல்லாம்

மறந்து போயிடுத்து. அப்படியே ஒரு ஒரு மணி நேரம் கழிஞ்சிருக்கும். திடீர்னு ஒரு ஆசை தோணித்து — மாடி மேலே எல்லாம் ஏறிப் பார்க்கலாமேன்னு. உடனே விடு விடுன்னு தோப்பு வீட்டுக்குப் போனேன். மாடிமேலே ஏறத் தொடங்கினு ஒரு சத்தம்! அது மாமா ரூமிமேலேயிருந்து வந்துது. வேகமா ஓடிப்போய் பார்த்தேன் ரூம் கதவு சாத்தியிருந்தது. உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டிருந்தது. மெதுவா ஒரு ஜன்னலைத் திறந்து பார்த்தேன் பார்த்தா ...உள்ளே...

மாமா நின்னிண்டிருந்தார். அவர் பக்கத்திலே அந்தப் பொண்ணு—வைக்கப் போரிலே படுத்திண்டிருந்த அந்தப் பொண்ணு — நின்னிண்டிருந்தா. அவ கையை மாமா பிடிச்சிண்டிருந்தார். ரெண்டு பேரும் சண்டை போடற மாதிரி அவ திமிற, இவர் பிடிக்க, அவ கத்த இப்படியா நடந்திண்டிருந்தது. எனக்கு உடம்பிலே என்னவோ போல இருந்தது. என்னையறியாமலயே என்னவோ ஒண்ணு என் மனசிலே குறுகுறுத்தது. கூடவே மாமாவோட அந்த ரெண்டு செவந்த கண்ணும் மனசிலே தோணித்து எனக்கு ரொம்ப பயமாய்ப் போயிருந்தது! எக்கேடும் கெட்டுப் போகட்டும். யாரேனும் யாரோடும் சண்டை போட்டுக் கொண்டா நமக்கென்னன்னுட்டு நான் கீழே இறங்க ஆரம்பிச்சுட்டேன். திடீல்னு எனக்கு எதிரே சுப்பனும், அவன் கூட இன்னொரு தோட்டக்காரனும் விழுந்தடிச்சுண்டு மாடிமேலே ஏறி ஓடி வந்தான்கள்.

''டேய்! மரியாதையா கதவைத் திறக்கறயா இல்லையா?'' தோட்டக்காரன் கத்தினான்.

''என்னடா பேச்சு வேண்டியிருக்கு? கடப்பாரையாலே கதவைப் பொளடா'' ன்னு சுப்பன் கத்தினான்.

அவ்வளவுதான்! அடுத்த நிமிஷம் கடப்பாரை கதவை பெடிப் பொடியாக்கிடுத்து. தோட்டக் காரனுக்குத்தான் எவ்வளவு பலம்! பார்த்துண்டேயிருந்தேன். எனக்குக் கையும் ஓடலே காலும் ஓடலே. மாமாவை அடிக்கத்தான் அவா வந்திருக்காளோன்னு நினைச்சேன். கூடவே 'மாமாவை அவா ஏன் அடிக்கணும்? மாமாவோட வேலைக்காரா தானே அவா?. அவர் தானே அவாளுக்குப் பணம் குடுக்கிறார்' ன்னும் நினைச்சேன்.

ஏதோ பிரமை பிடிச்சாப் போலேன்னு சொல்லுவரளே! அப்படி நின்னிண்டிருந்தேன். இப்பத்தான் புரியறது! நான் உண்மையிலேயே அம்மாஞ்சி தான்னுட்டு.

நான் பார்த்துண்டு நிக்கும் போதே அந்தப் பொண்ணு வெளியே ஓடி வ ந் த து. வராந்தா வழியே வந்து தட தடன்னு மாடிப்படி வழியே கீழே இறங்கி எங்கேயோ ஓடித்து. என்னைத் தாண்டி ஓடும்போதுதான் அதை நன்னுப் பார்த்தேன். சீச்சீ! அதும் மேலே துணியே இல்லை! இடுப்பிலே மட்டும் ஒரு துண்டத்தைக்கட்டிண்டு இருந்தது. சீச்சி! அ சிங் க ம் பிடிச் சது. க ண் ணை இ று க மூடிண்டுட்டேன். திடீர்னு மேலேயிருந்து ஒரே சத்தம். மாமாதான் அ ல றி ஞ ர்! ''ஐயையோ! ஐயையோ!''ன்னு ச த் த ம் கேட்டுது. எனக்கு ஒரு நிமிஷம் ஒண்ணுமே புரியல்லை. என்ன பண்ணனும்னே தோணல்லை. என்னையிம் அறியாமே நான் ஒரே ஒட்டமா ஓடி வந்துட் டே ன். தோட்டத்திலேயிருந்து ஆத்துக்குரெண்டுமைல். எப்படித்தான் ஓடி வந்தேனோ எனக்கே புரியல்லை. அங்கே பிடிச்ச ஓட்டம் இங்கே வந்து தான் நின்னேன்.

மாமி பதறிப் போய், ''என்னடா சாமு! என்னடா'' அப்பிடின்னு கேட்டா. பதட்டத்திலே என்னை அம்மாஞ்சின்னு கூப்பிடறதைக்கூட மறந்துட்டா. எனக்கு மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கித்து. நிலைச்சு நிக்க முடியல்லை. ''மாமா......ம ா ம ா ை வ த் தோட்டக்காரனும் ... சு ப் ப னும்...அடிக்கறு...''ன்னுட்டு அப்படியே உட்கார்ந்துட்டேன்.

மாமி ஒரேயடியாப் பதறிப் போயிட்டா. அ வ ளு க் கு என்ன பண்ணறதுன்னே புரியல்லை. வேலைக்கார மணியன் தான் ஓடி வந்தான். ''நான் போய் பார்த்துட்டு வரேம்மா''ன்னு சொல்லிட்டு ஒரே ஓட்டமா தோப்புப் பக்கம் ஓடினன்.

நான் அப்ப சாய்ந்தது. அப்படியே உட்கார்ந்திருக்கேன். இப்பத்தான் எனக்குத் தோணறது—அதுக்கு என்ன காரணம்னு! இந்த அசட்டு அம்மாஞ்சி மூளைக்கு இப்பத் தான் தோணறது. எனக்கு நானே எவ்வளவோ வளர்ந்

துட்டாப்போல தோண்றது! எனக்குள்ளே தூங்கிண்டிருந்தது-இன்னிக்குதிடீர்னு முழிச்சிண்டாப் போலப் படறது. அது என்னமோ எனக்கே புரியாத புதிராயிருக்கு, இதோ, என் உடம்பை அது என்னவோ பண்ணறது! உடம்பே புல்லரிக்கிறது!

நிமிர்ந்து பார்க்கறேன். எல்லோரும் நின்னிண்டிருந்தா. எல்லோர் முகத்திலேயும் ஒரு இனந்தெரியாத கலவரம் பரவியிருக்கு! பாட்டி மூக்கைப் பிழிஞ்சு போட்டுண்டேயிருந்தா. மாமி 'அவருக்கு என்ன ஆச்சோ''ன்னு விசும்பி விசும்பி அழறு. அத்தை அவளைத் தேத்தறு. எனக்கோ... ''நான் ஒண்ணும் அம்மாஞ்சியில்லை''ன்னு கத்தணும்போல இருக்கு. தொண்டை வரைக்கும் வார்த்தைகள் வந்துடுத்து.

திடீர்னு வாசல்லே ஒரு சத்தம் கேட்கறது. மணியன் வில்வண்டியிலேயிருந்து மாமாவை இறக்கிறுன். அவர் தலையிலே ஒரு பெரிய கட்டுப் போட்டிருந்தது அது பூராவும் ஒரே ரத்தமாயிருந்தது. அத்தனை பேரும் பதறி அடிச்சுண்டு கூட்டமாக் கூடறு. மாமி ஓடிப் போய் மாமாவைத் தாங்கறு. மாமியும் மணியனும் மாமாவைப் படுக்கையிலே படுக்க வைக்கறு. மாமா மயக்கமா கண்ணை மூடிண்டிருக்கார்.

''டேய் வைத்தா...ஓடுடா ...ஓடு ... டாக்டரைக் கூட்டிண்டு வா...''ன்னு மாமி கத்தறுள்.

''என்னடா மணியா, ஏன் இப்படி...என்ன இது? யார் செய்தா?''—ன்னு கேட்டுட்டு 'ஓ'ன்னு கத்தி அழறு.

''ஒண்ணுமே தெரியல்லேம்மா. நான் போய்ப் பார்த்தபோது தோப்பு வீட்டிலே யாருமே இல்லே. எசமான் மட்டும்தான் மாடிரூமிலே இப்படி விழுந்து கிடந்தார். ஓடிப்போய் காயத்தைக் கழுவித் துணியாலே கட்டி தூக்கி வந்தேன். யார் செய்த கருமமோ தெரியல்லேயே?''—மணியன் பரபரப்போடு கூவுகிறுன். அவன் முகத்திலேயும் உடம்பிலேயும் கலவரத்தோட சாயை!

எல்லார் பார்வையும் திரும்பவும் என் பக்கமே திரும்பறது.

''டேய்சாமு! மூதேவி! என்னை நடந்ததுன்னு சொல்லித் தொலையேண்டா''— அத்தை கத்தரு. என் தலையைப் பிடிச்சு உலுக்கி சுவற்றோடு சேர்த்து ஓங்கி ஒரு இடி இடிக்கரு. தலைக்குள்ளே ஆயிரம் மின் வெட்டு பளிச்சிடறது.

''ம்ஹூம்...நான் சொல்ல மாட்டேன். அந்தக் காரணத்தை மட்டும் நான் சொல்லிட்டா அப்புறம் என்ன ஆகும்? இவா முன்னடியே எப்படி அதைச் சொல்லறது? நான் அம்மாஞ்சியாயிருந்தப்போ வேணும்னு அதைச் சொல்லியிருப்பேனே என்னவோ? ஆனா இப்போ நான் அம்மாஞ்சியில்லை. அதனலே நான் அதைச் சொல்லவே மாட்டேன்.'

'அதைச் சொன்னேன்னு என்ன நடக்கும்? மாமாவோட மரியாதையே போயிடும். நான் சொல்லவே மாட்டேன்.

ஆனாலும் கத்தறேன்.

''அதுதான் சொன்னேனே! தோட்டக்காரனும் சுப்பனும் மாமாவை அடிச்சான்னு! திரும்பத் திரும்ப என்னையே கேட்டா எப்படி''-என்னோட குரல்லே என்னையும் அறியாம ஒரு வேகம் ஒரு வெறுப்பு— வெளிப்படறது.

மாவாவின் பக்கம் பாக்கறேன். அவர் தலையைச் சுத்தி ஒரே இரத்த மயம்! துணியே செவப்பாத் தெரியறது! திடீர்னு மாமா மேலேஎனக்கு ஒரே அருவருப்பா இருக்கு! வெறுப்போட முகத்தைத் திருப்பிக்கறேன்!

அத்தைக்குத் திடீர்னு ஆங்காரம் வறது! ஓடி வந்து என் தலையைப் பிடிச்சுத் திரும்பவும் சுவற்றிலே மோதரு. ''அம்மாஞ்சி சனியனே! என்னதான் நடந்தது சொல்லேன்!''

என் தலைக்குள்ளே ஆயிரம் மின் வெட்டு வெட்டறது. ''நான் ஒண்ணும் அம்மாஞ்சியில்லை''ன்னு மனசுக்குள்ளேயே கத்தறேன், என் காதுக்குள்ளேயே அது ஒரு பெரிய ஓலமாப்படறது.

அப்படியே மயங்கிச் சாயறேன்.

★

இரு நண்பர்கள்

அசோகமித்திரன்

நாங்கள் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தோம். நான் சைகிளைத் தள்ளிக் கொண்டு போக வேண்டியிருந்தது. நடைபாதையில் நல்ல ஜன நெரிசல். போலீஸ்காரர்கள் போக்குவரவு விதிகள் பற்றிக் கண்டிப்பாக இருந்தார்கள் என்று எல்லாருக்கும் தெரியும் 'ஜான் கிரிஸ்ட·.'.பி' என்ற தடிப் புத்தகத்துடனும் அன்னும் இரண்டு ஹோமியோபதி பத்திரிகைகளுடனும் ஆறு மணிக்கு என் நண்பனை அவன் காரியாலயத்தில் பார்க்கப் போயிருந்தேன். என் சைகிளுக்கு விளக்கு கிடையாது. இரவு வந்தபிறகு வெகுதூரம் நான் சைகிளைத் தள்ளிக் கொண்டு போக வேண்டா மென்று நாங்கள் இருவருமே என் வீடு இருக்கும் திசையில் போய்க் கொண்டிருந்தோம். 'ஜான்கிரிஸ்டஃபி புத்தகத்தை அவனுக்காகவென்றே நான் எடுத்துச் சென்றிருந்தேன். அதை அவன் கையில் வைத்துக் கொண்டு அடிக்கடி அவர் பாண்ட்டின் வலது கையைத் தடவிப் பார்த்துக் கொண்டிருந்தான். அது போக்குவரவு மிகுந்த சாலை. சாலையின் நடுவே மெல்லியதாகப் பாத்தி மாதிரிக் கட்டிச் சில செடிகளையும் வளர்த்திருந்தார்கள். அந்தப் பாத்தி இருதரப்புப் போக்குவரவைத் தடுத்துச் சீர்படுத்துவதாக இருந்தது. வேறு பக்கவாட்டுத் தெருக்களில் போவதற்குச் சௌகரியமாகப் பாத்தியை அங்கங்கே இடைவெளி விட்டு அமைத்திருந்தார்கள். அம்மாதிரி ஒரு இடைவெளியடைந்தபோது நான் அவனை, ''காப்பி சாப்பிடலாமா?'' என்று கேட்டேன். அவன், ''சரி''. என்று சொல்ல நாங்கள் இருவரும் சாலையிலேயே தொடர்ந்து சென்றோம்,

''இங்கே ஒரு இடம் கூடச் சிறிது நேரம் உட்கார்ந்துப் பேசிவிட்டுப் போகிற மாதிரி இல்லை'', என்றேன்.

''ஆமாம்''

''ஹோட்டலுக்கும்போவது காப்பிக்கு மட்டும் என்றில்லை.

எங்கேயாவது சிறிது நேரம் உட்கார்ந்திருந்து பேசிவிட்டுப் போகிற மாதிரி ஏதாவது இடம் இருக்கலாம்.''

''ஆமாம் ஆனல் அந்த இடத்திற்குப் காப்பி மாதிரி ஏதாவது காரணம் காட்டாமல் போனல் ஏதோ போலிருக்கும்.''

''அப்போது தொழிற்சாலை மசி படிந்த உடையுடன் ஐந்தாறு பேர் கூட்டமாக எங்களுக்கு எதிராக வந்தார்கள். அவர்கள் எங்களைக் கடக்கும் வரை என் நண்பன் ஜான் கிரிஸ்ட்ஃபி புத்தகத்தை அவனது வலது துடையில் அழுத்திப் பிடித்து வைத்துக் கொண்டான்.

அது கூட்டம் நிறைந்த ஹோட்டல். வெளியில் இருபதுக்கும் மேலாக சைகிள்கள் நிறுத்தப்பட்டிருந்தன. உள்ளே மேஜைகளும் நாற்காலிகளும் நெருக்கமாகப் போட்டு ஒடிந்து விழுவது போல இருக்கும் அந்த ஹோட்டல் சர்வர்கள் மட்டும் புகுந்து புகுந்து செல்லும்படியான இடைவெளி இருந்தது. நான் ஸ்பெஷல் காப்பி இரண்டு கப்புகளுக்குச் சொல்லிவிட்டு அந்த சர்வர் நகர்ந்து சென்றவுடன் என் நண்பனிடம் சொன்னேன், ''இருபது வருஷங்களாக இந்த ஹோட்டலுக்கு வந்து கொண்டிருக்கிறேன்''

''அப்படியா? நானும் நிறைய நாட்களாகத்தான் இதைக் கவனித்து வருகிறேன் சமீப காலங்களில் இது பெரிதாகப் போயிருக்கிறது.''

காப்பி ஸ்ட்ராங்காக, கசப்பாக, நன்ருக இருந்தது. நான் பில்லைக் கொடுத்தேன். நாங்கள் ஹோட்டல் படி கீழிறங்கி வரும்போது என் நண்பன் மீண்டும் அவனுடைய பையைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

நாங்கள் குறுகலான, அதிக ஜன நடமாட்டம் இல்லாத தெரு ஒன்றில் புகுந்து மௌனமாக நடந்து கொண்டிருந்தோம், புதிதாக வெள்ளையடிக்கப்பட்ட ஒரு பழங்காலத்தியக் கட்டிடத்தைத் தாண்டிச் சென்ருேம். என் நண்பன் கேட்டான், ''இது யாருடையது தெரியுமா?''

''ஒரு ஆந்திர ஜமீந்தாருடையது. சில நாட்கள் முன்பு

ஒரு பஸ் கம்பெனி வாங்கிவிட்டது."

"அப்படியா?"

"நான் நாடகப் பள்ளிக்கு ஒரு இடம் வேண்டித் தேடும்போது இந்த வீட்டைப் பற்றித் தெரிய வந்தது. இது ரொம்ப வருஷங்களாகப் பூட்டியே கிடந்தது. நான் உள்ளே போய்க் கேட்டேன். அப்போதுதான் காவல்காரன் ஜமீன்தாருக்கும் பஸ் கம்பெனிக்கும் பேச்சு நடந்து கொண்டிருக்கிறது என்கிற தகவலைச் சொன்னான். இப்போது வீட்டைப் பார்க்கும்போது அது கைமாறி விட்டது என்று தெரிகிறது.

நாங்கள் இப்போது ஒரு விளையாட்டு மைதானம் பக்கத்தில் இருந்தோம். சிறுவர்கள் அவர்கள் ஆட்டங்களை முடித்துக் கொண்டிருந்தார்கள்.

"ஜமீன்தார் வீடும் அந்த வீடும் எனக்கு மிகவும் பிடித்தவை," என்று நான் விளையாட்டு மைதானத்திற்கு அப்பாலிருந்த இன்னொரு பழைய மாளிகையைக் காண்பித்தேன் அது சில மரங்களின் இடைவெளியில்தான் பார்வைக்குத் தென்பட்டது.

"எவ்வளவு அழகான கட்டிடம்!" என்று என் நண்பன் சொன்னான். அப்புறம் கூறினான், "அதில் ஒரு கம்பீரம் இருக்கிறது. ஆனல் அம்மாதிரிக் கட்டிடங்கள் இடிக்கப்பட்டு வருகின்றன. எவ்வளவு நன்ருகயிருக்கிறது—அந்தக் கட்டிடம், இந்த மரங்கள், பின்னல் ஆகாயம்!

மாலைச் சூரியன் அந்தமாளிகைக்குப் பின்புறத்திலிருந்து மிருதுவான வண்ணங்களை அடிவானத்தில் கொட்டிக் கொண்டிருந்தான்.

நாங்கள் விளையாட்டு மைதானத்தைக் கடந்து சென்ரேம். என் நண்பன் சொன்ஞன், "நான் சில வாரங்களாக ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு வருகிறேன்."

"அது மிகவும் நல்லது."

"வேடிக்கையாக இல்லை? நான் இவ்வளவு வருஷங்களாக உயிரோடிருக்கிறேன், ஆனல் ஆகாயத்தை இன்னும் சரியாகப் பார்த்ததில்லை!"

''ஆகாயமே அற்புதமானது. ஆகாயத்தைப் பார்த்தபடியே இருக்க முடியுமானால் அது ஒருவனை வெகு தூரம் கொண்டு செல்லமுடியும்.''

நாங்கள் இப்போது ஒரு பூங்கா அருகில் இருந்தோம். ''சிறிது நேரம் இங்கே உட்கார்ந்துபோகலாமா?'' என்று நான் கேட்டேன்.

''சரி''

நான் சைகிளை நிறுத்திப் பூட்டினேன். பூங்கா மிகவும் சிறியது. அதற்குள் போகும் ஒரு வழியும் இருப்புப் பட்டை வளையம் பொருத்தி ஒவ்வொருவராக மட்டுமே போகும்படியாக இருந்தது. பெஞ்சுகளே கிடையாது. நாங்கள் இருவரும் செருப்புகளை உதறிவிட்டுப் புல் தரையில் உட்கார்ந்து கொண்டோம். சிறிது நேரம் கழித்து நான் கேட்டேன், ''நீ நட்சத்திரங்களையும் பார்ப்பது உண்டா?''

அவன் ஒரு கணம் தயங்கினான். பிறகு, ''சிறிது காலமாகத்தான்'' என்றான்.

''அவைகளின் பெயர்கள் தெரியுமா?''

''இல்லை, இல்லை. எனக்குத் தெரியாது; தெரிந்து கொள்ளவும் முயற்சி செய்யவில்லை.''

''ஒரு விதத்தில் பெயர்கள் தெரிந்து கொள்ளாமல் இருப்பது நல்லதுதான்.''

''ஆமாம். அப்புறம் பெயர்களை வைத்துக் கொண்டு அவைகளுக்கான நட்சத்திரங்களைத் தேடுவதிலேயே நேரம் போய்விடும். எனக்கு எது நட்சத்திரம் எது கிரகம்என்று கூடத் தெரியாது. நான் சில காலமாகவே ஒன்றைப் பார்த்துக் கொண்டு வருகிறேன். நேற்றுதான் அது சுக்கிரன் என்று தெரிந்தது.''

''நானும் சுக்கிரனைக் கவனித்திருக்கிறேன். 'வானவில்' எழுதிக் கொண்டிருக்கும் போது மழைக் கீற்றுக் கொட்டகையில்தான் நிறைய நேரம் இருந்தேன்—உனக்கே தெரியும் அது. அப்போது நான் ஆகாயத்தைப் பார்த்தபடி இருப்பேன். சுக்கிரன் அங்கிருந்து மின்னிக் கொண்டிருக்கும்.''

நீண்ட நேரம் பேசாமல் இருந்தோம். அவன் சொன்னான், ''சுக்கிரனின் பாதிப்பு

எனக்கு அதிகம் என்கிருர் கர்.

நான் சிறிது நெருங்கி உட்கார்ந்து கொண்டேன்.

''என் வாழ்க்கையை அமைக்கும் கிரகங்களில் சுக்கிரன் தான் தலைவன்மாதிரி.''

''ஜாதகமா கைரேகையா?''

''நாடி. நான் நாடி ஜோசியர் பற்றி முன்பு கூடச்சொல்லியிருக்கிறேன் நுணுக்கமாகச் செய்யுள்கள் எழுதிய பழைய ஏட்டுச் சுவடிகள் அவரிடம் ஏராளமாகக் கிடக்கிறது. அவர் நம் ஜாதகத்தை வைத்துக் கொண்டு ஏதோ கணக்குகள் போட்டு அதை வைத்து ஏட்டுச் சுவடி அட்டவணை ஒன்றைப் பார்த்துப் பிறகுச் சுவடிக் கட்டுகளிலிருந்து ஒரு ஓலையை எடுத்துப் படிக்க ஆரம்பிக்கிருர். நம் பெயர், தாயார் தகப்பனுர் பெயர், பிறந்த தகவல் படிப்பு, வேலை எல்லாம் ஆச்சரியப்படும்படியாகச் சரியாக இருக்கின்றன, இதெல்லாம் எத்தனையோ வருஷங்களுக்கு முன்னுல் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனுல் இவ்வளவு சரியாக எப்படி எழுத முடிந்தது என்று ஆச்சரியமாக இருக்கிறது, அசுர குருவான சுக்கிரன்தான் என்னைத் தீவிரமாகப் பார்க்கிருனும்—'' ஒரு இடைவெளிவிட்டு நண்பன் முடித்தான் — ''வக்கிரமாக''

நாங்கள் எங்கோ பார்த்த வண்ணம் இருந்தோம். அவன் மீண்டும் சொன்னுன், நான் கல்யாணம் செய்து கொண்டால் அவள் சீக்கிரத்தில் இறந்து விடுவாளாம்.''

''அப்படியா? கல்யாணம் பற்றி ஏதாவது யோசித்து வைத்திருக்கிருயா? உன் மன தில் யாராவது இருக்கிருர்களா?''

''இல்லை. இரண்டு வருஷங்கள் முன்பு கல்யாணத்தைப் பற்றி நிறைய யோசித்துக் கொண்டிருந்து மிகவும் விருப்பத்துடன்கூட இருந்தேன். ஆனுல் இப்போது எனக்கு அப்படித் தோன்றவில்லை நான் கலங்கிப் போயிருக்கிறேன்''

நான் கவலையுடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''இந்தக் காலத்தில் ஒரு ஒழுங்கான, சந்தோஷமான கல்யாண வாழ்க்கையைக் கற்

பணை செய்து பார்ப்பதுகூடக் கஷ்டமாக இருக்கிறது. நான் எல்லாரையும் கவனித்தபடி தான் இருக்கிறேன். அதிலும் முக்கியமாகப் பெண்களை— வீட்டில், வெளியில், எங்கும், எப்போதும். எனக்கு ஒன்றும் திருப்தியளிப்பதாக இல்லை. எவ்வளவோ ஆட்டபாட்டங்கள், மூச்சுவிட முடியாத பரபரப்பு, சிரிப்பு, கொம்மாளம் எல்லாவற்றுக்கும் அடியில், வாழ்க்கையின் அடித்தளத்திலேயே துக்கமும் துயரமும் தான் எனக்குப் படுகிறது. ஒருவரையொருவர் உள்ளூரத் துவேஷித்துக் கொண்டு கடித்துக் குதறிக் கொண்டு இருப்பதைத்தான் பார்க்க முடிகிறது."

எனக்கு என் நண்பனைப் பற்றிக் கவலை அதிகமாயிற்று.

"பத்து வயது நிரம்புவதற்குள் ஒரு பெண்ணுக்கு என்னவெல்லாமோ —வேண்டியிருக்கிறது—கூட்டம், கேளிக்கை, பத்திரிகைகள், பரபரப்பு புத்தகங்கள், சினிமா அவளுக்கு இவை நிறையவும் கிடைக்கின்றன. ஒன்றும் தடையே கிடையாது. ஏனென்றால் பெரியவர்களே இவைகளுக்காக பறந்தோடுகிறார்கள். என்ன இருக்கிறது? இவற்றில் வக்கிர எண்ணங்கள், சீரழிவு, கொலை, சோரம், தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வது. தலை நிறையக் கொலையும் சோரமும், தற்கொலையும் கற்பழிப்பும் வாழ்வைப் பற்றிக் கோணலான எண்ணங்களும் கொண்ட ஒரு பெண்ணால் எப்படி ஒரு ஒழுங்கான சந்தோஷமான மனைவியாகமுடியும்? கணக்கில்லாத அபத்தமான நச்சு எண்ணங்களும் ஆசைகளும் வருஷக் கணக்காகக் கட்டுப்பாடற்று வளர்ந்த பிறகு ஒரு பெண்ணினால் எப்படி அவளும் மகிழ்ச்சியுடன் இருந்து இன்னொருவனுக்கும் மகிழ்ச்சி தர முடியும்? எப்படி அவளால் ஒரு நல்ல தாயாகி, ஒரு நல்ல குடும்பத்தை, ஒரு நல்ல சமுதாயத்தை, ஒரு நல்ல தேசத்தை உண்டாக்க முடியும்? இந்தப் பைத்தியக்காரத்தனம் இந்தப் பிரளயம் —எல்லாரும் கண் மூடிக் குருடர்கள் போல இருக்கிறார்கள்."

என்னால் அவனை மேலும் பேசிக் கொண்டிருக்கத்தான் விட முடிந்தது.

"எனக்கு எப்படி என்று சொல்ல முடியவில்லை, ஆனால் எல்லாம் கண் முன்னால் தெரி

கிறது. நான் கல்யாணம் வேண்டாமென்று சொல்ல வில்லை, அது சந்தோஷத்தை உண்டு பண்ணுமானல் அனல் உண்மையான சந்தோஷம் எப்படியிருக்கும் ஆசை அபி லாசைகள் ஒழுங்காகவும்ஒழுங் குபடுத்தப்படாமலும் இருந் தால்? யாருக்கு ஒழுங்கான ஆசைகள் வைத்திருக்க அக்க றையிருக்கிறது?''

திடீரென்று என்னை அழுத் திக் கொண்டிருந்த பளு குறைந்தது. நான் புல் தரை யில் காலை நீட்டிப் படுத்துக் கொண்டேன்,

நீண்ட நேரம் மௌனமாக இருந்தோம். அவன் மீண்டும் பேசினன். இப்போது அவன் குரலில் தாபமும் தன்னைத் தானே வருத்திக் கொள்வதும் குறைந்திருந்தது. அவன் சொன்னன், ''இந்த உலகத் திற்கு விடிவு காலம் உண்டா என்றே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. எல்லாரும் வாழ்வை இன்னமும் இன்ன மும் சிக்கலாக்கி, துன்பம் நிறைந்ததாக்கத் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கிருர்கள். இந்தத் தலைமுறை மிகவும் அதிர்ஷ்டக் கட்டை. வரப் போகும் தலைமுறைகள் இன்ன மும் துரதிர்ஷ்டம் வாய்ந்த தாகத்தான் இப்போது காண் கிறது, ஜன சமுகமோ பெரிய சாபக்கேடில் விழுந்து விட் டது.''

இப்போது நன்ருக இருட்டி விட்டது. வீடுகளிலும் எங்கோ மூலைகளில் தெரு விளக்குகள் மட்டும் மங்கலாகத் தெரிந் தன. புல் தரையில் உட்கார வேண்டியதைப் பொருட்படுத் தாத ஐந்தாறு பேர்களும் பூங் காவைவிட்டு வெளியேறி நாங் கள் இருவர் மட்டும் தனியாக இருந்தோம். சுற்றுப்புறத்தில் சில ரேடியோக்கள் பாடின. குழந்தைகள் அவர்கள் பள்ளிக் கூடப் பாடங்களைத் தொண்டை கிழியப் படித்துக் கொண்டிருந்தார்கள்; எப் போதோ ஒரு சமயம் தெரு வில் மோட்டார் கார் தடு மாறிக் கொண்டு போயிற்று, ஒரு ஆகாய விமானம் அதன் பச்சை சிவப்பு விளக்குகளை ஒரு விசித்திரத்தாள லயத்தில் ஏற்றி அணைத்துக் கொண்டு பறந்து போயிற்று. பொழு தோடு கூட்டையடையாத ஒரு பறவை அங்கும் இடிபட் டுக் கொண்டு பயத்தில் தீனக் குரல் எழுப்பிக் கொண்டிருந் தது. அப்படியும் அப்போது ஓர் ஆழ்ந்த மௌனம் நிலவி யது. என் நண்பன் சிரிக்க

ஆரம்பித்தான். உடலெல்லாம் அதிர அவன் வெகு நேரம் சிரித்துக் கொண்டிருந்தான்.

அவன் சிரித்து முடிந்ததும் நான் பேசினேன், ''இது உனக்கு உலகத்தின் மீதுள்ள அக்கரையைக் காட்டுகிறது, ஆனால் அது எந்த அளவுக்குப் பொருத்தம், நியாயம் என்றும் தெரிந்து கொள்ள வேண்டும், ஒரு வேளை இது ஒரு விதமான அகங்காரமாகக்கூட இருக்கலாம். உலகம் ஒருவரைப் பொறுத்து அந்த ஒருவருடன் முடிந்து விடுவதில்லை.''

''ஆமாம், ஆமாம். அங்கேதான் இன்னொரு ஆச்சரியமானது நிகழ்கிறது, உலகத்திற்கான இந்தத் தாங்க முடியாத கவலையுடன் ஒரு பொங்கி வரும் ஆனந்தமும் இருக்கிறது.'' அவன் மீண்டும் சிரிக்க அரம்பித்தான். சட்டென்று ''நாம் போகலாமா?' என்று கேட்டான்.

நாங்கள் எழுந்திருந்து எங்கள் பின்புறத்தைத் தட்டிவிட்டுக் கொண்டுப் பூங்கா வெளியே வந்தோம். நான் சைக்கிள் பூட்டைத் திறந்ததும் நாங்கள் இருவரும் மெதுவாக நடக்க ஆரம்பித்தோம். அவன் திடீரென்று ''நான் கொண்டுவந் திருக்கிறேன்'' என்றான். அவனது வலது பையிலிருந்து ஒரு காகித உறையை என்னிடம் தர நான் அதை என் சட்டைப் பைக்குள் உடனடியாகப் போட்டுக்கொண்டேன். அவன் சொன்னான், ''இரண்டு நூறு ரூபாய் நோட்டாக இருக்கிறது''

''சரி''

நாங்கள் சிறிது நேரம் பேசவில்லை. அவன் ஒரு சிறு தடுமாற்றத்துடன் கேட்டான், ''இப்போது எப்படி இருக்கிறது?''

அவனுக்கே அந்த கேள்வி எது என்று சரியாகப் புரிந்து கொள்ளும் படியாகக் கேட்கப்படவில்லை என்று தோன்றியிருக்க வேண்டும். அவன்கேட்டான், ''இப்போது நீ எப்படி சமாளித்துக்கொண்டிருக்கிறாய் உன்னை யார் பார்த்துக்கொள்கிறார்கள்? உன்னை நீயே சரியாகப் பார்த்துக்கொள்ள முடிகிறதா?''

நான் சொன்னேன். ''அதெல்லாம் சரியாக இருக்கிறது. என்னை நிறையப்

பார்த்துக் கொள் கிறார்கள். ஒரு வேளை அதுதான் என்னைக் கெடுத்து விட்டதோ என்னவோ; என் சகோதரர்கள் இருக்கிறார்கள். இதுவரை ஒன்றும் கவலையில்லை,'

அவன் அவசரம்அவசரமாக ''அப்போது சரி'' என்றான்.

நாங்கள் இன்னும் சிறிது தூரம் கடந்தோம். நான் சொன்னேன், ''இது வரையில் கவலை ஒன்றுமில்லை, ஆனால் எவ்வளவு நாட்கள் இப்படிப் போகமுடியும்? மாதா மாதம் இருநூறு முன்னூறு வேண்டியிருக்கிறது— குறைப்பதற்கு வழியே இல்லை. குழந்தைகள் பெரியவர்களாகிக் கொண்டிருக்கிறார்கள், துணி மணி, பள்ளிக்கூடம்... இது தான் குறைந்த பட்சம். ஆனால் எவ்வளவு நாட்களுக்கு? என் சகோதரர்களின் பொறுப்புகளும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. நான் அவர்கள் மீதே பளு சுமத்திக் கொண்டிருக்க முடிவாது''

''ஆமாம், ஆமாம்''

''ரிட்ரெஞ்ச்மெண்ட் ஆகி இந்த நான்கு வருஷங்களில் நான் சம்பாதித்ததெல்லாம் 'குடை' கதைக்காக ஒரு இருபத்தி நான்கு ரூபாய்; ,விசித்திரக் குழந்தை'க்காகப் பதினைந்து ரூபாய். அப்புறம் அந்த இன்ஸ்டிடியூட்டில் ஒரு வருஷம். ஆனால் அதைச் 'சம்பாத்தியமாகக் கொள்ள முடியாது''

''ஆமாம், ஆமாம்''

''ஆனால் சரியாகி விடும். எல்லாம் சரியாகி விடும். இப்போது பிரச்னை பற்றி முழு உணர்வு ஏற்பட்டிருக்கிறது. ஒரு பிரச்னையைப்பற்றி உண்மை உணர்வே அதைப் பாதி தீர்த்து விட்டது மாதிரி இல்லையா?''

''ஆமாம், ஆமாம்.''

எல்லாம் சீக்கிரம் சரியாகி விடும்.''

''ஆமாம், ஆமாம்''

என் வீட்டிலிருந்து சில கஜங்களே இருந்த பஸ் ஸ்டாண்டை அடைந்தோம். சீக்கிரமே ஒரு பஸ் தென்பட்டது. அவன் சொன்னான், ''என் பஸ் வந்துவிட்டது.''

''அதிர்ஷ்டக்கார 13'' என்று நான் சொன்னேன்,

அது ஒரு 13 தான். என் நண்பன் அதில் ஏறிக்கொண்டான். திரும்பி, ''போய் வருகிறேன்'' என்றான்.

''குட் நைட்''

பஸ் துள்ளிக்கொண்டு முன்னால் நகர்ந்தது. குப்பென்று அது வெளிப்படுத்திய புகை அது சென்று வெகு நேரம் வரை அங்கே காற்றில்மிதந்து கொண்டிருந்தது.

பிள்ளையார் கோவிலில் ஒரு பிணம்

கி. அ. சச்சிதானந்தம்

''ஏண்டா இப்படி மூச்சு எறைக்க எறைக்க ஓடியாறே கம்மனுட்டி மவனே, மொள்ளமா வந்து தொலையறது தானே. அப்படி என்ன குடி முழுகிப் போறவிஷயம்,காலங் காத்தாலே, சனியனே'' திட்டிக்கொண்டு கீழே விழுந்து எழுந்த வையாபுரி தன்மேல் மோதிய சுப்புராயனை அடிக்கத் தடியை ஓங்கினார். ''கிழவா வாயை மூடு விடியற்காலையிலே திட்டாதே உன் ஊத்த வாயாலே'' என்று சொல்லிவிட்டு ஓடிப்போய் விட்டான் சுப்புராயன்.

இன்னும் ஏதாவது பேசினால் தன் மரியாதை போய் விடும் என எண்ணியவாறு, வலிக்கும் தொடையைப்பிடித்துப் பிடித்து அழுத்திக் கொண்டே நடந்தார்.

''படவாப் பயல், தேங்காதிடருத்தான் இவ்வளவு விடிய காலையிலே எழுந்து போயிருக்கான். கையும் களவுமா ஆப்பிட்டவுடனே ஆத்திரம் பொத்துகிட்டு வந்திடுச்சு. பிள்ளையை வளக்கிற பவுசு. இந்சக்காலம் எப்படித்தான்கெட்டுப்போவுதோ சுப்புராயா இரு.இரு,இன்னும் கொஞ்சகாலம் தான் நீ கம்பி என்றத்துக்கு. அங்கே சீக்கிரமாவே போவேடா போவே. இந்தக் கிழவனும் நீ ஜெயிலுக்குப் போறதை பார்க்கத் தாண்டா போறன். அந்தக் காலத்திலே ஆத்திலே கிடந்த தம்பிடியை கொண்டாந்தேன்னு, எங்க ஆத்தா, அதுவும் திருட்டுதான்னு என் தொடையிலே சூடு போட்டாடா. பிள்ளை வளக்கிறளாம் பிள்ளை'' வையாபுரி உரக்கவே பேசிக்கொண்டு ஆற்றை நோக்கிப் போனார்.

காலைக் கடன்களை முடித்து ஆற்றில் குளித்துவிட்டு வீடு திரும்பும் போது வெயில்குறட்டையும் தாண்டி வாயில் அருகே வந்துவிட்டது. சர

வேஷ்டியையும் மேல் துண்டையும் பிழிந்து கொடியில் போட்டு உலர்த்திக்கொண்டிருந்த போது, தன் வீட்டுத் திண்ணையில் ஒவ்வொருவராக நாலைந்து பேர் வந்து தனக்காகக் காத்துக்கொண்டிருப்பது தெரிந்தது. நீரில் திருநீரைக் குழைத்து, நெற்றியிலும் மார்பிலும் கைகளிலும் பட்டைப் பட்டையாக இழத்துக் கொண்டு, முருகன் படத்திற்கு முன்னால் சில நிமிடங்கள் கும்பிட்ட வண்ணம் நின்ருர்.

வயிற்றைப் பசி கிள்ளவே நீராகாரம் அருந்திவிட்டு வெளியே வந்தார்,

''என்ன கனகராயா. வேளாண்மை எல்லாம் எப்படி இருக்கு?'' எனப்பேச்சை தொடங்கினுர் வையாபுரி.

''எல்லாம் நல்லா தான் இருக்குங்க. விஷயம் தெரியுமா? உங்களுக்கு''

''என்னடா சிங்காரம் எல்லாரும் பேசாம மௌனமா இருக்கீங்க. ஏதாவது அசம்பாவிதம் நடந்துட்டதா?''

''நம்ம பிள்ளையார் கோயில் இல்லே...''

''என்ன நடந்துச்சு. தேங்காய் திருடு போயிடுதா, திருடின ஆள் கூட எனக்கு தெரியுமே''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லே அங்கே ஒரு பிணம் கிடக்காம். அதைச் சொல்லத்தான் வந்திருக்கிருேம்.

''என்னது! என்னடா அக்கிரமம். கோயில்லே பிணமா? விவரமா சொல்லுங்கோடா''

''இன்னும் என்னத்தை விவரமா சொல்றது, இவ்வளவு தான் விஷயம்.''

யார்ரா பார்த்தது''

''நாங்கள் யாரும் பார்க்கல்லே; சுப்பினி பையன் சுப்புராயன் தான் சொன்னுன்.''

''அந்த பைத்தியம் தானே. சனியன் அல்ப விஷயத்திற்கே பொய் சொல்லுமே. அது சொன்னதை ஒரு பேச்சா எடுத்துக்கொண்டு நீங்களும் வந்தீங்களே...''

''இன்னுப்பா. எங்களெல்லாம் மடையன்னு நினைச்சிட்டு பேசிறீங்கோ...''

''கோபம்பொத்துகொண்டு வர்ரதே. நான் கேக்கிறேன்

ஒரு கேள்வி, அதுக்கு பதில் சொல்லிவிட்டு பேசுடா. நீ உன் கண்ணுலே பிணத்தை பார்த்தியா?''

சிங்காரம் பேசாமல்மௌன மாய் இருந்தான். அவன் மௌனம் இரண்டு அர்த்தங் கள் கொண்டது என்பது கனகராயனுக்குத் தெரியும், ஒரு அர்த்தம் தோல்வியை ஒப்புக் கொண்டேன் என்ப தும் மற்றொன்று சீறி எழப் போகிறான் என்பதாகும். கனகராயன் திண்ணையை விட்டு கீழிறங்கி வாயில் அடக்கிவைத்திருந்தவெற்றிலை புகையிலையை துப்பிவிட்டு, வையாபுரி அருகே உட்கார்ந் தான்.

'கோவிச் சக்காவாணும். சுப்புராயன் சொன்னது உண்மைதான்னு எனக்குப் படறது. பிணத்தைப்பார்த்து பயந்து போனதால் அவனுக்கு காலையிலிருந்தே காய்ச்சலாக் கிடக்கிறான். அவ ஆத்தா தெருவையே கலக்கிக் கொண்டிருக்கா. அவ பண்ற தைப்பார்த்தா ஊரிலேஇருக்க எல்லாருக்குமே காய்ச்சலைக் கொண்டுவந்து விடுவா போலிருக்கு. நாங்க போய்ப் பார்க்கிறோம். கோவில் சாவி யைத் தாங்க. அப்படி பிணம் இருந்தா என்ன செய்யவேண் டும்? அதைச் சொல்லுங்கோ?'

மனதில் அவர்கள் சொன் னது உண்மையென்று படவே உள்ளே போய் சாவியைக் கொண்டுவந்து அவர்களிடம் கொடுத்துவிட்டுச் சொன்னார். 'அப்படின்னா போய் கிராம முன்சீப்பைக் கையோடு கூட் டிக்கிட்டு வாங்க. அவரு வந் தால்தான் எல்லாமே நடக்க ணும். போலீசுக்கு அவன் தான் ஆள் அனுப்பனும்''

கனகராயனும் மற்றவர்க ளும் கோயிலுக்குப் போனார் கள். அந்தச் சின்னஞ்சிறு ஊரில் இருப்பதே ஒரே ஒரு கோவில். இதில்போய் அந்த அசம்பாவித நிகழ்ச்சி நடந்து விட்டதே என்று வருத்த மடைந்தான் கனகராயன். கோயில் என்னமோ சின்னக் கோயில்தான். கோயில் இருப் பது கூடத் தெரியாது. முதலில் கண்ணில் படுவது மதில்சுவர். கம்பிகளாலான வெளிக்கத வைத் திறந்துகொண்டு ஒரு இருபது அடி நடந்து மற்றொரு கதவைத் திறந்துகொண்டு போனபிறகுதான் பிள்ளையார் இருக்கும் கர்ப்பகிரகம். முன் பக்கம் நந்தியாவட்டை, பவழ

மல்லிகை சரக்கொன்றை இருக்கின்றன. பின்னல் ஒரு பெரிய தென்னந்தோப்பே இருக்கிறது, கோயிலுக்கு அதிலிருந்து தான் வருமானம். வெளி மதில்சுவர் கதவை ஒட்டினாற் போல் இருக்கும் சரக்கொன்றை மரத்தின் அடியில் பிணம் இருந்தது. அவர்களுக்கு அந்தப் பிணம் ஆச்சரியமூட்டியது, அதன் உடல் முழுவதும் சிவப்புத்துணி மூடியிருந்தது தான்.

சிவப்புத்துணி சாய வேட்டியாகவோ, சிவப்புப் புடவையாகவோ இருக்கலாம் என்பதால் அந்தப் பிணம் ஆணு பெண்ணு என்று கூற முடியவில்லை, அது பிணம் என்பதில் ஐயமே அல்லை. வலக்கால் கட்டை விரல் துணியின் கிழிந்த பாகத்திலிருந்து நன்ருகத் தெரிந்தது. ஆகையால் வெளிக்கதவைத் திறக்காமலே வந்த கோஷ்டி வையாபுரி வீட்டிற்கு திரும்பிற்று. வையாபுரியும் ஆவலாகக்காத்துக்கொண்டிருந்தார்.

'முன்சீப்பிற்கு ஆளை அனுப்ப வேண்டியதுதான்' கனகராயன் சொன்னான்.

முன்சீப்பு கொஞ்சத்தில் வந்து விடுவான என்ன? அவரிருக்கும் மணி மங்கலத்திறகு வெறும் மணலாக இருக்கும் ஒன்றரை பர்லாங்கு பாலாற்றைக்கடந்துஇலுப்பைத்தோப்பைத் தாண்டி, வேலமரங்கள் காடாய் வளர்ந்து சிடக்கும் ஊடே போகும் ஒற்றையடிப் பாதையில் காலில் முள் பொத்துக் கொள்ளாமல் மிக உன்னிப்பாகப் போகவேண்டும். திருவளவணூருக்கும்மணிமங்கலத்திற்கும் ஏழரை மைல் தேறும். ஆளைக் கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஆளைக் கண்டுபிடித்துக் கையோடு அழைத்துக்கொண்டு வறுவது என்ருல் ஒரு பெரிய ஆளைத் தான் அனுப்பவேண்டும். கடைசியாக எல்லோரும் சேர்ந்து ஒரு மனதாகக் கனகராயனையே முன்சீப்பிடம் அனுப்ப முடிவு செய்தார்கள்.

'கனகராயா நீ போனு தாண்டா அவனும் வருவான். இல்லாவிட்டால் ஏதாவது ஒரு சாக்குபோக்குச் சொல்லி விடுவான்" என வையாபுரியே சொன்னதும் கனகராயனுல் மறுத்துப்பேச முடியவில்லை, வெயிலும் விஷம்போல் ஏறிக்கொண்டு வந்தது, கூட்டம் கலையும் போது சுப்பராயன் அம்மா வாயிலும் வயிற்றிலும்

அடித்துக்கொண்டு அங்குவந்து சேர்ந்தாள்.

'சனியனே ஏன் இப்படி கத்தித் தொலைக்கிறே. சொல்லித் தொலையேன்." என்றாள். சிங்காரம், அவன் காலையிலிருந்து எதுவும் சாப்பிடாததினால் அடித்து விடுவதுபோல் கத்தினான். ஆனால் அவள் அழகு அதிகரித்ததே தவிர, எதிர்பார்த்தபடி குறையவில்லை. அவளை ஒரு வழியாக சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு வையாபுரி வீட்டிற்குள் நுழைந்தார்.

தன் வீட்டிலேயே சாவு ஏற்பட்டது போல் அவர் மனம் எண்ணி நிலை கொள்ளாமல் அலைகழிந்து கொண்டிருந்தது. எழுபது வயதாகும் வையாபுரியின் பாட்டனார் கட்டிய கோயில் அது. திருவளவனார் ஓர் ஆண்டிற்கு ஒருமுறையோ அல்லது நாலைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையோ இருகரையும் பாலாற்றில் நீர்ப்பெருக்கெடுத்து ஓடும்போது தான் அது ஒரு தீவுக்கிராமம் என்பது தெரியவரும், இந்த சிற்றூருக்கு வையாபுரியின் பாட்டனார் தன் பங்காளிகள் தன்னை ஏமாற்றித் துரோகம் செய்துவிட்ட பின்பு மனவருத்தத்துடன் குடியேறினார். அவர் தன் உழைப்பையும் நேர்மையையும் பாகமாகக் கிடைத்த கொஞ்ச பணத்தையும் கொண்டு பத்துகாணி நிலத்திற்குப் படிப்படியாக உடையவரானார். அந்த ஊருக்குப் புதியவனாக வந்து பெரிய மனிதனான கதை அவர் பாட்டனாருடைய வாழ்க்கை, அந்த ஊரில் முதல் முதலாக அவரால் வாங்க முடிந்தது ஒன்றரைக் காணி நிலம். அந்த ஒன்றரைக் காணி நிலத்தில் கால்காணி பயிர்செய்ய முடியாத மேடாகவும் புதராகவும் இருந்தது. அதை சீர்திருத்தின போது ஒரு பிள்ளையார் விக்கிரகம் கிடைத்தது. அந்த விக்கிரகம் கிடைத்ததிலிருந்துதான் அவர் வாழ்க்கையும் படிப்படியாக உயர்ந்ததாம். அந்த விக்ரகத்திற்கேஇந்தக்கோயிலை அவர் கட்டினார். வையாபுரி அந்தக் கோயிலின் பரம்பரை தர்மகர்த்தா. ஏதேதோ எண்ணிக்கொண்டு வையாபுரி சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தார்.

'கட்டையிலே போறவன் இங்கே வந்து செத்துத் தொலைஞ்சானே. இவன் யாருன்னு தெரிஞ்சுதா' எனச் சொல்லிக்கொண்டு திண்ணையில் உட்கார்ந்தான் வடிவேலு.

'ஏதாவது சமாச்சாரம் தெரிஞ்சுதுங்களா. செத்தானே

அவன் எந்த ஊரு? நம்ம ஊரா? அசலூரா?'

'தெரியலேயே வடிவேலு.'

'நம்ம ஊரானு இருக்க முடியாதுன்னு நினைக்கிறேன்.'

'அதெப்படி அடித்து நீ பேசறே. உனக்கு ஏதாவது தெரியுமா?'

'ஏன் உங்களுக்கு சந்தேகம் ஏதாவது இருக்கா?'

வையாபுரி ஒன்றும் பேசாமல் தலையசைக்கவே அங்கிருந்து எழுந்து கிளம்பி விட்டான், கீழ்க்கதவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் போது எதிரே மாரியப்பனைச் சந்தித்தான்.

'ஏண்டா வடிவேலு... உனக்கு விஷயம் தெரியுமா;?

'அங்கிருந்துதான் வர்ரேன்'

'யாரு? அடையாளம் கண்டு பிடிக்க முடிஞ்சுதா?'

'எங்கிருந்து வர்ரேன்னு உனக்கு நினைப்பு?'

'பிள்ளையார் கோயிலிலிருந்துதானே வர்ரே?'

'நீ எவண்டா? முதல்லே ஒரு சிட்டிகைப் பொடி தா' என்று பொடியை வாங்கிக் கண்ணில் நீர்வரும்படிஉறுஞ்சி விட்டுப் பேச்சைத் தொடர்ந்தான், 'நான் எங்கேடா அங்கே போனேன். வையாபுரி வூட்லே இருந்து நேரே வர்ரேன்.'

'கிழவன் என்னசொன்னுன்'' மாரியப்பனுக்கும் வையாபுரிக்கும் தண்ணீர் முறைத் தகராறினுல் நீண்டகாலமாகப் பகைமை இருந்து வந்தது. வையாபுரிக்கு ஏதாவது கெடுதல் நடக்குமா என்ற மகிழ்ச்சியில்தான் வடிவேலுவைத் துளைத்துக் கேட்டுக்கொண்டு இருந்தான். 'பெரியவரைக் கேட்டேன். செத்தவன் எவனுக இருக்கும்? நம்ம ஊர்க்காரனு? அசலூர்க்காரனு? அவருக்கு என்னகோபம்வருது. ...அதான் பேசாமல் கிளம்பி வந்துட்டேன்.'

'கோபம் வராமல் பின்ன என்னதான் செய்யும். போலீசு கிழவனைச் சும்மாவா விடும். ஆளைத் தொளைச்சில்லே எடுத்துடும்.'

'நீ யார்ரா அவசரக் குடுக்கையா இருக்கே. நான் சொல்லி முடிப்பதற்குள் நீ தொண தொணக்கற'

'சொல்லுடா சொல்லு'

'நான் கேட்டேனு இல்லையோ நம் ஊர்க்காரனு அச

லூர்க்காரனுன்னு. கிழவன் வாயைத் திறக்காமெ பேசாம இருந்தான். நானே சும்மா வுட்டுப் பார்த்தேன். அச லூர்க்காரனுதான் இருக்க னும்ன்னு. 'அதெப்படி நீ சொல்ல முடியும்ன்னு' கிழவன் என்மேல் எரிந்து விழுந்தான். எனக்கு ஒரு பலமான சந்தே கம்....' சொல்லிவிட்டுக் காறித்துப்பினுன்.

'என்ன சந்தேகம்?'

'உனக்குத் தெரியாது முரு கேசன் கதை. கிழவன் மூணு வது பிள்ளை அவன். அவனு தான் இருக்கும்ன்னு என் மன சிலே படுது.'

வையாபுரியின் மூன்ருவது பிள்ளை முருகேசன். அவனிடம் வையாபுரிக்குக் கொள்ளை ஆசை. முதலிரண்டு பையன் கள் உன்ஞர் பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்புகூடத் தேற வில்லை. முருகேசன் வெளியூர் போய்ப் பத்தாவது வரைப் படித்துத் தேறியும் விட்டான். பத்தாவது படித்து முடித்ததும் அவனுக்குக் குடியும் கூத்தி களின் அனுபவமும் வெகு குறுகிய காலத்திலேயேகிடைத் துவிட்டது, முதலில் வையாபுரி ஊரார் சொன்னதை நம்ப வில்லை. ஏதோ தன் பிள்ளை நன்ருகப் படித்துவிட்டான். என்ற பொருமையில் சொல்வ தாகத்தான் நினைத்தான். ஆனுல் ஒருநாள் நன்ருகக் குடித்துவிட்டு தன் இரண்டா வது அண்ணியைக் கைப் பிடித்து இழுத்ததைத் தன் கண்களாலேயே பார்த்த போதுதான் வையாபுரியின் மனம் உடைந்துவிட்டது. கோபத்தால் மிருகமாகிவிட்ட வையாபுரி முருகேசனை அடித்து வீட்டைவிட்டே துரத்தியும் விட்டான். அவன் ஓடிப்போய் எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன.

'ஆமாண்டா நீ சொன்னது தாண்டா உண்மையா இருக் கும் வடிவேலு, அதுவும் பாரு வடிவேலு. இந்த ஊரு ஒண்ணு இருக்கு என்பதே நம் மைத் தவிர யாருக்குத் தெரி யும். சரி அதைவிடு. ஊருக்குப் புதிசாவந்தா பிள்ளையார் கோயில் ஒண்ணு இருக்கா என்பது யாராவது சொன்னுத் தான் தெரியும். சரி அதை விடு. அங்கே போய் செத் தானே ஏன் அவன் தலையிலே யிருந்து கால்வரைக்கும் மூடிக் கணும்! இதிலிருந்து பார்த்தா நீ சொல்றதுதாண்டா சரி என்று படுது. அப்பன் மேலே பழி. வாங்கிக்கிண்டாண்டா பழி. ஊரிலே எவன்தாண்டா குடிக்கலே? கூத்திவூட்டுக்குத்

திருட்டுத்தனமா போகலே. அப்படியா அவனைப்போட்டு அடிக்கிறது.'

வடிவேலு மாரியப்பனிடருந்து விடைபெற்றுகொண்டு கவரத் தெருவிற்கு போகும்போது மாணிக்கம் வீட்டின் முற்றத்தில் ஆண்களும் பெண்களுமாகக் கூடி இருப்பதும், அழும் யாரையோ தேற்றிக் கொண்டிருப்பதும் காதில் விழவே அங்கே போனான். மாணிக்கம் மனைவி காமாட்சி அழுதுகொண்டிருந்தாள்.

'என்ன நடந்தது. ஏன் காமாட்சி அழறு?' என்று கேட்டதும் கூட்டத்தில் இருந்த மரகதம் சொன்னாள்.

'ஏம்பா வடிவேலு. பிள்ளை யார் கோயில்லே நடந்தது தெரியுமா?'

'அதுக்கு என்ன? இவ ஏன் அழறு'

'நேத்திராத்திரி மாணிக்கத்திற்கும் காமாட்சிக்கும் பெரிய சண்டை'

'சண்டை இல்லாதிருந்தா தானே ஆச்சரியப்படனும்'

'இந்தக் கிண்டலைஅப்பாலே வைச்சுக்கோ வடிவேலு' பொம்மனாட்டி அழறாளேன்னு மனசு இரங்கலையே'

'விஷயத்திற்கு வாயேன்.

நேத்தி சரியான சண்டை. அடியே உன் மூஞ்சிலே இனிமே நான் முழிப்பேனா பாரு. நான் செத்தாகூட உன் மூஞ்சிலேமுழிக்கமாட்டேன்டி' ன்னு கத்திவிட்டு வாசல்லே வந்தான். 'இப்படியெல்லாம் சொல்லக்கூடாதடா மாணிக்கம் என்னமோ... சமாதானம் படுத்தினதுக்குள்ளாரே போயிட்டாண்டா. அந்த பொணம்தான் இவனு இருக்குமோன்னு நினைச்சுதாண்டா காமாட்சி அழறு' மரகதம் விசிக்கத் தொடங்கினாள்.

'இது ஏதுடா வம்பு—மரகதம் நீ ஒண்ணும்பயப்படாதே. செத்தவன் அவனு இருக்க மாட்டான்.' என்று அவளைத் தேற்றிக் கொண்டிருக்கும் போது வண்ணாத்தி வந்தாள். வண்ணாத்தியைப் பார்த்தவுடன் வடிவேலு யாரும் பார்க்காதபடி கூட்டத்திலிருந்து நழுவி வந்து விட்டான்.

தன் வீட்டிற்கு திரும்பி விடுவதென்று தீர்மானமாக எண்ணிக்கொண்டு வேகமாக நடந்தான். தெருக் கோடியில் இருக்கிறது அவன் வீடு. அதற்குச் சில அடிகளுக்கு அப்பால்

சுமைதாங்கி ஒன்று இருக்கிறது. சுமைதாங்கிக்கு நிழல் தந்துகொண்டிருக்கின்றன பூவரசமரங்கள் மூன்று. அங்கே யாரோ பேசிக்கொண்டிருக்கவே ஒட்டுக் கேட்டான் வடிவேலு.

'நேத்து ஆத்திலே குளிச்சுண்டிருக்கும்போது ஒரு சாமி யாரு பய இந்த ஊரிலே இருக்கவங்க பெயரைசொல்லி 'அவங்க என்ன செய்யருங்க. எப்படி இருக்காங்க'ன்னு எது எதுவோ கேட்டாண்டா. இந்த ஊராதான் அவன் இருக்கணம்ன்னு எனக்குத் தோனித்து.'

'சரி, அதுக்கு இப்போ என்ன வந்தது. நெருப்பெட்டி இருக்கா கொடு...'

பீடிப்புகைக் காற்றில் மிதந்து வடிவேலு மூக்கைத் தாக்கவே, திணறலே சிரமப்பட்டு அடக்கிக்கொண்டான். அவர்கள் பேசுவது காதில் விழுந்தது.

'அவனுதான் இருக்குமோ பிள்ளையார் கோயில்லே செத்தவன்.'

'கிராமமே பிள்ளையார் கோயிலில் இருக்கும் பிணத்தைப் பற்றித்தான் பேசும் போல் தெரிகிறது, இன்றை முழுவதும்' என எண்ணிக் கொண்டு வீட்டிற்குள் வந்தான் வடிவேலு.

நாலாவது வீட்டு அலமேலு வந்தாள். அலமேலு வந்துவிட்டாள் என்றால் வடிவேலு மனைவி கற்பகத்திற்கு தன் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டது போல் ஆகிவிடும், இருபதாவது வயதிலே விதவையாகிவிட்ட அலமேலுவிடம் தனக்கு மணமாகாத முன்பே தன் கணவனுக்கு ஏற்படுத்திக்கொண்ட நெருங்கிய தொடர்பு இன்னும் நீடித்து இருக்கிறது என்பதை மற்றவர்கள் சொல்லி அறிந்து இருந்தாள் கற்பகம், அலமேலுவை உடனே வீட்டைவிட்டு அனுப்புவதிலேயே தான் கருத்தாக இருப்பாள். அவள் இருக்கும் போது ஏதோ ஒரு சாக்கு வைத்துக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக அவள் கண்களில் படும்படி போய் வருவான் வடிவேலு,

'என்ன சமாச்சாரம் அலமேலு' அவசர அவசரமாகக் கேட்டாள் கற்பகம்.

'உனக்குத் தெரியுமா? அக்கா?'

'இவளுக்கு நான் அக்காவாம். அக்காவாம் கெட்டுப் போன பன்னாடைக்கு...' என

எண்ணிக்கொண்டு 'வந்ததை சொல்லு, எனக்கு நிறைய வேலை இருக்கு,சட்டுபுட்டுன்னு சொல்லு' என்ருள் கற்பகம்.

கற்பகத்தின் உணர்ச்சியை யோ பேச்சையோ உணர்ந்தவ ளாகவோ காதில் வாங்கினவ ளாகவோ காணப்படவில்லை அலமேலு. அவள் நிதான மாகப் பேசினுள்.

'நேத்து ராத்திரி ஒரு பிச்சக் காரனுக்கு சோறு போட்டேன் அக்கா'

'நான் கூடத்தான் போட் டேன். இப்போ அதுக்கு என்ன?'

'சொல்றத்திற்குள்ளே அவ சரப் படறீயே அக்கா'

'நான்தான் முதல்லேயே சொன்னேனடி வேலை மலையத் தனை கிடக்குன்னு'

'எப்போதுதான் வேலை இல் லாமெ இருக்கு. பாவம் நீ இந்த வீட்டிக்கு வந்துமாளாத உழைப்பை தான் கண்டே. நானே அண்ணுத்தையைப் பார்த்து சொல்றேன். 'ஓடா போச்சே அண்ணி ஒரு வேலைக் காரியை ஏன்வைச்சுக்ககூடாது ன்னு. நானும் ஒத்தாசை செய்ய வந்தாவோ, 'வேண் டான்'னு சொல்றே'

'ஐயோ நீ அண்ணுத்தையும் பார்க்கவேண்டாம். பிச்சக் காரனை பத்தி பேசவந்த நீ ஏதோ பேச்சுக்கிளப்புறியே'

'பிள்ளையார் கோயில்லே பிணம் இருக்காமெ. அந்தப் பிச்சக்காரனுகத்தான் இருக் குமா?'

'ஊரிலே எவன் செத்தா நமக்கு என்னடி வந்தது. போயிட்டுவா அப்பாலே'

அலமேலுவைப் பார்க்க வடி வேலு திண்ணைக்குவந்து உட் கார்ந்துகொண்டான். வெளி யில் வந்த அலமேலு திரும்பிப் பார்த்து, கற்பகம் தன்னைபின் தொடராமல் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தவ ளாய் வடிவேலுவைப் பார்த்து புன்முறுவல் செய்துவிட்டுப் போய்விட்டாள்.

காளிமுத்துப் பூசாரி கையில் ஒரு கொத்து வேப்பலையும், வெள்ளிப்பூண் போட்ட மந்தி ரக் கோலுடன் போவது வடி வேலு பார்வையில் பட்டதும் 'எங்கே பூசாரி இந்த வேளை யிலே கிளம்பிவிட்டே' என் ருன். அடர்ந்து நரைத்துத் தொங்கிக்கொண் டிருக்கும் மீசையை ஒதுக்கிவிட்டுச் சொன்னுன் காளிமுத்து. 'சுப்புணி மகன் சுப்புராயன் கிருனே அவனுக்குக் காலையிலி

ருந்தே காய்ச்சலாம். தூக்கித் தூக்கிப் போடறதாம். அவங்க வீட்டுக்குத்தான் போறேன்'

'ஏதாவது காத்து சேட்டையாயிருக்கும்'

சுப்புணி வடிவேலுவுக்குத் தூரத்தில் உறவு. அதனால் காளிமுத்துவுடன் வடிவேலு போனான்.

நடுவீட்டில் சுப்புராயனைப் படுக்கவைத்திருந்தாள். பாயின் மேல் இரண்டு மூன்று பழைய புடவைகளைப்போட்டு மெத்தையாக்கி படுக்கவைத்திருந்தாள். அவன் நெற்றி முழுவதும் திருநீறு அப்பி இடப்பட்டு இருந்தது. சுப்பிணி இவர்களைப் பார்த்தவுடன் அழத் தொடங்கிவிட்டாள். அவள் அழத் தொடங்கியவுடன் அவனும் அழ ஆரம்பித்தான்.

'ஏன் இப்படி அழறே அக்கா. நீ பண்றதை பாத்தா பூசாரியே பயந்திடுவான் போலிருக்கே.'

மீசையை ஒதுக்கிவிட்டு 'ம். இதுக்கெல்லாம் பயந்துட்டா உலகத்திலே பின்ன என்ன தான் இருக்கு. போயி குத்து விளக்கை எடுத்தா, பெரிய திரியா போட்டு நிறைய எண்ணை ஊத்தி எடுத்தா. அப்பாலே ஊமத்தங்கா ஒண்ணும், ஆலமும் கரைச்சு எடுத்தா' என்றுதன் வேலைக்கு வேண்டிய சாமான்களைக் கொண்டுவரச் சொன்னான்

விழுந்த இறகு

எத்தனையோ காலமாய்
என்னைத் தூக்கிப் பறந்த
இறகு
இன்று வீழ்ந்து காற்றில்
பறக்குது

பழிக்குப் பழி

மெல்லத் தேய்த்தால்
சாகும் மூட்டையை
அழுத்தித் தேய்த்து
ஆத்திரம் தீர்த்தேன்

இடையீடு

நாதம் ஓய்கிறது
மீட்ட வா.
நரம்பின் அதிர்வு
தீர்வதன் முன்.

ஆகா !

எத்தனை நிறச் சோப்புகள்
அத்தனையும் வெண்நுரைகள்.

—சி. சத்தியமூர்த்தி

காளிமுத்து. விக்கல் அடிக்கடி வந்து சுப்புராயனைத் துக்கித் தூக்கிப் போடவும், இவர்களை மிரள மிரளப் பார்த்தான். சுப்பிணி சுப்பராயனை வழக்க மாகத் திட்டுவதைப் போல் திட்டிவிட்டு பின்கட்டிற்குப் போனாள்.

வேப்பலை அடித்துச் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டு சுப்பிணியிடம் 'ஒண்ணும் வராது' என்று சொல்லிவிட்டு காளிமுத்துவும் வடிவேலுவும் வெளியே வந்தார்கள்.

'அவன் பிணத்தினனே கேட்டீங்களா'

'அதைத்தான் நானும் உங்களை கேக்கனும்ன்னு இருந்தேன்' என்றான் வடிவேலு.

'ஏதோ பொணம் பொணம் கோயில்லே பொணம்ன்னு பிணத்தினனே, இவன்கூடப் பிள்ளையார் கோயில் பிணத்தைப் பார்த்தானா என்ன?

'இதுவே அரைப்பைத்தியம். இந்தப் பீடை ஏன் அங்கே போகனும்.'

'நீங்க என்னுங்க சொல்றீங்க. அவனா அரைப்பைத்தியம்? ஒகோன்னுசொன்னானும். தெரியுமா. அலமேலுவிடம்...'

அலமேலு என்ற பெயரை காளிமுத்து சொன்னதும் வடிவேலு ஆவலால் உந்தப்பட்டவனாய் 'அலமேலுக்கு என்ன வந்தது...' என்றான்.

'அவ நேத்து ஒரு மணிக்கு ஆத்துக்குப் போனதை என் வீட்டிலே இருந்துகிட்டுப் பார்த்தேன். அவ போன பிறகு சந்துவீடு ஏகாம்பரம் பின்னாலே போனான். கொஞ்ச நாழி கழிச்சு சுப்புராயன் போனா. இவன் போனதைப் பார்த்தா ஏகாம்பரத்தைத் தான் துரத்திக்கொண்டு போனமாதிரி பட்டது.'

'அப்புறம்'

'சத்தம் வந்துதேன்னு வெளியேபோய்ப் பார்த்தேன், 'உன்னைவெட்டி போட்டுடு வேண்டா. யாருன்னு நினைச்சிக்கிட்டு இருக்கே. அலமேலு யாருதுன்னு நினைப்பு உனக்கு சுப்புராயனை தடுக்கிறதற்குள்ளே இரண்டு பேரும் கட்டிப் புரண்டு சண்டைப்போட்டுக்கொண்டாங்க. இரண்டு பேருமே ஒருத்தனைக்கொருத்தன் நல்ல அடிச்சிக்கிட்டான்க. சுப்புராயன் கீழ் உதடு கிழிஞ்சுபோய் ரத்தம் வந்தது. 'அட ஏகாம்பரம் உன்னை நாளைக்குள்ளே வெட்டி போடலைன்னா நான் சுப்பிணி பிள்ளை சுப்பிராயன் இல்லேடா'

என்று சொல்லிக்கொண்டே போயிட்டான்'

'அலமேலு—;'

'அவ்விரண்டு பேர்களையும் பார்த்து சிரித்து விட்டுப் போயிட்டா'

'பாவம் அவ என்னசெய்வா காளிமுத்து. இந்த மடையன்கள் சண்டை போட்டுக்கிட்டா'

'அதுவும் சர்தான். நீ சொல்றதிலே நியாயம்இருக்கு. நான் இதை ஏன் சொல்றேன். அதை மறந்துவிடப் போகிறேன். 'கோயிலுக்கு விடிய காலையிலே போனனும் சுப்புராயன். அங்கே பயந்துபோய் ஓடிவந்து இப்படிப் படுத்துக் கொண்டானும்'ன்னு சுப்பிணி சொன்ன. இவன் நேத்து சொன்னதைச் செஞ்சிட்டான்னு எனக்கு ஒரு சந்தேகம். நானும் காலையிலிருந்தே பார்க்கிறேன். ஏகாம்பரத்தை என் கண்ணிலேபடவே இல்லை. நீ ஏகாம்பரத்தைப் பார்த்தாயா?'

'ஏகாம்பரம் என் கண்ணில் படலையே. அப்படின்ன ஏகாம்பரத்தை கொன்னுகோயில்லே வைச்சுட்டான்னு சொல்றியா காளிமுத்து.'

'ஐயையோ இப்படி பழி போடறீங்களே. நான் அப்படியாச் சொன்னேன். நான் கேக்கிறேன். சொல்லுங்கோ?'

நடந்து வந்துக்கொண்டிருந்த காளிமுத்து நின்றுவிட்டான். அவன் குரலில் கோபம் தொனிக்க மீசை துடித்தது. வடிவேலுவுக்குப் பயந்துவிட்டு அவன் கையைப்பிடித்துச் சமாதானப் படுத்தினன்.

'நீங்க ஏதாவதுசொல்லிட்டு என் கழுத்தை அறுத்திடப் போறீங்க' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு ஆற்றிற்குப் போகும் ஒத்தையடிப் பாதையில் போய் விட்டான் காளிமுத்து.

வையாபுரி வீட்டிற்கு வடிவேலு போகும்போது பகல் மணி மூன்று ஆகிவிட்டது. முன்சீப்பை அழைத்து வரப்

நடை வண்டி

நடை வண்டி ஒன்றை
குழந்தை ஓட்டுது
நாமும் சிரிக்கிறோம்
அந்த
நடை வண்டியைத் தான்
நாமே ஓட்டினல்
குழந்தை சிரிக்குமா ?

—வீனஸ்

போன கனகராயன் இன்னும் திரும்பிவரவில்லை என்று, சமார் அறுபது பேர்களுக்காவது பதில்சொல்லி அலுத்துப் போய்த் திண்ணைச் சுவரில் சாய்ந்து கண்ணை மூடிக்கிடந்தார் வையாபுரி. அவருடைய இரண்டாவது மருமகள் பத்தாவது தடவையாக 'ஊரிலே எவனே கொழுத்துப்போனவன் செத்துத் தொலைஞ்சா நீங்க ஏன் கொலைபட்டினி கிடக்கணும். ஏதாவது சாப்பிட வாங்க" என்றுச் சொல்லிவிட்டு உள்ளே போனுள்,

கூரை நிழல் எதிர்வீட்டு வாசலைத் தாண்டி உள்ளே போய்க்கொண்டிருந்தது. மணி ஆறு ஆகி விட்டது. கனகராயன் இன்னும் திரும்பிவரவில்லை. இரவு ஒன்பது ஆனது. ஆற்றை ஒட்டி இருக்கும் உயரமான மேட்டில் கனகராயன் வருகைக்காகக் கூடியிருந்தனர் ஊர்மக்கள். வெகு தூரத்தில் சின்னவிளக்கு வெளிச்சம் தெரிந்தது. அவர்கள் வருகிறார்கள் என்பது ஐந்து தெருக்களே கொண்ட அந்தக் கிராமம் முழுவதும் பரவி விட்டது. கூட்டம் அதிகரித்துக்கொண்டிருந்தது.

ஓர் அரிக்கேன் விளக்கைப் பிடித்துக்கொண்டு கனகராயன் முன்வர, அவனைப் பின்தொடர்ந்து முன்சீப்பும் இரண்டு போலீஸ்காரர்களும் வந்தார்கள். இரவு மணி பத்தாகி விடவே, முன்சிப்பு சட்புட்டென்று வேலையை முடித்துவிட வேண்டும் என்று சொல்லவே எல்லோரும் ஒன்றும் பேசாமல் எழுந்து கோயிலை நோக்கிப் போனுர்கள்.

வெளிமதில் சுவர் கதவைத் திறந்து அரிக்கன் விளக்கை மேலே தூக்கிப் பார்த்தபோன் அங்கே பிணம் இல்லை! இதுனும் நான்கு அரிக்கன் விளக்குகள் கொண்டுவரப் பட்டன. உள்ளே கூட்டமாக நெருங்கிப் போனுர்கள்.

விளக்குத் திரியை மேல் ஏற்றி நன்ருகப் பார்த்தார்கள். அங்கே பிணம் இல்லாததைக் கண்டவுடன் எல்லோர் மனதிலும் பயம் பெரிதாகிக் கொண்டிருந்தது. ★

ஜீனீ

ஹர்கோபிந்த் கொரானு
செத்ததும் சரிதானு ?
ஜீனீயை டெஸ்ட்யூபில்
உருவாக்கிஞராம்
ஆனுல்
அது
ஜீனியையாக
ஆகிடுமோ?

— வீனஸ்

சுயதரிசனம்

வல்லிக்கண்ணன்

என்னையே நான் எண்ணிப் பார்க்கிறேன். அடிக்கடி உலகத்தை வேடிக்கைப் பார்ப்பதையே வேலையாகவும் பொழுது போக்காகவும் கொண்டுவிட்ட எனக்கு அதுவும் சுவாரஸ்யமான ஒரு வேடிக்கை தான்.

எனக்காக ஒரு வாழ்க்கை முறையை நானே தேர்ந்து கொண்டு 'நமக்கு நாமே துணை" என்று நெஞ்சில் உரம் ஏற்றியவாறு நான் எனது பாதையில் நடக்கலானேன், முப்பது வருடங்களுக்கு முன்பு.

இன்றும் அதே வழியில், அதே இதய ஒலியோடு தளராது நடக்கிறேன்.

வழியில் வெற்றிகள், தோல்விகள், ஏமாற்றங்கள் வேதனைகள் எதிர்ப்பட்டிருக்கின்றன. அவற்றினால் எல்லாம் பாதிக்கப்பட்டு இந்த வாழ்க்கையை ஏன்தான் தேர்ந்தெடுத்தேனோ என்று ஒரு பொழுதும் நான் வருத்தம்கொண்டதே யில்லை. என் போக்கில் மாறுதல் காண வேண்டும் என்று நான் கருதியதும் இல்லை.

'ஆசை பற்றி அறையலுற்றேன்' என்று கம்பன், அன்று அவன் எழுத்தாளன் ஆகத் துணிந்ததற்குச் சொன்ன காரணம், இன்றும்—என்றும்—எழுதத் துணிகிற எவனுக்குமே பொருந்தும். மகத்தான படைப்பைப் பார்த்து, கவர்ச்சிக்கிற சாதா எழுத்துகளைப் பார்த்து தெரிந்தவர் எவரது எழுத்துக்களையாவது பார்த்துவிட்டு நாமும் எழுதினால் என்ன? நம்மாலும் இதை மாதிரி எல்லாம் எழுத முடியாதா? என்ற ஆசைத் தூண்டலின் பயனாகவே எல்லோரும் எழுத முற்படுகிறார்கள். பலர் வெற்றி பெறுகிறார்கள். உழைப்பும் ஊக்கமும் உற்சாகமும் உடையவர்கள் முன்னேறுகிறார்கள். ஆற்றலும் ஆர்வமும் தன்னம்பிக்கையும் தனி நோக்கும் பெற்றவர்கள் சிறப்பு அடைகிறார்கள்.

எழுத்துலகத்தில் வளர்ந்து ஓங்க விரும்புகிறவர்கள் தலைநகரான சென்னையில் இருக்க

வேண்டும் என்பது பொது வான நம்பிக்கை. ஆனலும் என் வளர்ச்சிக்கு வகை செய் தவை வெளியூர்களும் சிற்றூர் களுமே.

எழுதத் தொடங்கிய மூன்று வருடங்களுக்குப் பிறகு, பத்தி ரிகை உலக அனுபவம் பெறும் ஆசையோடு. புதுக் கோட்டை 'திருமகள்'மாசிகை யில் ஒரு மாதம், கோயமுத் தூர் 'சினிமாஉலகம்' மாதம் இரு முறையில் ஒன்பது மாதங் கள், சென்னை 'நவசக்தி' மாசி கையில் மூன்று மாதங்கள் பணியாற்றிவிட்டு காலத்தின் கண் சிமிட்டலுக்கும் கை வீச் சுக்கும் காத்திருந்த என்னை கவிஞர் திருலோக சீதாராம் திருச்சிக்கு 27 மைல்கள் அப் பால் உள்ள துறையூருக்கு அழைத்துப் போனர். அங்கி ருந்து தான் 'கிராம ஊழியன்' என்ற பெயரோடு மறுமலர்ச்சி இலக்கிய மாதம் இருமுறை வந்துகொண்டிருந்தது அந்தப் பத்திரிக்கைக்காக நான்கு வரு டங்கள் என் உழைப்பையும் காலத்தையும் ஈடுபடுத்தினேன் 1947ல் பத்திரிகை மறைந்தது. கவனிப்புக்குரிய ஒரு எழுத் தாளனக வளர்ந்திருந்த நான் சென்னை வந்து சேர்ந்தேன்...

சென்ற வருடம் ஒரு எழுத் தாளர் (வெளியூரிலிருந்து வந்தவர்) ஆச்சர்யமாகச் சொன்னர்' 'இவர் இருபது இருபத்திரண்டு வருஷமாக சென்னையிலேயே இருக்கிருர். சென்னை இவரை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில் லையே!' என்று.

'இவர் சென்னையை சரியா கப் பயன்படுத்திக் கொள்ள வில்லையே' என்று சொல்ல விரும்பித்தான் அவர்அப்படிப் பேசியிருக்க வேண்டும் என்று என் மனம் சிரித்தது.

நான் சென்னையில் இருந்தா லும், தென்கோடியில் ஒரு சிற் றூரில் இருந்தாலும் ஒரே மாதிரித்தான் இருப்பேன். பிறர் நோக்கில் உருப்படத் தெரியாதவனுக — உருப்பட முடியாதவன் ஆக!

ஐம்பதுகளில், நண்பர் ஜெயகாந்தன் சொல்வது உண்டு. 'இவர் பித்தகோரஸ் ஆக வாழ்கிருர். அந்த ஞானிக்கு நன்மை செய்ய விரும்பிய மன்னன் அவர் முன் வந்து நின்று நான் உமக்கு என்ன செய்யலாம் என்று கேட்டான். சற்றே விலகி நில் லும் பிள்ளாய், என் மேலே படுகிற வெயிலை மறைத்தபடி நிற்காதீர் என்று அவர் சொன் ஞர். அந்த டைப் நபர் வனு. கனு.'

ஓடும் காலம் என் போக்கில் மாறுதல் எதையும் செய்துவிடவில்லை.

'உங்களுக்குப் போதுமான பணம் கிடைக்க வழி செய்கிறேன். பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகங்களாக வைப்பதற்கு ஏற்ற புத்தகங்கள் எழுதித் தாருங்கள் என்று மாணவர்—நூல்—வெளியீட்டாளர் ஒருவர் சொன்னர் ஒருசந்தர்ப்பத்தில்,

'நான் உயிரோடு இருக்கப் போவதோ இன்னும் கொஞ்ச காலம்தான் அந்தக் காலம் முழுவதும் எனக்கே எனக்கு வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். என் இஷ்டம் போல் எதை எதையோ எழுதிக்கொண்டு, என் மனசுக்குப் பிடித்த புத்தகங்களைப் படித்துக்கொண்டு இருக்கவே நான் விரும்புகிறேன். அதில் நீங்கள் குறுக்கிடாமல் இருப்பதே எனக்குச் செய்த உதவியாகும். என்று அறிவித்தேன்-

ஆரம்ப நாட்களில் சாதாரண பத்திரிகையாளராக இருந்து சினிமா உலகத்தில் குறிப்பிடத் தகுந்த ஒரு புள்ளி ஆக வளர்ச்சிப் பெற்றுவிட்ட ஒரு நண்பருக்கு திடீரென்று என் ஞாபகம் வந்து என்னை அழைத்தார்; 'நான் உங்களுக்கு என்ன உதவி செய்யலாம்? என்று அக்கறையோடு விசாரித்தார்: 'எஜுகேஷனல் பப்ளிஷருக்கு அறிவித்த என் எண்ணத்தையே அந்த ஃபிலிம் புரட்யூஸர் - டைரக்டரிடமும் தெரிவித்தேன்:

'பிழைக்கத் தெரியாத பெரும் பித்து' என்று அனுதாபப் படுவது போல் அவர் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்படிப்பட்ட அனுதாப நோக்குகளும், அபிப்பிராய ஒலிபரப்புகளும் என் பாதையில், தேவையில்லாமல், அளவுக்கு அதிகமாகவே கிட்டுகின்றன.

தாடி

எப்படியோ தெரியவில்லை
எங்கள் வீட்டில்,
எலெக்ட்ரிக் பல்புக்கு,
தாடி வளர்ந்து விடுகிறது—
ஞாயிறு தவருமல்,
ஒட்டடைக் கோல் பிடித்து
நின்று
வழித்தால் தான்,
கண்ணை உறுத்தாமல்,
ஒரு வாரம் கழிகிறது—
எப்படியோ தெரியவில்லை.

—எஸ். வைதீஸ்வரன்

'உமது சுய சரிதம் சுவாரஸ்யமாக அமைய வேண்டும் என்பதற்காகவே, நீர் இப்படிப் பட்ட சந்தர்ப்பங்களை சிருஷ்டித்துக்கொண்டு வருகிறீர்!' என்று ஒரு நண்பர் கிண்டலாகக் குறிப்பிட்டார்,

எனக்குத் தெரியும்—என்னுடைய வரலாறுவர்ணமயமான பரபரப்பான, விறுவிறுப்பு மிகுந்த நிகழ்ச்சிகளையும் வளர்ச்சிகளையும் திருப்பங்களையும் கொண்டது அல்ல. அப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்பியதும் இல்லை; அவ்வாறு அமையவில்லையே என்று வருத்தப் படுவதுமில்லை,

'வ௱ கரு, நல்ல வழிகாட்டி ஆக மாட்டார்! என்று ஒரு பிரபல எழுத்தாளர் ஒரு சமயம் கூறினர்,

'வ௱ கரு,வின் பாதிப்புக்கு உள்ளாகிற இளைஞர்கள் அனுதாபத்துக்கு உரியவர்கள், அவர் பாதிப்புக்கு ஒரு சிலர் ஆளாகக் கூடும் அதைத் தவிர்க்க முடியாது. அப்படி ஆகிறவர்கள் பாடுதான் சிரமம்! இப்படி இன்னொரு பிரபல எழுத்தாளர் வேருெரு சந்தர்ப்பத்தில் சொன்னர்,

எனக்குப் பின்னல் ஒரு கூட்டம் தொடர வேண்டும் என்ருே, எனக்கு முன்னல் என் பொன்மொழிகளைக் கேட்க ஒரு கும்பல் குழுமியிருக்க வேண்டும் என்ருே நான் எண்ணுவதுமில்லை; எதிர்ப்பார்ப்பதும் இல்லை.

உலகத்தை, மனிதர்களை வேடிக்கையாகப் பார்த்து எனக்கு ரசமானவையாகத் தோன்றுகிறவற்றை என் மனம்போன போக்கில் எழுதி வைக்கிறேன். அவை மற்றவர்களுக்குப் பிடிக்குமா, பிடிக்காதா என்று நான் கவலைப்படுவதேயில்லை. மற்றவர்களுக்கு அவர்களையே உணர்த்துவதற்காகவோ, அல்லது என்னை மற்றவர்களுக்குப் புரியவைக்க வேண்டும் என்ருே, அல்லது சிறுமைகளையும் சீரழிவுகளையும் எழுத்து மூலம் அகற்றி விடலாம் என்ருே, உயர்வைப்

பசி

பசியென்றது குழந்தை
பாலூட்டினுள்
பசியென்ருன் புருஷன்
பக்கலில் வந்து படுத்தாள்
பசியென்ருள் பாட்டி
பழையதைக் கொண்டு போட்
டாள்,
பசியென்றது ஆன்மா
போ போ என்று விரட்டினுள்.

—வீனஸ்

புகுத்தி மண்ணிலே விண்ண கத்தை நிலைநாட்டலாம் என்றோ, அல்லது மக்களுக்கு நம்பிக்கை ஊட்டிவிட இய லும் என்றோ, -இப்படிப்பட்ட உயர் நோக்கங்கள் உள்ளே இருந்துகொண்டு உந்துவத னாலோ நான் எழுதவில்லை, எழுதுவது எனக்குப் பிடித் திருக்கிறது! அதுவே என் விளையாட்டு, வாழ்க்கை எல் லாம். படிப்பது எனக்குப் பொழுதுபோக்கு, அனுபவ வேட்டை.

என்னை யார்—எவன் என்று மற்றவர்கள் தெரிந்துகொள்ள வழி இல்லாமல், ஊரை, உல கத்தை, மனித ஜாதியை "வேடிக்கையுறக் கண்டு" மகிழ்வதற்கு நெருக்கடியும் பரபரப்பும், அவசரமும் நாக ரிக அநாரிகங்களும் மண்டிச் சுழல்கிற சென்னை மாநகரம் வழி செய்தால் என் வாழ்வின் பெரும்பகுதியை அந்நகரத் திலே கழிப்பது எனக்குப் பிடித்திருக்கிறது.

மற்றபடி விழாக்கள், விருந் துகள், விசேஷ நிகழ்ச்சிகள், சிறப்புக் கூட்டங்கள் மகாநாடு கள் வகையரா என்னை கவர்ந் திழுப்பதில்லை. அவை எதி லும் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி இருப்பதன் மூலமே என்னின் 'நான்'ஐ என்றும் நான் காப்பாற்றி வருகிறேன்.

பொதுவாக மனிதர்கள் பிர மாதப்படுத்துகிற சடங்குகள் விசேடங்கள், விழாக்கள் வகையராவில் எனக்கு விருப்பு இல்லை. அவை எனக்கு மகிழ்ச்சி தருவதுமில்லை. மர ணத்துக்குப் பிறகு கூட மனி தர்கள் உயிரற்ற உடலுக்கு செய்கிற அர்த்தமற்ற, தேவை யற்ற சடங்குகள் பலவும் எனக் குப் பிடிக்கவில்லை. முடியுமா னால் என் மரணத்துக்குப்பிறகு எனது உடல் இம் மனிதர்க ளின் சடங்குகளுக்குள் சிக்கா மல் முன்னதாகவே கவனித் துக் கொள்வது என்னின் 'நான்'ஐ நான் பூர்ணமாகக் காப்பாற்றுவதாக அமையும்.

ஆம்புரூஸ் பீயர்ஸ் என்று ஒரு எழுத்தாளன். பூத பிரேத பைசாசங்கள் பற்றிய கதைக ளையே நிறைய எழுதினான். சரியான ஜனத்துவேஷி. [மிஸான்· திரபிஸ்ட்) அவன் எப்படிச் செத்தான் என்றே தெரியவில்லை. ஒரு காட்டி னுள் போனான். திரும்பிவரவே யில்லை. அவனது உடலும் அகப்படவில்லை. எழுத்தில் அவன் உறவாடிய பூத பைசா சங்களின் தாயாதிகள் அவனை 'அலக்காக' தூக்கிச்சென்றிருக் கும் என்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். இப்படி அவன் வரலாறு கூறுகிறது.

இண்டலெக்ட்ஸ்

ஆசிரியர், இலக்கியக் கர்த்தாவாக ஆக முடியாதது போல, இந்தியாவின் பண்டைய தத்துவ நூல்களை விளக்கிக் கூறுவதோடு அமைகின்ற யாருமே தத்துவஞர்கள் (Philosophers) என்ற அந்தஸ்தைப் பெற முடியாது.

இத்தகைய ஒரு சிந்தனைச் சோகை இந்தியாவைப்பாதித்திருப்பது உண்மையில் வியக்கவும் வருந்தவும் வேண்டிய நிலையாகும். மனித அறிவின் தலை சிறந்த சுய வெளிப்பாடாகிய (Self-expressi0n) தத்துவ ஆராய்ச்சி இந்தியாவையும் மேலை நாடுகளையும் தவிர உலகின் வேறு எந்தப் பகுதியிலும் சிறப்பாக வளரவில்லை என்றுதான் எண்ணுகிறேன். கவிதையும் கற்பனையும், தத்துவமும் ஆராய்ச்சியும் இரண்டறக் கலந்த ரிக் வேதத்தில் தொடங்கி, வல்லபர், ஜீல கோஸ்வாமி, பலதேவர் ஆகியோருடைய முயற்சிகளோடு 14, 15-ம் நூற்றுண்டுகளில் முடிந்து விடுகின்ற இந்தியாவின் தத்துவப் பாரம்பரியம், மறுமலர்ச்சி யுகம் என்று பெருமையோடு பேசப்படுகின்ற 19, 20-ம் நூற்றுண்டுகளிலும் கூடப் புத்துயிர் பெருதது மட்டுமல்ல, அதன் அவசியத்தைக்கூட இந்திய அறிஞர்கள் உணராமற் போனதன் காரணம்தான் என்ன? உண்மையில், இந்திய மறுமலர்ச்சியின் சாதனைகள் பெருமையோடு பேசப்படுகின்றனவே அன்றி, அதன் போதாமைகள் கவனிக்கப்படவில்லை.

இலக்கியம் போன்ற சில துறைகளில் தவிர இந்திய மறு மலர்ச்சி, நோக்கிலும் போக்கிலும், பழைமையைபுதுப்பிக்கும்முயற்சியாகத்தான் அமைந்திருக்கிறது. எல்லா மறுமலர்ச்சிஇயக்கங்களுமே ஓரளவுக்கு இம்முறையில்தான் அமைகின்றன; இவ்வாறுதான் அமைய முடியும் என்றுகூடச் சொல்லலாம். பெருமைமிகுந்த கடந்த காலத்தோடு சீர்கெட்ட நிகழ்காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான், ஏதாவது ஒன்றைச் செய்தே ஆகவேண்டும் என்ற ஆர்வம் மனித மனத்தை ஆட்கொண்டு அதன் ஆற்றலைத் தூண்டி விடுகிறது. 14, 15, 16-ம்

நூற்றாண்டுகளில் தொடங்கி இன்று மனிதனைச் சந்திர மண்டலத்தில் கொண்டு சேர்த்திருக்கும் ஐரோப்பியப் பேராற்றலின் மறுமலர்ச்சி கூட ஆரம்ப காலத்தில் பழைமையைப் போற்றிப் புதுப்பிக்கும் (Revival of classical Learning) வகையில் அமைந்தது இங்கு குறிப்பிடத் தக்கது. ஐரோப்பிய மறுமலர்ச்சியில் இந்தப் புதிப்பிப்பு (Revivalism) காலத்தால் முதலிடம் பெற்றது என்றாலும், அதுவே அந்த மறுமலர்ச்சி இயக்கத்தின் முழுதுமாகவும் இறுதிப் பயனாகவும் அமைந்துவிடவில்லை.

உண்மையில் புதுப்பித்தல் என்பது, காப்பி அடிப்பதன் கேவலமல்லாத கௌரவமான ஒரு நிலைதான். இது மறுமலர்ச்சியின் தொடக்கமாக அமையலாமே அன்றி, இறுதி லட்சியமாக அமைய கூடாது. இந்தப் புதுப்பிப்பு முயற்சி, மிக உயர்ந்து சென்றால், பழம் கோட்பாடுகளை எடுத்துச் சாரம் திரட்டி மெருகேற்றித் தரும் தொகுப்பு முறையாக (Eclecticism) அமையக் கூடும். ஆனால் இதே முயற்சி சுயநலமிகளின் வசப்படும் பொழுது, பண்டைய கருத்துக்களையே தம்முடையவை என்றும் பறைசாற்றிக் கொள்ளும் கருத்துச் சோரமாகத் (Plagiarism) தாழ்ந்து போகவும் கூடும். நம்முடைய மறுமலர்ச்சி என்பது, அன்று மலர்ந்திருந்து இடைக்காலத்தில் தொய்வுற்று நலிவுபட்ட நம்முடைய ஆற்றலின் மறுமலர்ச்சியே அன்றி, நம்முடைய ஞாபக சக்தியை இட்டு நிறப்பிக் கொள்வதல்ல. நாம் சரியாகவோ, தவறாகவோ மறந்துவிட்ட நம்முடைய முன்னோர்களின் பெருமைகளை நினைவுபடுத்திக் கொள்வதாலோ, நியாயமாகவோ, அநியாயமாகவோ நாம் புகழத் தவறிய அவர்களது சாதனைகளை இன்று புகழ்ந்து கொண்டிருப்பதால் மட்டுமோ நம்முடைய மறுமலர்ச்சி நிறைவுபெற்றுவிட முடியாது. மறுமலர்ச்சி என்பது நம்முடைய படைப்புச் சிந்தனையின் (Creative Thought) சாதனைகளே அன்றி நம்முடைய ஞாபக சக்தியின் கடமை உணர்ச்சி அல்ல.

உண்மையில் சிந்தனை என்பதே படைப்புச் சிந்தனை தான். (creative Thought) "படைப்புச் சிந்தனை" என்று சொல்வதுகூட மிகையான ஒரு சொற்றொடரே. ஆனால் மனித மனத்தின் இயல்பினால்

தவிர்க்க முடியாமல் தோன்றும் நினைப்புக்கள் (the thinking process) அத்தனைகளுமே சிந்தனைகளாக உருவாவதில்லை. ''நினைப்பு'' ''சிந்தனை'' ஆகிய இரண்டுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் குழம்பியும் குழப்பியும் விடுகிறோம். சிந்தனைத் துறையைப் பொருத்தவரை புதுப்பிப்பு முயற்சிகள், உண்மையில் நினைவுபடுத்திக் கொள்ளும் ''நினைப்புக்களே'' அன்றி ''சிந்தனைகள்'' அல்ல. இந்தக் குழப்பத்தைத் தவிர்க்கத்தான், உண்மையான சிந்தனையைப் படைப்புச் சிந்தனை என்று அடைமொழியிட்டுச் சொல்ல வேண்டி இருக்கிறது

இந்நிலையில் படைப்புச் சிந்தனை என்பது என்ன, படைப்புச் சிந்தனையாளன் (Creative Thinker) யார் என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. தத்துவத் துறையைப் பொருத்தவரை, பழைய கொள்கைகளைப் புதுமுறையில் சொல்வதால் மட்டுமே ஒருவர் படைப்புத்திறம்பெற்ற தத்துவஞராக உயர முடியாது, தத்துவத் துறையில் ஒரு புதுக் கொள்கையை, ஒரு புதிய நோக்கை- இது வரை காட்டப்படாத ஒரு புதிய கோட்பாட்டை—புதிய பாரம்பரியத்தின் தொடக்கமாகவோ, அல்லது நேற்றுவரை வாழ்ந்து வளர்ந்து வந்த ஒரு பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக வேனும்—உருவாக்கித் தருவதால் மட்டுமே படைப்புச் சிந்தனையாளர் என்ற அந்தஸ்தை ஒரு அறிஞர் பெற முடியும்.

இந்த அடிப்படையில்தான் பிளேட்டோ ஒரு தத்துவச் சிந்தனையாளராக அங்கீகரிக்கப்படுகிறார். தன்னுடைய ஆசிரியராகிய சாக்ரடீஸினல் வழங்கப்பட்டுப் பெருமையடைந்த தத்துவ எண்ணங்களைப் பிரதிபலித்ததற்காக அல்லாமல், அவற்றின் அடிப்படையில் (பாரம்பரியத்தில்) தொடங்கினுலும் அவற்றிலிருந்து வேறுபட்டுத்தன் சிந்தனையில் சுயமாக்க தோன்றிய தத்துவ எண்ணங்களை எடுத்து வழங்கிய படைப்பாற்றலுக்காகத்தான் பிளேட்டோ இந்த அந்தஸ்தைப் பெற்றுப் பெருமையடைந்தார். அவரது முயற்சியால் கிரேக்கத் தத்துவப் பாரம்பரியம் மேலும் வளர்ச்சி அடைந்தது. சிந்தனைத் துறையில் தனக்கென ஒரு நிகரற்ற நிரந்தர

மான இடத்தைப் பற்றிக் கொண்டு விட்டவர் அரிஸ்டாடில் சாக்ரடீஸின் கொள்கைகளைவிடப் புதுமையும் மழுமையும் வாய்ந்த பிளேட்டோவின் கருத்துக்களை அப்படியே ஏற்றுக் கொண்டு அரிஸ்டாடில் நமக்கும் வழங்கி இருப்பாரானல் அவரது பெயரை இன்று நாம் அறியக்கூட மாட்டோம். பிளேட்டோவின் ஒளியில் கலந்து கரைந்து, மங்கி மறைந்திருப்பார் அரிஸ்டாடில். இதே அடிப்படையில் தான் இந்தியாவைச் சேர்ந்த சங்கரரும், நாகார்ஜுனரும், பிறரும் தத்துவஞர்களாகக் கருதப்படுகிருர்கள். முறைகளிலோ முடிவுகளிலோ ஒரிஜினலிடி இல்லாத யாருமே எந்தத் துறையிலும் படைப்பாளர்களாக உயர முடியாது.

பழைய தத்துவநூல்களில் காணப்படும் கருத்துக்களை எடுத்து காலத்துக்கு உகந்தவாறு அவற்றுக்குப் புது மெருகு கொடுத்து கவர்ச்சிகரமான கருத்துக் கலவைகளை (eclectic doctrines) உருவாக்குகின்ற இன்றைய இந்திய அறிஞர்களைப் படிப்பாளிகள் எனறும் பண்டிதர்கள் என்றும் பாராட்டலாமே அன்றி, படைப்பாளிகள் என்று போற்றமுடியாது. படிப்பாளி வேறு; படைப்பாளி வேறு; ஒரு படிப்பாளியைப் படைப்பாளி என்று பாராட்டுகின்ற அதே மயக்கம் தான் ஒரு படைப்பாளியை பெரிய படிப்பாளியாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணச் செய்கிறது. உண்மையில் படிப்பாளிகளும் பண்டிதர்களும் அளவுக்கும் தேவைக்கும் அதிகமாகவே இன்றைய இந்தியாவை மொய்த்துக் கொண்டிருக்கிருர்கள். கிராமஃபோன் ரிகார்டோ டேப் ரிகார்டோ பாடகராக முடியாது. போலவே, முன்னேர்களின் சாதனைகளையே உருப்போட்டுக் கொண்டிருக்கும் இந்தப் பண்டிதர்களும் படிப்பாளிகளும் சிந்தனையாளர்களாக ஆக முடியவில்லை.

இந்திய மறுமலர்ச்சியின் சாதனை, தத்துவத்துறையைப் பொருத்தவரை வெறும் பண்டிதர்களை உருவாக்குவதோடு நின்று விட்டது. மனித அறிவின் எல்லைகளைப் பெரிதாக்குவதிலோ மனித மனத்தின் சிந்தனைப் பரப்பை விரிவாக்குவதிலோ இன்றைய இந்தியா குறிப்பிடத்தக்க பங்கு பெறவில்லையென்பது தேசபக்தர்களுக்கே கசப்பாக இருந்தாலும் மறுக்க முடியாத உண்மையாக நம்முன் விசுவரூப

மெடுத்து நிற்கிறது. விஞ்ஞானத் துறையில் பெயர்பெற்ற சர். சி. வி. ராமன், நர்லிகர் கொராளு போன்றவர்களையும் கலை இலக்கியத் துறைகளில் ஒரு சில மேதைகளையும் தவிர்த்துப் பார்த்தால்—பொதுவாகச் சிந்தனைத் துறையிலும் குறிப்பாகத் தத்துவத் துறையிலும் இன்றைய இந்தியா எதைச் சாதித்திருக்கிறது? இன்றைய இந்தியாவின் அறிஞர்களில் எத்தனைப்பேர் படைப்புச் சிந்தனையாளர்களாகப் பின் வரும் தலைமுறையினரின் நினைவில் இடம்பெறப் போகிறார்கள்? தற்கால ஐரோப்பா உலகுக்களித்த ஒரு காண்டைப் (Immanuel Kant) போன்றோ, ஒரு ரஸ்ஸலைப் போன்றோ, பண்டைய இந்தியா உருவாக்கிய சங்கரரைப் போன்றோ, ஸ்ரீஹர்ஷரைப் போன்றோ, ஒரு படைப்புச் சிந்தனையாளரை வழங்கி இருப்பதாக இன்றைய இந்தியா பெருமைப் பட்டுக் கொள்ள முடியுமா? இல்லை; என்றால் காரணம் என்ன? சற்று ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளாக 'மறுபடியும் மலர்ந்து வரும்" இந்தியப் பாரம்பரியத்தின் சாதனைகள் அனைத்தையும் திரட்டிவைத்து பார்த்தாலும் இந்த 'இல்லை" என்ற விடைதான் நமக்குக் கிடைக்கவேண்டும் என்றால், இந்த இன்மைக்குக் காரணம் தான் என்ன?

இன்றைய இந்தியாவின் சிந்தனைப் போக்கை இரு பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்க முடிகிறது—ஒன்று உள்நோக்குச் சிந்தனை (Motivated Thinking) மற்றொன்று உடன்பாட்டுச் சிந்தனை (Thinking for a Compromise) வலிந்து புகுத்திய வாதங்களின் மூலம் பண்டைய கொள்கைகளை வலியுறுத்தி நிலைநாட்டும் முயற்சியே உள்நோக்குச் சிந்தனையின் வெளிப்பாடாக (expression) அமைகிறது. சிந்திக்கத் தொடங்குவதற்கு முன்பே மரபுகளின் அடிப்படையில் சில முடிவுகளை ஏற்றுக் கொண்டு அவற்றை நிறுவுவதற்காக வாதங்களை உருவாக்கும் இந்த முயற்சி—ஆங்கிலத்தில் சொல்வதைப் போல் குதிரைக்கு முன்வண்டியை இணைக்கும் இந்த முயற்சி—படைப்புச் சிந்தனையாக வளராததில் வியப்பொன்றுமில்லை. முன்பே உள்ள எந்த ஒரு சிந்தனை முறையையோ முடிவையோ அப்படியே ஏற்றுக்கொள்ளாத சுதந்திரப் போக்குத்தான் படைப்புச் சிந்தனையின் அடிப்படை. ஆனால் உள்நோக்குச்

சிந்தனையோ, வழிமுறையாகப் பெற்ற மத நம்பிக்கைகள் ஏற்படுத்தியுள்ள அறிவுத்தளை களின் குறுகிய எல்லைக்குள்ளே தான் இயங்குகிறது. பண்டைய நூல்களுக்கு விரிவுரை களாக மட்டுமே அமைகின்ற இந்த உள்நோக்குச் சிந்தனை யின் விளைவாக, அரைத்த மாவையேத் திரும்பத் திரும்ப அரைக்கும் உரையாசிரியப் பான்மை இன்றைய இந்தியா வின் அறிவியல் முயற்சிகளின் மீது தூசியாயும் பாசியாயும் படிந்துவிட்டது. சமீபகாலத் தில் பகவத் கீதைக்கு மட்டுமே எத்தனை மொழிபெயர்ப்புக ளும், விரிவுரைகளும், விளக்க

நூல்களும் வெளிவந்திருக்கின் றன! 'கர்மா', 'ஆத்மா', 'தர்மம்', 'ஆன்மீகம்' போன்ற ஒரு சில துறைகளைப் பற்றி மட்டுமே சிந்தித்து இவற்றை பற்றி நிலவி வருகின்ற பண்டைய கருத்துக்களையே திரும் பத் திரும்ப நிறுவிக்கொண்டி ருப்பதென (exigetical-execrcises) இந்தியாவின்

இன்றைய அறிஞர்கள் ஒரு சாரார் முடிவுகட்டி விட்டதா கத் தோன்றுகிறது! சுய விம ரிசனத் துணிவற்ற இந்த நோக்கு, காலப்போக்கில் படிந்து பழக்கமாகிவிட்ட படி யால், இதுதிசைதிரும்புவதோ, அன்றி இதனைத் திசை திருப்பு வதோ கடினமாகத் தோன்று கிறது

இன்றைய அறிஞருள் மற் றொரு சாரார் சிந்தனை உடன் பாடுகளை உருவாக்குவதில் முனைந்திருக்கிறார்கள். பண்டைய சமய—தத்துவக் கொள் கைகளையும் அவற்றுக்கு முரண் பட்டு அவற்றை மறுப்பனவா கத் தோன்றும் தற்கால விஞ் ஞானக் கண்டுபிடிப்புகளையும் இணைத்து, அவற்றுக்கிடையே பாலம் அமைப்பதே இவர்க ளது குறிக்கோள். விஞ்ஞான ஈடுபாட்டின் மிகுதியால் ஓர ளவு சமயத்தைப் புறக்கணிப்ப தாகவோ அல்லது சமய ஈடு பாட்டின் மிகுதியால் ஓரளவு விஞ்ஞானத்தைப் புறக்கணிப் பதாகவோ உருவாகின்ற இந் தக் கொள்கை உடன்பாடுகள் உண்மையில் கொள்கை முரண்பாடுகளை மறைக்கும் திரைகளாகவே அமைகின்றன. சராசரி மக்களின் மன நிம்ம திக்கு இந்த 'உடன் பாடுகள்' அவசியம் என்று கொண்டா லும், உடன்பாடு காணுவதே படைப்புத் திறனாகாது என் பதைச் சிந்தனையாளர்கள் மறந்துவிடக் கூடாது.

சத்தியத்தை நோக்கிச் செல் லும் சிந்தனைப் பாதையில்,

உள்நோக்கும்(Motive) உடன்பாடும் (Compromise) நம்மைத் திசை மாறிப் போகச் செய்யும் கவர்ச்சிகரமான அபாயங்கள். ஐயப்பாடுகளில் சிக்குண்டு தவிக்கின்ற சராசரி மனிதனின் மனம், சரியாகவோ தவருகவோ, ஏதோ ஒன்றை உண்மை என்று நம்புவதால், நிம்மதி அடையலாம். அப்படி ஒரு நம்பிக்கையை உருவாக்கிக் கொள்வதற்கு உள்நோக்கும் உடன்பாடும் பெரிதும் பயன்படலாம். ஆனல் ஒரு சிந்தனையாளனின் லட்சியம் உண்மையே அன்றி, நிம்மதியோ அமைதியோ அல்ல. உண்மை ஒன்றையே லட்சியமாகக் கொண்டு, சிந்தனை மரபுகளாகிய தளைகளைத் தகர்த்தெறிந்துக் கட்டுப்பாடின்றிச் சுயாமகவும் சுதந்திரமாகவும் இயங்கும் மனித மனம்தான், சிந்தனைத் துறையில் புதுமையான படைப்பு முயற்சிகளுக்குஅடித்தளமாக அமைய முடியும்.

(அடுத்த இதழில் முடியும்)

ஜன்னல்

ஆடும் இலைகளினல்,
ஆடா மலர் தெரியக் கண்
டேன்

ஓடிப் பறிக்க
ஒரு விருப்பம்—தவறில்லை.
இருந்தும்,
இடையில் பண்பென
விறைத்த

ஜன்னலைக் கண்டதும்,
திரும்பி வந்த மனம்
தலைகீழாய்
பேப்பர் படிக்கிறது.

—எஸ். வைதீஸ்வரன்

அனுபவம் - வெளிப்பாடு

நவீன ஓவியம்—6

சாமிநாதன்

ரஃபேல், உங்களுக்குப் புரிகிறதாக நினைக்கும் சித்திரங்களில், மனித உருவங்களின் உருவத்தை மனித உருவங்களாக நினைக்காமல், வெறும் உருவங்களாகவே எண்ணி தன் ஓவிய முறையை ஸ்தாபித்தான். உங்களுக்கு உருவம் (forms) என்பது (identity of things familiar) (தெரிந்த பழக்கமான உருவத் தெளிவு, ஒப்பு நோக்கல்) ஆகும். ஆனல் ரஃபேலுக்கு உருவங்கள், அவை எதனுடையதாக இருந்தபோதிலும், எதனுடையஉருவங்கள் என்ற காரணத்தால் உருவங்கள் என்ற தகுதி பெறவில்லை. உருவங்கள் என்ற காரணத்தாலேயே உருவங்களாகவே தகுதி பெற்றனவாகி விடுகின்றன. இவ்வுருவங்களில், நீங்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் உருவங்களின் குணங்கள் சில உள்ளன என்பதும், ஆதலால் நீங்கள் ஒப்பு நோக்கி இனம் காண்கிறீர்கள் என்பதும், அவனுடைய கலை நோக்கிற்கு, ஓவிய முறைக்கு சம்பந்தமில்லாதவை. அவன்தன் நினைப்பில் கொள்ளாதவை. இப்போதைக்கு இந்தக் குறிப்போடு நிறுத்திக் கொள்கிறேன். இதன் தர்க்க ரீதியான பின்விளைவுகளை, வளர்ச்சிகளை, cubism, abstract art இவற்றில் பின்னர் பார்க்கலாம்.

உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஏன் இப்படி என்று? உங்கள் தெரிவிற்காக (information) தெளிவிற்காகச் சொல்கிறேன், கியோத்தோ. பியரோடெல்லா, ஃப்ரான்ஸெஸ்கா, ராஃபேல் எல்லோரும் வெறும் கோடு கிழிக்கத் தெரிந்தவர்கள் அல்ல; உயர் கணிதம், மனித உடற்கூறு போன்ற பலதுறைகளில் வல்லுநர்கள். எவ்வளவு துறைகளில் உங்களுக்கு பரிச்சயம், அறிவு, ஞானம் (இந்தப் படிகளின் வரிசையில், ஏற்றத்தில்) இருக்கின்ற

னவோ அவ்வளவுக்கு உங்கள் உலகம் ஆழமானது. விரிவானது. உக்கிரம் நிறைந்தது. இவைபற்றியெல்லாம் அறிவது விவரங்களின் பட்டியல் என்றோ, பல்கலைக் கழக பட்டங்களின் எண்ணிக்கைப் பெருக்கம் என்றோ நினைத்தீர்களானால், உங்களுக்காக நான் பரிதாபப்படுகிறேன். All these widen the area, and deepan the intensity of your exploration into one unknown reality. You should not sit judgement on others when what you know of is only the familiarity with Gopulu's lines in arts, and some concoctions of story telling in literature and you get kicks of music only from the scintillations of P, Susheela's crooning exercise. you must eqiup yourself first, To equip yourself, you must have first the required sensibility and a humality with which you have to approach. Or else you are just a NO BODY. இந்த ஓவியர்களெல்லாம் ஏதோ சிறப்பாக தொண்டு (ஒரு அர்த்தமில்லாத அபத்தமான வார்த்தை இது] செய்திருப்பதாக நமக்குப் பழக்கமாகியிருக்கிறதே அதை மாத்திரம் சொல்வது உண்மையாகாது. நமது அநுபவத்தின் ஆழத்தை, எல்லைகளை; நமது அறிவின் எல்லைகளை ஓவியத் துறைக்கும் அப்பால் சென்று விஸ்தரித்திருக்கிறார்கள்.

ரெம்ப்ராண்ட்டை எடுத்துக் கொள்வோமே, ரெம்ப்ராண்ட் வாழ்ந்த காலம் பதினேழாம் நூற்றாண்டு. இதற்கு முன்னால் சிறிது பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த El Greco வைப் பற்றிச் சொல்ல வேண்டும். El Creco வின் Viwe of the city of Toled. என்ற சித்திரத்தை ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்வோம். El Greco ஸ்பானிய மனிதர். ஸ்பெய்ன் உங்களுக்குத் தெரியும். மத்திய தரைக்கடல் பகுதியைச் சேர்ந்தது, சூரிய வெளிச்சத்திற்குக் குறைவில்லை. ஆனால் El Greco வேண்டுமென்றே டொலெடோ நகரத்தை, இடியும் மழையும் கருமேகங்களும் சூழ்ந்த ஒரு நகரமாக, இருளும், கோரமும் பயங்கரமும் சூழ்ந்த நகரமாக ஆக்கியிருக்கிறான். சிறு சிறு குன்றுகள், நகரம் சூழ்ந்துள்ள காடுகள் எல்லாம் இந்தப் பார்வைக்கு ஏற்ப, அவை உள்ள இடத்திலிருந்து இடம்

பெயர்த்து மாற்றப்பட்டுள்ளன. மேலும் ஓவியம் பூராவும் dark-greyish green-ல் தீட்டப்பட்டுள்ளது. ஏன்? பிக்காஸோவின் கோர்னிகா (Guernica) வைப் போல இது El Greco-வின் Protest. அடுத்தடுத்து ரோமானியர்களால், மூர்களால், யூதர்களால் இப்படியாக அடுத்தடுத்து பலர் படையெடுப்பு, ஆதிக்கம், இவற்றிற்காளான ஸ்பெயின், அதன் மத்தியில் இருக்கும் என்றும் சூரிய ஒளியில் ஸ்பஷ்டமாகத் துவங்கும், எழில் குலுங்கும் ஒரு Swinging City யான டொலெடோ எல் கிரேகோவுக்கு அழிவின், நாசத்தின் சின்னமாக சித்திரமாகத் தோன்றுகிறது. இந்தச் சித்திரம் an aerial veiw from alhelicopter-ஓ அல்லது Spanish Tourist Information Service-ன் துண்டு பிரசுர சுவரொட்டியோ அல்ல. A protest from a conscientions Objector, an interpretation of the city's character a dramatization of a tragic historic condition. இந்த interpretation (விளக்கம்) dramatization (நாடகப் படுத்துதல்) இவற்றை அடுத்து வரும் ரெம்ப்ராண்டில் பார்க்கும்போது ஒரு புதிய பரிமாணத்தைப் (a new dimension) ஒரு புதிய பரிணாமத்தைப் (a new evolution) பெறுகிறது. ரெம்ப்ராண்டிற்கு மனித உருவங்கள் முக்கியமில்லை. விவரங்களையெல்லாம் நிழல்களில் மறைத்து விடுகிறான். ரெம்ப்ராண்ட் முயன்றது, ஒரு குணச்சித்திரத்தின் ஆழ்ந்த ஆராய்வு, அதன் விளக்கம், ஒரு காட்சியின் நாடகப் பண்பின் வெளிப்பாடு. இந்த குறிக்கோள்களுக்கு எவையெல்லாம் தேவையில்லையோ அவற்றையெல்லாம் ஒதுக்கி விடுவான். எஞ்சியது முகபாவங்கள் மாத்திரம். தீட்டப்பட்ட சித்திரம் ஒரு தனி மனிதனானால், மாறாக அது ஒரு காட்சியானால், மனிதக் கூட்டமானால் a tension in the placement of figures, in the suggested gestrures of limits in hunt attention to details. எந்த இடம், எந்த பாவம், எந்த அங்க சலனம் அவனது குறிக்கோளான நாடகப் படுத்துதலுக்கும் குணச்சித்திர விளக்கத்திற்கும் தேவைப்படுகிறதோ அவை மட்டும் பிரகாசமாக ஒளி பெற்று அவற்றிற்கிசைவான நிறங்களில் தோற்றமளிக்கும். மற்றவை இருளில் மறைந்து விடும். இது தத்ருபம் அல்ல.

distortion of reality. இயற்கையின் மாற்றம். இயற்கை வெட்டப்பட்டு, தேவையானவை தேர்ந்தெடுக்கப்பட்டு தையல் வேலை செய்யப்பட்டுள்ளது. இந்த தேர்வில், தையல் வேலையில், நாம் நேரில் காணும்போது பார்க்கும் பல பொருட்கள் சித்திரத்தில் ஒதுக்கப்படுகின்றன. வெட்டப்பட்டு விடுகின்றன. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்டு தீட்டப்பட்ட பொருட்களும், இயற்கையில் உள்ளதற்கு மாருக, ஆனல் ரெம்ப்ராண்டின் பார்வைக்கு இசைவாக, அதீதமாக அளிக்கப்படுகின்றன (over presented), நாடகப் படுத்தப்பட்டுள்ளன. உக்கிரப் படுத்தப்பட்டுள்ளன.

இது நடந்தது பதினேழாம் நூற்ருண்டில், ஹாலண்டில். ஆனல் இன்றைக்கும்கூட, இந்த 1969 நவம்பரில், நமது நாடகங்களில், சினிமா ஸ்டுடியோக்களில் ஒளிப்பதிவுகளை நிர்ணயிப்பவன், குமாரிகமலா தன் நாட்டியத்தை ஆரம்பிக்குமுன் தன் குருவின் முன் சென்று முதலில் வணங்குவது போல; ரெம்ப்ராண்டை மனத்தில் நினைத்துக் கொண்டு வடமேற்கு திசை பார்த்து ஒரு முறை பூராவாக, ஸ்பஷ்டமாக, ''சுக்கிலாம் பரதரம் விஷ்ணம்'' சொல்லிவிட்டுத்தான் விளக்குகளின் பக்கம் போக வேண்டும். அது அவன் தன் குருவுக்குச் செலுத்தும் மரியாதை.

தத்ரூபம், தத்ரூபம் என்று கோஷமிடுகிறீர்கள்ள, அந்தத் தத்ரூபம் எளி ஒன்று இருப்பதாகவே வைத்துக் கொள்வோம் இப்போதைக்கு. அது எப்படி உங்களுக்குத் தெரிய வந்தது? ஒளியில், சூரிய ஒளியில் பொருட்களை எப்படிக் காண்கிறீர்கள்? சூரிய ஒளியில்தானே எதையும் பார்க்கிறீர்கள். பல நிறங்களின் பகுதிகளாக அல்லவா? நிறப்பட்டைகளாக, நிறத்துணுக்குகளாக, அல்லவா? ஆனல் என் அனுபவம் மூன்று பரிமாணங்கள் கொண்டதாயிற்றே என்கிறீர்கள். சரி அது எப்படி தெரிய வந்தது? இரண்டு பரிமாணங்களிலிருந்து அகன்று செல்லும் மூன்ருவது பரிமாணம் முன்னதிலும் பார்க்க சிறிது மங்கலாக இருண்ட நிறமாக இருப்பதால்தானே. ஆகவே அதுவும் நிறம்தானே? ஆகவே எல்லாமே பல வேறுபட்ட நிறங்களின் தொகுப்பு தான். பல வேறுபட்ட நிறப்பட்டைகளின் தொடர்ச்சிதான். நீங்கள் படித்துக் கொண்டிருக்

கும் "வேங்கையின் மைந்த னை''ச் சற்றுக் கீழே வைத்து விட்டு கொஞ்சம் ஆழ்ந்து பாருங்கள். உங்கள் சௌகர் யத்திற்கு, டெல்லியின் பனிக் கால காலை நேரத்தில், அல் லது மாலை நேரத்தில் அல்லது எப்போதாவது மழை பெய்து ஒய்ந்து சூர்ய ஒளிக் கதிர்கள் திரும்பக் காணும் நேரத்தில் பாருங்கள், நிமிஷத்திற்கு நிமிஷம் நிறம் மாறுவதைக் காணலாம். கவர்ச்சி அற்ற, சலிப்புத் தரும் தோற்றம் கொண்ட கற்பனை வறட்சி யில் விளைந்த அகோரங்களான இந்த அரசாங்க வீடுகள் எல் லாம் திடீரென ஒரு தேவ உலகமாக மாறியிருப்பதைக் காணலாம். இதற்கு மேல் இன்னும் ஒன்று, Law of Optics நீங்கள் காணும் பொருட்கள் நீங்கள் காணும் அவற்றின் நிலை, சூரிய ஒளிக் கதிர்கள் உங்கள் கண்களின் retina வைத் தாக்குவதைப் பொருத்தது. பின்னும் அவை உங்கள் மனப் பிம்பத்தில் பதி வுறில் ஒரு செகண்ட் அதிகம் நேரம் தங்குகின்றன. ஆகவே நீங்கள் ஏதோ நினைக்கிறீர் களே உங்கள் காட்சி அனுப வத்தின் நிரந்தரம் என்று, அது உண்மையில் நிலைபெற்ற காட்சிகளின் தொடர்ச்சி. (a series of stills. Stills made up of fleeting impression) சினிமாவின் ஓட் டததைப்போல இதுவும் ஒரு பிரமை; ஒன்றையொன்று தொடரும் தனித்தனி காட் சிப் பதிவுகளை இடைவிடாத பிரவாஹம் என்று நினைக்கி றோம். பின்னும் இந்தக் காட் சிப் பதிவுகளோ வெறும் நிற விஸ்தாரங்கள் (colour areas) வெறும் நிறப்பட்டைத் தொகுதிகள் (a collection of patches of colours),

Delawnay (டிலானே) என்ற பிரெஞ்சு சைத்ரீகனைப் பற்றிச் சொல்லும்போது Apollinaire (அபோலினேர்) சொல்கிறுன். "I love the art of today because I love light above all else. For, man, who invented fire, lores light above all else,"

Law of Optics புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டு வெகு வாகச் சர்ச்சிக்கப்பட்ட காலத்தில் அபாலினேர் போன்ற இலக்கிய கர்த்தாக் கள்; Delawnay (டெலானே) Renoir (ரென்வார்), Degas (டெகாஸ்), Manet (மானே) போன்ற ஓவியர்களும் வெகு வாகப் பாதிக்கப்பட்டார்கள், இந்தக் கண்டு பிடிப்பால். சூரிய ஒளியில் ஒரு வைக்

கோற் போரின் நிறமாற்றங்களைத் தொடர்ந்து 16—17 சித்திரங்கள் இடைவிடாது வரைந்து தீர்த்தாலும் ரென்வார். இவர்களுக்கு பொருட்களும் மனித உருவங்களும் பொருட்களும் அல்ற— மனித உருவங்களும் அல்ல. வெறும் நிற விஸ்தாரங்கள். தோன்றி மறையும் மனப் பதிவுகள், அவர்கள் வரையும் பார்வைக் கோணங்கள். மனிதர்களின் நடமாட்ட நிலைகள் எல்லாம் புதியனவாக இருக்கும். இது பெரும் புரட்சி. என் பார்வையில் எனக்கு வலதுகோடி மூலையில் இருக்கும் நண்பர் என் நேர்பார்வையில் எக்கோணத்தில்தென்படுகிருரோ அக்கோணத்தில் அம்மனப் பதிவை சித்திரமாக வரைவது சம்பிரதாயம் இல்லை. நேரானப் பார்வைதான், சம்பிரதாயம். நாடக மேடை உடை மாற்று அறையில், நாட்டிய வகுப்புகளில் அசம்பாவிதமான உடை உடுத்தி நிற்கும் நிலையில் அல்லது கால் தூக்கி நிற்கும் நிலையில் ஒரு கண காட்சிப் பதிவு சித்திரமாகத் தீட்டப்படுவது சம்பிரதாயமல்ல. ஆனால் இவற்றையெல்லாம் மனப்பதிவுக்காக ஓவியர்கள் செய்தார்கள் மேலும் நம் காட்சி அனுபவத்தில் திட்டவட்டமான கோடுகள் கிடையாது: வெறும் நிற விஸ்தாரங்கள்தான். ஏதும் பகுக்கப்பட்ட கோடு கிழித்து பிரிக்கப்பட்ட பகுதிகள் கிடையாது, நம் அனுபவத்தில் அதேபோல இவர்களின் சித்திரங்களில் ஒன்றில் ஒன்று ஆரம்பம் முடிவு தெரியாதவாறு நிறங்கள் ஒன்றினை ஒன்று கலந்து இணைந்தவையாக இருக்கும். ஒரு கண நேரத்தில் நம் மனத்தில் தோன்றி மறையும் மனப் பதிவுக் காட்சிகளில் விவர நுணுக்கங்கள் இராது. அது போல இச்சித்திரங்களிலும் விவர நுணுக்கங்கள் இராது. எல்லாமே வழித்து, மங்கலாக்கப்பட்டவையாக இருக்கும்.

ரென்வாரின் 'குளிக்கும் பெண்' என்ற ஓவியத்தில் நாம் காண்பது ஒரு நிர்வாணப் பெண்ணை மட்டுமல்ல, அது ரென்வாரின் உத்தேசமும் இல்லை. ரென்வார் சித்திரம் தீட்டியது, குளிப்பவளின் ஆப்பிள் சிவப்பு நிறமும் சூரிய ஒளியில் அவள் உடலின் மேல் பொட்டுப் பொட்டாக ஒளிரும் நீர்ச் சொட்டுகளும் தங்க நிறத்தில் பளீரிடும் அவள் உரோமங்களின் பளபளப்பும்தான். வெறும் நிர்

[தொடரும்)

‘வானமுதம்’

விண்ணலே மூலம் இன்னமுதகீதங்கள் !

புதன்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய இரு நாட்களிலும்
மாலே 6-45 முதல் 7-00 மணி வரை

இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பு

மூலம்

சென்னே கிறிஸ்தவக் கலே-தொடர்பு நிலேயம்

தயாரித்தளிக்கிறது :

கேளுங்கள் ! தேனினுமினிய கிறிஸ்தவ கீதங்கள் !
எழுதுங்கள் ! உங்கள் கருத்தினே எங்களுக்கு எழுதுங்கள்

மற்றும்

19 மீட்டர் மூலம்

அனுதினமும் மாலே 7-00 மணி முதல் 7-30 வரை
ஆங்கிலமும் மாலே 7-30 மணி முதல்
7-55 வரை தமிழ்

வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

உள்ளத்தைக் கொள்ளே கொள்ளும் இனிய கீதங்கள் !
சிந்தனேயைத் தூண்டிவிடும் சீரிய கருத்துரைகள் !
எழுத்தோவியர்கள் தரும் சிறப்புமிகு நாடகங்கள் !
நேயர் விருப்பம் ! பேட்டிகள் ! அறிவுப்போட்டிகள் !
அத்தனேயும் உங்களுக்காகத்தினமும் ஒலிபரப்பப்படுகின்றன.

மற்றும்

கிறிஸ்தவக் கலே-தொடர்பு நிலேயம்

ஏராளமான பொருட்செலவில்,
பிரம்மாண்டமான முறையில்

தயாரித்துள்ள

“நான் பெற்ற இன்பம்”

நாட்டிய நாடகம்

ஒருமணி நேரத்திற்கென கிறிஸ்தவ கீதங்களுக்கான நடனங்கள், இன்னிசை நிகழ்ச்சி, ஆங்கில இசை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்

முகவரி :

இயக்குநர் :

கிறிஸ்தவக் கலே-தொடர்பு நிலேயம்

3 எல்டாம்ஸ் சாலே சென்னே-18

Reg. No. M - 113

K. C. A. D. CHIDAMBARA NADAR & CO.

RAILWAY FEEDER ROAD

SATTUR

Distributors :

★ Esso Standard Eastern Inc., Madras

★ Shaw wallace & Company Ltd. Madras

★ Standard Paper Industries Corpn., Madras

Branches :

SIVAKASI . KOILPATTI . MADRAS . COCHIN

Published by T. S. Manivannan, Sakthi-Illam, Madras-36
Printed by S. V. Natarajan, at the United Printers,
No. 3/27, Broadway, Madras-1. Editor : JAYAKANTHAN
Cover printed at Jeevan Press, Madras-5